
சித்திரத்
திருப்பாவை
பி.ஸ்ரீ
திருப்பதி வெளியீடு



# சித்திரத் திருப்பாவை


1978

*Published by :*

TIRUMALA - TIRUPATI DEVASTHANAMS,
**TIRUPATI.**

*All Rights with*
*Tirumala - Tirupati Devasthanams.*

*Printed at :*
T. T. D. Press, Tirupati.

**Price: Rs. 8-25**

T4340



SRI VENKATESWARA SWAMI

NOV 1973

# ஸ்ரீ:

# கோதை தமிழ் சுடர்க்கொடியிலே பூத்த முப்பது ஜோதி மலர்களால் ஆகிய ஓர் இசைத்தமிழ்ப் பூங்கொத்து



# பாவை பெற்ற பரிசு

ஆண்டாளையும் திருப்பாவையையும் அறியாதார் தென்னிந்தியாவில் இல்லையென்றே சொல்லலாம். தவங்கிடந்து மன மாசு போக்கி யோகத்தால் ஆத்ம ஸ்வரூபம் கைவந்திருக்கும் முனிவர்களைக் காட்டிலும் 'மயர்வற மதிநலம்' அருளப் பெற்று எம்பெருமானையே தஞ்சமென் றிருக்கும் ஆழ்வார்களின் ஞானம் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்தது என்பது ஸ்ரீ வைஷ்ணவர் கொள்கை. ஆழ்வார்களின் பிரபந்தங்களை ஓதி ஓதி இந்த ஞான தீபத்தை வழிகாட்டியாகக் கொண்டே ஸம்ஸ்கிருத வேதாந்த ரகசியங்களைத் தெளிவுபடுத்திக்கொண்டதாக ஸ்ரீ வேங்கடநாதன் என்ற வேதாந்த தேசிகரும் கூறியுள்ளார்.

'ஸம்ஸாரத்திலே உறங்குகிறவர்களை எழுப்பி எம்பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள்; இவள் (ஆண்டாள்) தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தாள். ஆகையாலே அவர்களிலும் இவள் விலக்ஷணை' என்பர் ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை. 'புருஷன் புருஷனைக்கண்டு ஸ்நேகிப்பதிலுங் காட்டில் ஸ்த்ரீ புருஷனைக் கண்டு ஸ்நேகிக்கை பள்ளமடையாகையாலே, ஆழ்வார்களிற் காட்டில் எம்பெருமான் பக்கல் பரமபக்தியுடையளான ஆண்டாள்' என்றும் குறிப்பிட்டு வியாக்கியான சக்ரவர்த்தி இவளது ஒப்பற்ற பக்திப் பெருங் காதலை வற்புறுத்தியுள்ளார்.

ஆண்டாளைக் குழந்தையாகப் பெரியாழ்வார் கண்டெடுத்ததும் கோதை என்று பெயரிட்டு வளர்த்து வந்ததாகக் குருபரம்பரை வரலாறுகள் கூறுகின்றன. தமிழில் 'கோதை' என்ற சொல்லுக்கு 'மாலை' என்று பொருள். மாலைபோல் இனியவளாய் இருந்ததுபற்றி இப்பெயர் இடப்பெற்றதென்பர்.

இச்சொல்லை ஸம்ஸ்கிருத மொழியாகவே கொண்டு 'வாக்கைக் கொடுப்பவள்' என்று பொருள் கூறுவோரும் உண்டு. பகவானுக்குப் பாமாலை பாடிக் கொடுத்ததை நினைத்துக் கொண்டு 'கோதா' என்னும் பெயருக்கு இப்படி உட்பொருள் கூறுகிறார்கள். வேறு பொருள்களும் கூறுவதுண்டு.

ஸ்ரீ வேதாந்த மகாதேசிகன், கோதாஸ்துதி என்ற தமது ஸம்ஸ்கிருத நூலில் முதல் சுலோகத்திலேயே கோதையைப் 'பெரியாழ்வாரது வம்சமாகிய நந்தவனத்துக்குக் கற்பகக் கொடி போன்றவள்' என்றும், 'பொறுமையே உருவெடுத்து வந்தாற் போன்றவள்' என்றும், 'கருணையின் மிகுதியால் மற்றொரு அலர் மேல் மங்கை ஒத்தவள்' என்றும் போற்றுகிறார்.

கண்ணபிரான் தொடர்பினால் 'தூய பெருநீர் யமுனை' தூய்மையும் பெருமையும் பெற்றிருப்பதுபோல், அதே தொடர் பினால் கோதை வாக்கும் சிறப்புற்றிருக்கிறது என்றும், இவள் அருளிய பிரபந்தங்களை முறையாக ஓதி 'அளைந்து ஆடுவோர்' மிக்க இனிமை வாய்ந்த வாக்கையுடைய கவிகளாவரென்றும், கோதாஸ்துதியின் நான்காவது சுலோகம் குறிப்பிடுகின்றது.

இத்தகைய கோதாதேவி எம்பெருமானுக்குச் சூடிக் கொடுத்த மாலைகள் பல; பாடிக் கொடுத்த மாலைகள் இரண்டு. இப்பாமாலைகளில் முதலாவது பிரபந்தம் திருப்பாவை; 'தமிழ் வேதம்' என்ற திவ்யப் பிரபந்தங்களில் முதலாயிரத்தைச் சேர்ந்தது.

கோதையை ஆண்டாள் என்றும், சூடிக்கொடுத்த சுடர்கொடி என்றும் போற்றுவது போல் திருப்பாவை பாடிய செல்வி என்றும் சிறப்பித்துப் பேசுவதுண்டு. ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின் வளர்ப்புத் தாயாகிய ஸ்ரீ ராமாநுஜர், தம்மைத் 'திருப்பாவைச் சீயர்' என்று அனைவரும் சிறப்பித்துப் பேசுமாறு இந்தப் பிர பந்தத்தில் ஈடுபட்டிருந்தாரென்றால், இத்திருப்பாவையின் பெருமை கொஞ்சமோ? அப்பெரியார் 'உந்துமத களிற்றன்' என்ற திருப்பாவைப் பதினெட்டாம் பாட்டை விசேஷித்து உகந்ததாகப் பெரியவாச்சான் பிள்ளை கூறியுள்ளார்.

கூரேசனின் அருமைத் திருக்குமாரரான பட்டர், திருப் பாவையில் உபநிஷத் ரகசியங்களான பரம தத்துவார்த்தங்கள் உண்டென்று மோகித்திருப்பர். இவர் ஸ்ரீரங்கநாதனைப் பிரிய நேர்ந்த துயரத்தால் கலங்கியிருந்தபோது, இவரது பிரிய சிஷ்ய ரான நஞ்சீயர் இவருள்ளத்தை மகிழ்விக்க வேண்டுமென்று,

'ஆண்டாளைப்பற்றி ஒரு சுலோகமும், ஆழ்வார்களைக்குறித்து ஒரு சுலோகமும் இயற்றி யருளலாகாதோ?' என்று கேட்டார். அப்போது பட்டர் மிகவும் பிரீதியுடன் 'நீளாதுங்க' என்று தொடங்கும் தனியனை அருளிச்செய்து ஆண்டாளைச் சரண மடைந்து ஆறுதல் பெற்றாராம்.

இத்தகைய திருப்பாவைப் பிரபந்தத்தை வைஷ்ணவர்கள் மார்கழி மாதத்திலே உதய காலத்தில் நீராடி ஓதுகிறார்கள்; ஆராதனைகள் நடத்துகிறார்கள். நாளொன்றுக்கு ஒரு பாசுர மாகத் திருப்பாவை முப்பதும் பக்தர்கள் மார்கழி மாத முழுதும் ஓதுகிறார்கள். ஆண்பாலர் பெண்பாலர் அனைவரும் சமயாசார மாக இந்த வழக்கத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இது பெண் களால் பெரிதும் அனுஷ்டிக்கப்படுகிறது.

'திருப்பாவை'க்குப் பல வியாக்கியானங்கள் உண்டு. இந்த வியாக்கியானங்கள் மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளன. இவற்றில் ஆறு வியாக்கியானங்கள் அச்சிடப் பெற்றுள்ளன. மிகவும் பிரசித்தமாக வழங்குவன பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த மூவாயிரப்படியும் (பிள்ளை லோகாசாரியரின் தம்பி யாரான) அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த ஆறாயிரப்படியும், (வடகலை ஸம்பிரதாயத்தைச் சார்ந்த) பெரிய பரகாலஸ்வாமி வியாக்யானமும், சுத்தஸ்த்வம் தொட்ட யாசார்யரும், வானமாமலைச் சீயரும் அருளிச்செய்த ஸ்வாபதேச வியாக்கியானங்களும் ஆகும்' என்பர் ஸ்ரீ. வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியர்.

ஸ்ரீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய ஸ்வாமி, ஈராயிரப்படி மூவாயிரப்படி என்று வழங்கி வருகிற வியாக்கியானங் களும் தென்கலை ஸம்பிரதாய நெறியைச் சார்ந்தவையென்று குறிப்பிட்டு, ஆயிரப்படி ஐயாயிரப்படி என்ற வேறு இரண்டு வியாக்கியானங்கள் உண்டென்று தாம் கேள்விப்பட்டிருப்பதா கவும் தெரிவிக்கிறார்.

வடகலை ஸம்பிரதாயத்தைச் சார்ந்த ஸ்ரீ ரங்கராமாநுஜ ஜீயர் திருப்பாவைக்கு ஸம்ஸ்கிருத வியாக்கியானமாகவே ஒன்று

இயற்றியுள்ளார். ரங்கநாத ஸ்வாமி இயற்றிய மணிப் பிரவாள வியாக்கியானமும் வடகலை ஸம்பிரதாயத்தைச் சார்ந்தது.

முன்னோர் இயற்றிய உரைகளைத் தழுவி மேலும் சில விசேஷ அர்த்தங்கள், ரஸோக்திகள் முதலியவற்றையும் சேர்த்து ஸ்ரீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் திருப்பாவைக்கு ஒரு புதிய உரை எழுதியுள்ளார். திருப்பாவையின் பொருளை ஸம்ஸ்கிருதப் பயிற்சி இல்லாதவர்களும் உணர்வதற்கு இப்பெரியாரின் இப்புதிய உரை பயன்படும் என்பதில் ஐயமில்லை. முன்னோர் இயற்றிய உரைகளை ஆராய்வோருக்கும் இந்த உரை ஒரு நல்ல வழிகாட்டியாகும்.

'திருப்பாவை' போன்ற பிரபந்தங்கள் பாவைப்பாட்டு என வழங்கப்பட்டன. மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய **'திருவெம் பாவை'**யும் 'பாவைப்பாட்டு' வகையைச் சார்ந்ததே. ஜைனர்களின் 'திருவெம்பாவை'யும் அச்சிடப்பட்டிருக்கிறது. ஜைனர்களின் அருகக் கடவுளையோ, பௌத்தர்களின் புத்த பகவானையோ, **'அறிவன்'** என்று குறிப்பிட்டுப் பாடியிருக்கும் ஒரு பழைய பாவைப்பாட்டு வழங்கி வந்தது என்பதற்கும் ஆதாரம் கிடைக்கிறது. பிற்காலத்தில் தத்துவராய சுவாமிகள் அத்வைத பரமாக இயற்றிய பாவைப் பாடல்களும் உண்டு.

## மார்கழி நோன்பு

'மார்கழி நீராட என்று ஒரு வியாஜத்தைக் கொண்டு, நோன்பு என்று ஒரு வியாஜத்தாலே' எம்பெருமானுக்கு ஆட் செய்வதே பரம புருஷார்த்தம் என்பதைத் திருப்பாவைக்குக் கருத்தாக அருளிச் செய்வர் பெரியவாச்சான்பிள்ளை. இந்த நோன்பைப் 'பாவை நோன்பு' என்றும், 'மார்கழி நோன்பு' என்றும் கூறுவதுண்டு.

இந்த நோன்பின் சில முக்கியமான செய்திகளைத் திருப்பாவையின் இரண்டாவது மூன்றாவது பாசுரங்களிலும், இருபத்தாறாவது இருபத்தேழாவது பாசுரங்களிலும், இருபத்தொன்ப

தாவது பாசுரத்திலும் காண்கிறோம். நோன்பு நோற்பவர் நிகழ்த்திவந்த கிரியைகள் இரண்டாவது பாசுரத்திலும், நோன்பால் நாட்டுக்கு விளையும் நற்பயன் மூன்றாவது பாசுரத்திலும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. இருபத்தாறாவது பாசுரத்திலே நோன்புக் காலத்தில் வழங்கும் விருதுகளும் வாத்தியங்களும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

நோன்பு முடிந்ததும் பெண்கள் பெறும் சம்மானம் இருபத்தேழாவது பாசுரத்திலே பிரஸ்தாபிக்கப்படுகின்றது. அதாவது, பெண்கள் கொள்ள விரும்பும் கோலத்தையும், உட்கொள்ள விரும்பும் விருந்தையும் குறிப்பிடுகிறது இப்பாசுரம். ஆடையாபரணங்களால் தங்களை அலங்கரித்துக் கொண்டு விருந்துண்ண விரும்புகிறார்கள். அக்காரடலை என்னும் பால்-சர்க்கரைப் பொங்கலே இந்த விருந்தின் சிறப்பாகும். இதை இந்தப் பாசுரம், 'பாற்சோறு மூட நெய்பெய்து முழங்கை வழிவார' என்று குறிப்பிடுகின்றது.

இறுதிப் பாசுரத்திற்கு முந்திய பாசுரத்திலே திருப்பாவையின் பரம தாத்பரியம் வெளிப்படுகிறது என்பர். கண்ணனைத் தலைவனாகப் பெற்று அவனுடைய திருவடிகளில் நித்திய கைங்கரியம் செய்வதே நோன்பு நோற்பவர்களின் முக்கிய நோக்கமெனத் தெரியவருகிறது. இதிலிருந்து, இந்த நோன்பைக் கன்னியர் நோற்பது, தாம் ஒப்புயர்வற்ற தலைவரை—அதாவது கணவரை—அடைந்து உய்வதற்கே என்ற இம்மைப் பயனும் இனிது புலனாகின்றது.

ஒரு காலத்தில் இந்தப் பாவை நோன்பு அல்லது மார்கழி நோன்பு இம்மைப்பயன் கருதியே நிகழ்த்தப் பெற்றதாகப் பழைய நூல்களை ஆராய்வதிலிருந்து அறிந்து கொள்கிறோம். அதாவது, மழை பெய்து நாடு செழிக்க வேண்டும் என்பதற்காகவும், நல்ல கணவரை அடைய வேண்டும் என்பதற்காகவும் கன்னிப் பெண்கள் இத்தகைய நோன்பு நோற்றார்கள் எனத் தெரியவருகிறது.

தமிழ்நாட்டில் சங்ககாலத்திலேயே இந்த நோன்பு அனுஷ்டானத்தில் இருந்தது. 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்

ஞளி'ல் இந்த நோன்பு ஆரம்பமாயிற்று என்பதைப் பரிபாடல் என்னும் சங்க நூலும் உறுதிப்படுத்துகின்றது. ஆசிரியர் நல்லந்துவஞர் வையை யாற்றங்கரையில் கன்னிப்பெண்கள் மார்கழி நீராடி நோன்பு நோற்றதை வருணித்திருக்கிருர்.

'பூமி மழை வளம் பெற்றுக் குளிர்வதாக' என்று கன்னிப் பெண்கள் நோன்பு நோற்றதாகவும் கூறியுள்ளார். கன்னிப் பருவத்தில் நோன்பு நோற்றவர்கள் உத்தம நாயகனைப் பெற்று விளங்குகின்ற ஒரு குறிப்பும் பரிபாடலில் காணப்படுகிறது.

மார்கழி நீராட்டத்தைத் தைந் நீராடல் என்று சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. முன்ஞளில் மாதங்களைச் சந்திரன் வழியாகக் கணக்கிட்டார்கள்; இன்றுபோல் சூரியன் வழியாகக் கணக்கிடவில்லை. மாதத்தைத் 'திங்கள்' என்று குறிப்பது அந்தப் பழைய வழக்கத்தின் நினைவுக் குறிதான். ஆண்டாளும் மார்கழி மாதத்தை 'மார்கழித் திங்கள்' என்று குறிப்பிட்டுத் தானே தன் திருப்பாவையைத் தொடங்குகின்ருள்?

முன்ஞளில் மார்கழித் திங்கள் 'மதி நிறைந்த நன்ஞ'ளாகிய பௌர்ணிமையுடன் முடிவுபெறும். மறுநாள் தை மாதம் தொடங்கும்; இம்மாதம் தை மாதத்துப் பௌர்ணிமையோடு முடியும். இதைப் பூர்ணிமாந்த முறை என்பர். இம்முறைப்படி முன்ஞளில் மார்கழி நோன்பு அனுஷ்டிக்கப்பட்டதால், மார்கழிப் பௌர்ணிமையில் தொடங்கிய நீராட்டத்தை தைந்நீராடல் என முன்ஞேர் வழங்குவாராயினர்.

இந்த நீராட்ட விழாவை அம்பாவாடல் என்று ஆசிரியர் நல்லந்துவஞர் குறிப்பிடுகிருர். மணமாகாத பெண்கள் தாய் மாரைத் துணையாகக்கொண்டு நீராடியதாக ஆசிரியர் கூறியிருப்பதால் இது 'அம்பாவாடல்' என்று பெயர் பெற்றதாக உரையாசிரியர் பரிமேலழகர் ஊகஞ் செய்கின்ருர். அம்பாவாடல் என்பதை அம்பாவையாடல் என்று கொள்வது பொருந்தும்; நீர்த்துறையில் பாவை அமைத்துப் பெண்கள் நீராடி விளையாடியதாகத் தெரியவருகிறது.

'அம்பா' என்பது தேவியைக் குறிப்பதால் இந்த நீராட்டம் ஆதியில் தேவியின் பொருட்டு நிகழ்த்தப் பெற்றிருக்க வேண்டும்

என்பர் ஆராய்ச்சிப் பேரறிஞரான ஸ்ரீ. மு. இராகவையங்கார். இவர் தமது ஊகத்திற்கு ஆதாரமாக ஸ்ரீமத் பாகவதத்திலே மார்கழி நோன்புபற்றி வரும் செய்திகளைக் குறிப்பிடுகின்றார். இச்செய்திகளின் சுருக்கம் வருமாறு:

கோகுல மகளிர் காத்யாயனி விரதத்தைத் தொடங்கினர். ஹவிஸ்ஸை உண்டு அந்த நோன்பை நடத்தி வந்தனர். ('நெய் யுண்ணோம், பாலுண்ணோம்' என்று திருப்பாவையில் வருவதை இங்கே நினைப் பூட்டிக் கொள்ளலாம்) அருணோதயத்தில் (திருப் பாவை சொல்லும் 'சிற்றஞ்சிறு காலையில்') அப்பெண்கள் எழுந் திருந்து யமுனா நதியில் ('தூயபெருநீர் யமுனை'யில்) நீராடி ஈரநூண்மணலால் காத்யாயனி தேவியின் உருவம் சமைத்தனர். சந்தனம் மலர் தூபம் தளிர் பழம் இவற்றாலும் நைவேத்யங் களாலும் தேவியை ஆராதித்தனர். ('துயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது' என்று திருப்பாவையில் கூறியிருப்பது நினைவிற்கு வருகிறது.) இப்படித் தொழுது 'எங்களுக்கு நந்த கோபர் மைந்தனாகிய கண்ணனை நாயகனாக அருள்வாயாக' என்று பிரார்த்தித்தார்களாம். ('நந்தகோபன் குமரன்' என்று கண்ணனை முதற் பாசுரத்திலேயே திருப்பாவை குறிப்பிடுகிறது.)

காத்யாயனி தேவியின் திருநாமங்களை அவர்கள் வாயாரச் சொல்லி, 'மஹாமாயே! மஹாயோகினி! ஈச்வரீ!' என்று விளித்து வணங்கியதாகவும் பாகவதம் தெரிவிக்கிறது. பிறகு கண்ணனைத் தியானித்துக் கொண்டு ஒருமாச காலம் அப்படியே பூஜைசெய்து நோன்பை விடாது நடத்தி வந்தனராம். திருப் பாவையிலோ கோபியர் கண்ணனின் திருநாமங்களையே பாடிக் கண்ணனையே சிந்திக்கிறார்கள்.

ஒரு நாள் அந்த ஆய்ப்பாடிக் கன்னியர் யமுனையில் நீராடு வதற்காகக் கிழக்கு வெளுக்கு முன்பே எழுந்து அவரவர் தோழி மார்களின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறார்கள். (இது திருப் பாவையில் வருணிக்கப்படுவது பிரசித்தம்) ஒருவரோடு ஒருவர் கைகோத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ண சரிதங்களைப் பாடியவண்ணம் போகிறார்கள். (இந்தக் கருத்தும் திருப்பாவையில் குறிப்பாக வும் விளக்கமாகவும் காணப்படுவதுதான்.) அவர்கள் கிருஷ்ண

சரிதங்களைப் பாடிக்கொண்டே நீரில் விளையாடிக் கொண்டிருக்கும்போது பரமயோகிகளுக்கும் யோகியான ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களுக்கு விரதபலம் அளித்து மனோரதம் நிறைவேறச் செய்தான் என்பது ஸ்ரீ பாகவத உபாக்கியானம்.

சங்க நூல்களில் தைந்நீராடல் பற்றி வருவதையும், ஸ்ரீமத் பாகவத புராணத்தில் மார்கழி நோன்பு குறித்து வருவதையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்கும்போது, தைந்நீராடல், மாதம் கணக்கிடப் பெற்ற முறையை ஒட்டி மார்கழி நீராட்டமாக மாறியதுடன் ஒருவகை நோன்பாகவும் மாறிவிட்டதென்று தெரிய வருகிறது. நீர்த்துறைகளில் வைத்த பாவைகளை உமாதேவியாக வழிபடும் வழக்கத்திலே, பழைய லௌகிக நீராட்டு விழா ஓரளவு சமயக் கொள்கையை ஏற்றுக் கொண்டதும் புலனாகிறது.

ஆண்டாளின் திருப்பாவையில் வைஷ்ணவ சமயக் கருத்துக்கள் நிரம்பியிருப்பது போல், சைவர்களின் பாவைப் பாட்டாகிய திருவெம்பாவையில் சைவ சமயக் க்ருத்துக்களைக் காண்கிறோம்.

ஆய்ப்பாடியிலுள்ள ஆயர்கள் மழைபெய்யாக் குறையை நீக்கவேண்டிக் கண்ணனுடைய தலைமையில் தங்கள் பெண்களை மார்கழி நோன்பு நோற்கச் சொன்னதாகவும், அப்பெண்களில் சிலர் துயிலுணர்ந்தெழுந்து தோழியரையும் அழைத்துக் கண்ண பிரானையும் எழுப்பி யமுனையில் நீராடி நோன்பு நோற்றுக் கண்ணனைத் தலைவனாகப்பெறும் தங்கள் மனோரதத்தை அடைந்ததாகவும் பெரியவாச்சான்பிள்ளை திருப்பாவையின் வரலாறு கூறியிருப்பதில், இவர் ஸ்ரீமத்பாகவத புராண வரலாற்றை நூற்பிரமாணமாகக் காட்டவில்லை.

மார்கழி நோன்பு உமாதேவியுடன் தொடர்புடையது என்பதற்குத் திருப்பாவை வியாக்கியானத்திலும் ஆதாரம் இல்லை; திருப்பாவை மூலத்திலும் ஆதாரம் இல்லை. 'பாவை' என்னும் சொல்லைக்கொண்டே நோன்புக்கும் தேவிக்கும் தொடர்பு காட்ட முயல்கின்றார் திரு. மு. இராகவையங்கார். ஆனால் பண்டைக் காலத்திலே பெண்கள் நீர்த்துறையில் பாவை அமைத்து நீராடி விளையாடிய தைந்நீராடலில் மெல்ல மெல்லச் சமய உணர்ச்சி புகுந்து நிரம்பியது என்று கருதுவதே ஆராய்ச்சி முறையாகும்.

ஆண்டாளின் மார்கழி நோன்பிலே தேவியைக் .குறித்த பிரஸ்தாபம் சிறிதும் இல்லை. 'பாவை' என்பதற்கு 'நோன்பு' என்றே வியாக்கியான சக்ரவர்த்தி பொருள் கொண்டிருப்பதால், ஆண்டாள் காலத்திலே இச்சொல் நோன்புப் பொருளிலேயே வழங்கி வந்திருக்கவேண்டும் என்ற ஊகம் தவருகாது. இந்தப் பொருள், ஸ்ரீ. மு. இராகவையங்கார் ஊகிப்பது போல் பிரதிமை அடியாகவே வந்திருக்கவேண்டும் என்பதற்குத் தக்க ஆதாரம் இல்லை.

ஸ்ரீமத் பாகவத் புராணம் ஆழ்வார்களின் காலத்திற்கும் பிற்பட்டுத் தோன்றியதென்று தற்கால ஆராய்ச்சியாளர் ஊகிக் கின்றுர். இது சரியாஞல், மார்கழி நீராட்டம் நீண்ட காலமாகத் தமிழ்நாட்டிலே வழங்கி வந்து நாளடைவில் நோன்பாகவும், ஒரு வகைச் சமய நோன்பாகவும் பரிணமித்து, அப்பால் பாகவத புராணத்திலே இடம் பெற்றிருக்க வேண்டும்.

''இந் நோன்புக்கு மூலம் சிஷ்டாசார ஸித்தம்; 'மேலை யார் செய்வனகள்' என்று ஆண்டாள் தானும் அருளிச் செய் தாள்'' என்பர் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை. முன்னேர் அனுஷ் டானத்தையே பின்பற்றி அநாதிகாலமாக நடைபெற்று வருவது இது; இதற்கு வேதநூற் பிரமாணம் இல்லை என்பது ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளையின் கருத்து. 'தொல்பாவை' என்பர் உய்யக் கொண்டாரும் தனியனில். தமிழ்நாட்டுப் பழைய வழக்கத்தைத் தழுவிய இந்த மார்கழி நீராட்டம் இன்றும் மலையாள நாட்டில் சில மாறுபாடுகளுடன் 'திருவாதிரைப் பெருவிழா' வாக இளம் பெண்களால் வெகு விமரிசையாய் கொண்டாடப் பெறுகின்றது.

திருப்பாவையைத் தழுவி வைஷ்ணவ முறையாகவோ, திரு வெம்பாவையைத் தழுவிக் சைவ முறையாகவோ மலையாளப் பெண்கள் இவ்விழாவைக் கொண்டாடா விட்டாலும் அவர்களது கொண்டாட்டத்தின் ஒரு முக்கிய அம்சத்தைத் திருப்பாவையின் இருபத்தேழாவது பாசுரத்திலே காணலாம். அம்மலை நாட்டுப்

பெண்கள் விழாவின் இறுதியில் தங்களை ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு விருந்து உண்பதும், அவ்விருந்தில் பாயஸத்தை விசேஷமாக உபயோகிப்பதும், ஆண்டாளின் கோபியர் ஆடையாபரணங்கள் அணிந்து பாற்சோறு உண்ண விரும்புவதை நினைப்பூட்டுகின்றன. இம்மலையாளப் பெண்களும் இவ்விழாவைக் 'காத்யாயனி விரத' மாக அனுஷ்டிப்பதில்லை.

### திருப்பாவை - திருவெம்பாவை

மார்கழி நோன்பு தன் பழைய நிலைமை மாறிச் சமயானுஷ்டானமாகி விட்டதற்குத் திருப்பாவையைப் போல் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவெம்பாவையும் சான்றாகும். திருவெம்பாவை முதல் எட்டுப் பாட்டுக்களில், கன்னிப் பெண்கள் ஒருவரையொருவர் துயிலுணர்த்தி நீராடப் போகின்றனர்.

**உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்**
**உன்னடியார்தாள்பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்காவோம்**
**அன்னவரே எம்கணவர் ஆவார்: அவர்உகந்து**
**சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்.**

என்று திருவெம்பாவை-ஒன்பதாம் பாட்டிலே பெண்கள் செய்து கொள்ளும் வேண்டுகோளும், **''எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க''** என்று பத்தொன்பதாம் பாட்டில் செய்து கொள்ளும் வேண்டுகோளும், திருப்பாவை இருபத்தொன்பதாம் பாட்டில் குறிக்கப்பெறும் பரம தாத்பரியத்தை நினைப்பூட்டுகின்றன. திருவெம்பாவையிலும் ஒரு மழைப்பாட்டு வருகிறது; வேறு ஒற்றுமை அம்சங்களும் உண்டு.

'திருப்பாவையும் திருவெம்பாவையும் வேறுவேறு தெய்வச் சார்புடையவாயினும் ஒரே பொதுக் குறிப்புடையன' என்று ஸ்ரீ மு. இராகவையங்கார் கூறுவது உண்மைதான். பெண்கள் ஒருவரையொருவர் துயிலெழுப்பி மார்கழிநீராடி, ஆய்ச்சியர் கண்ண

பிரானையும், சிவநேசச் செல்வியர் சிவனடியாரையும், நாயகராக அடையப் பிரார்த்திப்பதுடன், நாடு செழிக்க மழைப் பாட்டும் பாடுகிறார்கள்.

**'முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்'** என்று தொடங்கி மாணிக்கவாசகர் பாடும் மழைப்பாட்டு, **'ஆழிமழைக்கண்ணா'** என்று ஆண்டாள் பாடிய மழைப்பாட்டை நினைப்பூட்டுகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருப்பாவை-திருவெம்பாவையின் புகழ் நம் தமிழ் நாட்டின் அழியாப் புகழ் என்பதில் ஐயமில்லை. இது வெகு காலத்திற்கு முன்பே கடல் கடந்து இரண்டாயிரம் மைலுக்கப்பாலுள்ள ஸயாம் தேசத்தில் சென்று நிலை பெற்று விட்டது. அங்கே அரசாங்கத்தாரால் பல நூற்றாண்டுகளாக நடத்தப் பெற்றுவரும் ஒரு விழாவுக்கு **'த்ரியெம்பாவை-த்ரிபாவை'** என்று பெயர். இப்பெயருக்குப் பொருளும் தெரியாமல், இது தமிழ்மொழி என்றுகூடத் தெரியாமல் பிற்காலத்திலே ஸயாம் மக்கள் இவ்விழாவைக் கொண்டாடி வந்திருக்கிறார்கள். இதனால் நமது பக்தி மதம் ஸயாம் முதலிய வெளிநாடுகளிலும் பரவி அந்நாட்டு மக்களுக்கும் நல்வாழ்வு அளித்து வந்திருக்கிறதென்று தெரியவருகிறது.

நம் தேசத்தின் இம்மை நலன்களை மனமார விரும்பித் தொண்டு செய்ய முற்படும் நன்மக்களும் திருப்பாவை திருவெம்பாவை கற்றுப்பயன் பெறலாம். நம் மக்கள் தனி வாழ்க்கையிலும், நாட்டு வாழ்க்கையிலும், வெளிநாட்டாரோடு தொடர்புற்று வாழும் வாழ்க்கையிலும் திருப்பாவை திருவெம்பாவைகளில் காணப்படும் பெருங் கொள்கைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இது ஸ்திரீகளின் விசேஷ தருமமாகும்.

திருப்பாவை - திருவெம்பாவை விழாக் கொண்டாட்டங்களில் ஸ்ரீ காமகோடிபீடம் சங்கராசாரிய சுவாமிகள் சிரத்தை கொண்டிருப்பது ஒரு மங்கள நற்குறியாகப் போற்றத் தக்கது.

திருப்பாவையும் - திருவெம்பாவையும் பக்திப் பூங்காவனத்தை அழகு செய்யும் வாடாத கவிதைப் பூங்கொத்துகள். இப்

பாடல்களின் அமைப்பு முறை இப்பிரபந்தங்களைத் தொண்டர் களோடு ரஸிகர்களுக்கும் நல்விருந்தாக்குகிறது.

*  *  *  *

இந்த இரண்டு பிரபந்தங்களிலும், திருப்பாவையிலே ஆண் டாளின் 'திருவுள்ளம் திருவாய்ப் பாடியிலே குடிபோய், பாவநா ப்ரகர்ஷத்தாலே (பாவனையின் முதிர்ச்சியாலே) அநுகாரம் (ஒரு வரைப் போலச் செய்வது) முற்றி, அவை தானேயாய், இடை நடையும் இடைமுடியும் இடைப் பேச்சும் முடைநாற்றமுமாய் விட்டது' என்பது ஸ்ரீ பெரியாவாச்சான்பிள்ளை வியாக்கியானத் தின் அவதாரிகை. ஆண்டாளிடம் பாவை நோன்பு பெற்ற பரிசு தான் திருப்பாவை.

ஸ்ரீ வில்லிபுத்தூர்ச் செல்வியார், தம் திருமொழியுள் ''வெய்ய தழலுமிழ் சக்கரக்கை வேங்கடவற் கென்னை விதிக்கிற் றியே'' என்று பிரார்த்தித்தமைபற்றி ஸ்ரீராமாநுஜ முனிவர் திருமலையிலெழுந்தருளியுள்ள திருவேங்கடமுடையான் அப் பிராட்டியாரின் திருப்பாவைப் பிரபந்தாதிகளைத் திருச்செவி சாத்தியருளுமாறு பண்டு பாராயண முறைமைகளைக் கட்டளை யிட்டருளினர் என்பர். திருவேங்கடமுடையான் திருச்செவி சார்த்தியருளும் பாங்கு பற்றியும் அப்பிரபந்தம் ஸ்ரீ வைணவ சமயத்தவர்களுக்கு மார்கழி மாதத்துப் பாராயணப் பனுவலாக விளங்குகின்றமை பற்றியும் அது திருமலை திருப்பதி தேவஸ்தானத் தாரால் பதிப்பித்து வெளியிடலாயிற்று. தொண்டரடிப் பொடி யாழ்வாரின் அருளிச்செயல் ஆகிய திருப்பள்ளி யெழுச்சியும் அவ் வாறே அநுசந்தானத்துக்கு உரிமையாதல் பற்றி அதுவும் உடன் பதிப்பு எய்தியது.

வாழ்க கோதை தமிழ்!

ஸ்ரீ:

திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

காப்பு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
 பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
 செவ்வடி செவ்வி திருக் காப்பு.

---

## தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

# திருப்பள்ளியெழுச்சி.

---

### தனியன்கள்

திருமலையாண்டான் அருளிச்செய்தது.

பூபாளம்.

தமேவமத்வாபரவாஸுதேவம்
ரங்கேஸயம்ராஜவதர்ஹணீயம்
ப்ராபோதிகீம்யோக்ருதஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும்பகவந்தமீடே.

---

திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்தது.

இருவிகற்ப நேரிசை வெண்பா.

மண்டங் குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த்
தொண்ட ரடிப்பொடி தொன்னகரம்—வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத் தம்மானைப் பள்ளி
யுணர்த்தும் பிரானுதித்த வூர்.

---

# ஸ்ரீரங்கநாதனைத் துயிலுணர்த்துதல்.

---

## எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

### பூபாளராகம் - அடதாளம்.

*கதிர்வன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனையிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ராசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்த்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்
ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிற குதறி
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயி றுறஅதன் விடத்தினுக் கனுங்கி
அழுங்கிய ஆனையி னருந்துயர் கெடுத்த
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
பாயிரு ளகன்றது பைம்பொழிற் கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

மேட்டிள மேதிகள் தலைவிடும் ஆயர்கள்
தேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவ ரேறே!
மாமுனி வேள்வியைக் காத்துஅவ பிரதம்
ஆட்டிய அடுகிற லயோத்தியெம் மரசே!
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகட லரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண்டு அடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா!
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெருமான்! பள்ளி யெழுந்தரு ளாயே.

இரவியர் மணிநெடுந் தேரொடும் இவரோ
இறையவர் பதினொரு விடையரும் இவரோ
மருவிய மயிலின னறுமுகன் இவனே
மருதரும் வசுக்களும் வந்துவந் தீண்டிப்
புரவியோடு ஆடலும் பாடலும் தேரும்
குமரதண் டம்புகுந்து ஈண்டிய வெள்ளம்
அருவரை யனையநின் கோயில்முன் இவரோ
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

அந்தரத் தமரர்கள் கூட்டங்கள் இவையோ
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ
இந்திர னானையும் தானும்வந் திவனோ
எம்பெருமான்! உன் கோயிலின் வாசல்

சுந்தரர் நெருக்கவிச் சாதார் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்
அந்தரம் பாரிட மில்லைமற் றிதுவோ
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலையொண் கண்ணாடி முதலா
எம்பெரு மான்படி மக்கலங் காண்டற்கு
ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ
தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி
அம்பர தலத்தினின்று அகல்கின்றது இருள்போய்
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

*ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமோடு இசைதிசை கெழுமிக்
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கெந்தரு வரவர் கங்குலு ளெல்லாம்
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்
ஆதலில் அவர்க்குநா ளோலக்கம் அருள
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தரு ளாயே.

*கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ
துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா!
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி யென்னும்
அடியனை அளியனென் றருளிஉன் னடியார்க்கு
நுட்படுத்தாய்! பள்ளி யெழுந்தரு ளாயே.

அடிவரவு :—கதிர், கொழு, சுடர், மேட்டு, புலம்பின, இரவியர், அந்தரம், வம்பவிழ், ஏதம், கடி, அமலன்.

**தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.**



## திருப்பாவையின் தனியன்
## பட்டர் அருளியது

**நீளா துங்கஸ்தநகிரி தடீஸுப்த முத்போத்ய க்ருஷ்ணம்**
**பாரார்த்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யா பயந்தி**
**ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே**
**கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய:**

நீளாதேவியின் அம்சமான நப்பின்னைப் பிராட்டியின் திருமார்பிலே கண்வளர்ந்தருளுகிறவனும், தன்னால் (கோதையால்) சூடிக் களையப்பட்ட மாலையிலே கட்டப்பெற்றவனுமாகிய கிருஷ்ணனை எழுப்பி, பற்பல வேதங்களின் தலையான பாகங்களாகிய உபநிஷத்துக்களிலே ஸித்தமான (வேதாந்த ஸித்தமான) தனது பாரதந்திரியத்தை அறிவிக்கின்றவளாய், எந்தக் கோதை வலிய அனுபவிக்கின்றாளோ, அப்பேர்ப்பட்ட பெருமைவாய்ந்த

கோதையின் பொருட்டு இந்த நமஸ்காரம் கால தத்துவம் உள்ள வரை ஆகட்டும் என்பது இத்தனியனின் பொழிப்புரை.

இந்த சுலோகத்திலே. பட்டர் திருப்பாவையின் தாத்பரியத்தைச் சுருக்கமாகச் சொல்லி ஆண்டாளைச் சரணமடைகிறார். அதாவது, கண்ணனைத் துயிலுணர்த்தி ஸ்ரீ கிருஷ்ண கைங்கர்யத்தில் தனக்குள்ள ஆவலைத் தெரிவித்துத் தான் சூடிக்கொடுத்த பூமாலையாலே அப்பெருமானை விலங்கிட்டு அனுபவித்த கோதையை அடி வணங்குகிறேன் என்கிறார்.

திருப்பாவையின் பத்தொன்பதாம் பாசுரத்தில், 'கொத்தலர் பூங்குழல் . . . . . .மலர்மார்பா!' என்பதற்கு இசைய இத்தனியன் ஆரம்பமாகிறது.

**'பாரதந்த்திரியத்தை அறிவிக்கின்றவளாய்'** என்று பட்டர் கூறுவதில் சூடிக்கொடுத்த சுடர்கொடி பூமாலையோடு பாமாலையும் கொடுத்தாள் என்பது குறிப்பு.

இங்கே 'தனது பாரதந்த்ரியத்தை' அறிவிப்பதாகக் குறிப்பிடுவது, இருபத்தொன்பதாம் பாசுரத்திலே திருப்பாவையின் பரம தாத்பரியமாக வெளியிடப் பெறுவதையும் வற்புறுத்துகிறது.

திருப்பாவையின் பொருளை அநுஸந்தித்து ஆனந்தத்தில் ஆழ்ந்தவளாய்க் கோதையைத் தாம் சரணம் புகுந்ததைப்பட்டர் அறிவிக்கின்றார் இத்தனியனில். இப்படி இவர் அனுஸந்தித்து ஈடுபட்டுச் சரணமடைந்திருக்கும் இந்த இருப்பை அனைவரும் அநுஸந்திப்பது நலம்.

'விடிவோரை எழுந்திருந்து முப்பது பாட்டையும் அநுஸந்தித்தல்; மாட்டிற்றிலனுகில் "சிற்றஞ் சிறுகாலை" என்ற பாட்டை அநுஸந்தித்தல்; அதுவும் மாட்டிற்றிலனுகில் நாம் இருந்த இருப்பை நினைப்பது' என்பது பட்டர் வாக்கு.

**'நாம் இருந்த இருப்பு' :** பட்டர் திருப்பாவையை அநுஸந்தித்து ஈடுபட்டுக் கோதையை அடிவணங்கியிருந்த இருப்பு.



## தனியன்

### உய்யக்கொண்டார் அருளியவை

**அன்ன வயற்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்**
**பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்**
**பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை**
**சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.**

பக்தர்களும் ரஸிகர்களும் அர்த்த விசேஷங்களை ஆராய்ந்து கொண்டாடுகின்ற திருப்பாவையென்னும் பலபாசுரங்களாலாகிய அழகிய பாமாலையை இன்னிசைக்கு இசையக் கண்ணபிரானாகிய ஸ்ரீரங்கநாதன் விஷயமாகப் பாடிக் கொடுத்தவளும், பூமாலைகளைச் சூடிக்கொடுத்தவளும், அன்னங்கள் உலவுகின்ற வயல்களையுடைய ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்தவளுமாகிய ஆண்டாளை, நெஞ்சமே! அனுஸந்திப்பாயாக என்பது பொழிப்புரை.

**'பதியம்'** : பத்யம் என்ற ஸம்ஸ்கிருதத்தின் திரிபு.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்—நாடிநீ
வேங்கடவற் கென்னை விதியென்ற இம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு:

பூமாலையைச் சூட்டிக்கொண்டு எம்பெருமானுக்குக் கொடுத்த தேஜோமயமான கொடி போன்றவளே! ஆயச் சிறுமியர் அநுஷ்டித்த பழமையான நோன்பைத் 'திருப்பாவை' வாயிலாகப் பாடிக் கருணையோடு கொடுக்க வல்லவளும், பல வளைகளை அணிந்தவளுமான கோதாய்! நீ மன்மதனை நாடி, 'காமதேவா! என்னைத் திருவேங்கடமுடையானுக்கு வாழ்க்கைப் படுத்துவாயாக!' என்று சொன்ன இந்தச் சொல்லை நாங்கள் கடந்து போகாதபடி கருணை புரிவாயாக—என்பது பொழிப்புரை.

தெற்கே ஸ்ரீ வில்லிபுத்தூரில் தோன்றிய ஆண்டாள் என்னும் சுடர்க்கொடி, வடவேங்கடமலையிலுள்ள வாசுதேவ தருவைத் தழுவி வாழுமாறு காதலித்த அத்தகைய காதலைப்போற்றி அநுஸந்திக்க வேணும் என்னும் இப்பாசுரக் கருத்து ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது.





'நீராடப் போதுவீர்! போதுமினோ......
நாராயணனே நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்து



# 1

ஆய்ப்பாடிக் கன்னிகைகளில் சிலர்
மற்றைக் கன்னிமார்களை
நோன்பு நோற்க அழைப்பது

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்;
  நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!

சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
  கூர்வேல்-கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்

ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,
  கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல்முகத்தான்

நாராயணனே, நமக்கே பறைதருவான்,
  பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| நேர்இழையீர் | : அழகிய அணிகளை அணிந்திருப்பவர்களே! |
| சீர் மல்கும் | : சீர் நிறைந்து வழிகின்ற |
| ஆய்ப் பாடிச் செல்வச் சிறுமீர்காள் | : கோகுலத்திலுள்ள செல்வச் சிறுமியர்களே! |
| மார்கழித் திங்கள் | : மார்கழி மாதத்திலே |
| திம நிறைந்த நன்னாளால் | : சுக்லபட்ச பௌர்ணமி யென்னும் நல்ல நாள். வாய்த்திருக்கிறது ; |
| பாரோர் புகழ | : இவ்வுலகத்தவர் புகழும்படி |
| படிந்து | : நோன்பில் இறங்கி |
| நீராடப்போதுவீர் | : நீராடவரவிருப்பமுள்ளவர்களே! |
| போதுமினோ | : வாருங்கள்; (ஏனெனில்) |
| கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன் | : கூர்மையானவேலையும் கொடுந்தொழிலையும் உடைய நந்தகோபனது புதல்வனும், |
| ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம் | : அழகுநிறைந்தகண்களையுடைய யசோதையின்சிங்கக்குட்டியும், |
| கார்மேனிச்செங்கண் | : மேகம் ஒத்த மேனி, செந்தாமரைபோன்றகண்கள். |
| கதிர்மதியம்போல்முகத்தான் | : சூரியகிரணங்களையுடைய சந்திரன் போன்ற முகம்—இவற்றை உடையவனும் ஆகிய |
| நாராயணனே | : ஸ்ரீமந் நாராயணன் தானே |
| நமக்கே | : அவனையே நம்பும் நமக்கே |
| பறை தருவான் | : நோன்பிற்கு வேண்டிய பறையைத் தருவான். |

## விளக்கம்

'ஆய்ப்பாடிச் சிறுயர்மிகளே! ஸ்ரீமந் நாராயணனுகிய கண்ணனே நமது நோன்புக்கு வேண்டியவற்றைத்தருவான்: நம்முடைய விருப்பத்தை நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறுன். இந்த மார்கழித் திங்களில் மதிநிறைந்த இந்நாள் நன்னுளாக வாய்த்திருக்கின்றது. விருப்பமுள்ளவர்கள் எல்லாம் நீராட வாருங்கள்' என்று அழைக்கிறுர்கள்.

கண்ணன் அருள்பெறத் தக்க காலம் இதுவென்று மாதத்தையும் பட்சத்தையும் நாளையும் கொண்டாடுகிறுர்கள். ஒருவரையொருவர் முகங்கண்டு களிக்கவும், எல்லோரும் சேர்ந்து சென்று கண்ணனைத் துயில் உணர்த்தவும் மதிநிறைந்த நன்னுள் வாய்த்திருக்கின்றது.

தாபம் தீர நீராட வாருங்கள் என்ற அழைப்பிலே, கண்ணனைப் பிரிந்திருந்த தாபம் தீர அவனுடைய அன்பையும் அருளையும் பெறுவோம் என்பது குறிப்பு. 'வருகிறவர்கள் எல்லோரும் வரலாம்! என்று சொல்வது போல் அமைந்திருக்கிறது 'போதுவீர்? போதுமினுே?' என்றழைப்பு.

பால் நெய் முதலியவற்றின் சிறப்புமட்டுமல்ல ஆய்ப்படியின் சீர்; கண்ணன் வளரும் நீர்மையும் சீர்மையும் தனிப்பெருஞ் சிறப்பல்லவா? இங்குள்ள செல்வச் சிறுமியர் ஸ்ரீகிருஷ்ணகடாட்சமாகிய அன்புச் செல்வத்திற்கு உரியவர்.

பசும்புல்லும் சாக மிதியாத பரம சாதுவாகிய நந்தகோபர் பிள்ளைமீதுள்ள பேரன்பினுல் 'என்ன ஆபத்து வருகிறதோ?' என்று வேலைச் சாணைபிடித்துக் 'கொடுந்தொழிலு'க்கும் சித்தமாகிறுர். யசோதையோ அந்த அழகிய 'பிள்ளையை மாறுதே பார்த்துக்கொண்டிருக்கையாலே' தன் அழகிய கண்களில் மேன்மேலும் அழகு நிறைந்து குடிகொண்டிருக்கும்பேறு பெறுகின்றுளாம்.

சகல தாபங்களும் ஆறும்படியான வடிவழகைக் கார்மேனி' என்றும், காதலாகிக் கசிந்து குளிர நோக்குகின்ற கண்களைச் 'செங்கண்' என்றும் குறிப்பிடுகிறார்கள். தேஜஸும் குளிர்ச்சியும் ஒருங்கே கொண்ட திருமுகமண்டலத்தைக் 'கதிர்மதியம் போல் முகம்' என்று வருணிக்கிறார்கள்.

நோன்புக்கு வேண்டிய வாத்தியங்களில் ஒன்று 'பறை'. இது வியாஜம்: நோக்கம் கண்ணனோடு உறவுகொண்டு அவனுக்கேப் பணிசெய்வது. நீராடுவதையும்வியாஜமாகக்கொண்டு கண்ணனைத் தானே அடைய விரும்புகிறார்கள்.

'பார்' உலகத்தின் ஒருசிறு பகுதியாகிய ஆய்ப்பாடியையும் குறிக்கும். கண்ணனுடன் தோழமை கூடாதென்று தடுத்திருந்த ஆய்க்குல முதியவர்களே புகழும்படி கண்ணனே உபகரணங்களை உதவப் பெண்கள் நோன்பில் இறங்குகிறார்கள்.

## உள்ளுறை பொருள்

கைங்கரியச் சுவையுள்ள பாகவதர்கள், பகவானுடைய குணங்களிலே மெய்மறந்திருக்கும் பாகவதர்களைக் கைங்கரியத்திற்கு அழைப்பது உட்பொருள்.

'நந்தகோபன் குமரன்' என்பதில் ஆசாரியனுக்கு வசப்படுகின்றான் இறைவன் என்பதும் 'யசோதை இளஞ்சிங்கம்' என்பதில் தாயாகிய பெரிய திருமந்திரத்தில் விளங்குகின்றான் என்பதும் குறிப்பு.





பாற்கடலுள்

பையத் துயின்ற பரமன் அடிபாடி......

உய்யுமா றெண்ணி உகந்து



## 2

நோன்பு நோற்பதற்கு
மேற்கொண்டுள்ள
நியமங்களைத் தெரிவிப்பது.

வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ: பாற்கடலுள்

பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலை நீராடி,

மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம்முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றோதோம்:

ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| வையத்து வாழ்வீர்காள் | : பூமியில் வாழப் பிறந்தவர்களே; |
| உய்யும் ஆறு எண்ணி உகந்து | : உய்யும் வகையை எண்ணி மகிழ்ந்து, |
| நாமும் நம் பாவைக்கு | : நாமும் நமது பாவை நோன்புக்கு அங்கமாக |
| செய்யும் கிரிசைகள் | : செய்யப் போகின்ற கிரியைகளை |
| கேளீர் | : கேட்பீராக : |
| பாற்கடலுள் பையத்துயின்ற | : பாற்கடலில் மெல்லத் தூங்குகிற; யோக நித்திரை செய்கிற |
| பரமன் அடி பாடி | : பரமனது திருவடிகளைப் பாடி, |
| நாள்காலே நீராடி | : விடியற் காலத்திலேயே நீராடி, |
| ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் | : தானத்தையும் பிச்சையையும் இயன்றவரையிலும் |
| கைகாட்டி | : நாம் கொடுத்தோம் என்னும் செருக்கு இல்லாமல் கொடுத்து, |
| நெய் உண்ணோம் பால் உண்ணோம் | நெய்யும் பாலும் உண்ண மாட்டோம்; |
| மை இட்டு எழுதோம் | : கண்களை மையிட்டு அழகு செய்து கொள்ள மாட்டோம் |
| மலர் இட்டு நாம் முடியோம் | : நாம் கூந்தலைப் பூச்சூட்டி முடிக்க மாட்டோம், |
| செய்யாதன செய்யோம் | : பெரியோர் செய்யாதவற்றைச் செய்யமாட்டோம்; |
| சென்று தீக்குறளை ஓதோம் | : கண்ணனிடம் சென்று பிறருக்குத் தீமை உண்டாகுமாறு கோள் சொல்ல மாட்டோம். |

## விளக்கம்

சில கோபியர்கள் மற்றைக் கன்னிமார்களிடம் தெரிவிக்கும் இந்த நியமங்களில் சில 'பிரவ்ருத்தி' ரூபமானவை: சில 'நிவ்ருத்தி' ரூபமானவை. அதாவது, பற்றிக்கொள்வன சில: விடவேண்டியவை சில.

எந்த விசேஷ காரியத்தில் ஈடுபடுவோரும் அக்காரியம் கைகூடும் வரையில் சிலவற்றை விடவேண்டுமென்றும், சிலவற்றைப்பற்ற வேண்டுமென்றும் நியமம் கொள்வதுண்டு. அப்படியே இப் பெண்களும் சிலநியமங்களைச் சங்கற்பித்துக் கொள்கிறார்கள்.

இந்நியமங்களில் 'பிரவ்ருத்தி' ரூபமானவை மூன்று; (1) பரமன் அடி பாடுதல். (2) காலை நீராடுதல். (3) ஐயமும் பிச்சையுங் கைகாட்டுதல். இவை பற்றும் கிரியைகள்.

இனி விடும் கிரியைகள்; (1) நெய் பால் உண்ணாதது, (2) மையாலும் மலராலும் அலங்கரித்துக் கொள்ளாதது, (3) செய்யாதன செய்யாமலிருப்பது, (4) கோள் சொல்லாமலிருப்பது ஆகிய சங்கற்பங்கள். இப்பாட்டிலே 'செய்யும் கிரியைகளில், பற்றும் கிரியைகளோடு விடும் கிரியைகளும் அடங்கியுள்ளன.

தகுதிவாய்ந்த பெரியோருக்கு உரிய காலத்தில் வேண்டுமளவு மிகுதியாக உதவுவதை இங்கே 'ஐயம்' என்று குறிப்பிடுகிறார்கள். 'பிச்சை' என்பது 'தேஹி' என்று வருகின்ற பிட்சுக்களுக்குக் கொடுப்பது.

'ஆம் தனையும்' : ஐயமும் பிச்சையும் பெற்றுக்கொள்பவர் திருப்தியடைந்தவராகும் வரையிலும் வழங்கவேண்டும் என்னும் லட்சியத்தையும் குறிப்பிடுகின்றது. கை எவ்வளவு கொடுத்தாலும், 'நாம் என்ன கொடுத்துவிட்டோம்' என்று நெஞ்சு நினைக்கவேண்டும் என்பது 'கை காட்டி' என்னும் சொற்றொடரின் புதை பொருள்.

பரமன் அடிபாடுவதையே உணவாகக் கருதுவோர், வேறு உணவில் விருப்பம் ஒழிந்தவராய் 'நெய்யுண்ணோம் பாலுண்ணோம்' என்கிறார்கள். 'அடிபாடி நெய்யுண்ணோம்' என்ற சொற்போக்கினால் 'எல்லாம் கண்ணன்' என்ற நிலை இவர்களுக்கு வாய்த்திருப்பதாகக் கருதலாம்.

கண்ணனைக் காண்பதற்கு முன் அக்கண்களை மை இட்டு அழகு செய்யமாட்டோம் என்கிறார்கள். அவன் பாதமலரே தலைமேல் புனையத்தக்க மலரென்று கருதுவோர், 'மலரிட்டு நாம் முடியோம்' என்கிறார்கள்.

## உள்ளுறை பொருள்

'வையத்து வாழ்வீர்காள்' 'இருள் தருமா ஞாலம்' ஆகிய இவ்வுலகத்திலே பகவதநுபவம் செய்யும் பேறு பெற்று வாழ்வதே ருசியுள்ள வாழ்க்கை யென்பது குறிப்பு. பாவை நோன்புக்கு அங்கமான நியமங்கள், பாகவதர்கள் மேற்கொண்டு ஒழுகும் 'பிரபத்தி' நெறியின் உறுப்புக்களுக்கு நினைவுக்குறி.

'உய்யுமாறு எண்ணி உகந்து': பகவானையே ஸர்வ போக்யமாக—அதாவது உண்ணும்சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் என்று அநுபவிக்கத் தக்க நிலையில்—கொள்ளவேண்டும். இது இப்பாட்டின் ஸாரமான உள்ளுறைப் பொருள்.

'ஐயம்' பகவத் வைபவத்தையும், 'பிச்சை' பாகவத வைபவத்தையும் குறிக்கும் என்பர். இந்த இரண்டு வைபவங்களையும் 'ஆந்தனையும் பிறருக்கு உபதேசிக்க வேண்டும்.



ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி ...
நீராடினால்... ஓங்கு பெருஞ் செந்நெலூடு
பூங்குவளைப் போதில்... குடம் நிறைக்கும் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து;



## 3

உத்தமன் பேர்பாடி நோன்புக்கு
அங்கமென்று நீராடினால்,
மழை பெய்து நாடு செழிக்கும்

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல்உகளப்

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி

வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் - பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

ஓங்கி உலகளந்த : ஓங்கி வளர்ந்து உலகங்களைத் திருவடிகளால் அளந்து கொண்ட

உத்தமன் பேர் பாடி : புருஷோத்தமனுடைய திருநாமங்களைப் பாடி

நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி : நாங்கள் எங்கள் பாவை நோன்புக்கு அங்கமென்று சொல்லி; நோன்புநோற்பதெற்கென்று ஒரு வியாஜம் சொல்லி

நீராடினால் : நீராடினால், அதன் பயனாக

தீங்கு இன்றி நாடு எல்லாம் : நாடு முழுவதும் ஒரு தீங்கும் இல்லாமல்

திங்கள் மும்மாரி பெய்து : மாதந்தோறும் மூன்று தரம் மழை பெய்ய அதனால்,

ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு : உயர்ந்து வளர்ந்து பருத்துள்ள செந்நெற் பயிர்களின் ஊடே

கயல் உகள ; கயல் மீன்கள் துள்ளவும்

பூங்குவளைப் போதில் : அழகிய குவளை மலர்களில்

பொறிவண்டு கண் படுப்ப : புள்ளிகளையுடைய வண்டுகள் உறங்கவும்,

நீங்காத செல்வம் நிறைந்து : அழிவில்லாத செல்வம் நிறையும்படி

வள்ளல் பெரும் பசுக்கள் : வள்ளல் தன்மையுள்ள பெரிய பசுக்கள்

தேங்காதே புக்கு இருந்து : பால் கறப்பவர்கள் சலியாமல் ஏங்காமல்கறக்கப்புகுந்துஒரு நிலையாக இருந்து

சீர்த்த முலைப்பற்றி வாங்க : பசுக்களின் பருத்த மடிகளைப் பிடித்து இழுக்க,

குடம் நிறைக்கும் : பால் வெள்ளத்தால் குடங்களை நிறைத்துவிடும்.

## விளக்கம்

புருஷோத்தமனையே எல்லாவகைப் பயனாகவும் கொண்டு வேறொரு பயனையும் கருதாது நாங்கள் பகவந்நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டே பாவை நோன்புக்கு அங்கமாக சங்கற்பித்து நீராடினால், நோன்பு நோற்க அனுமதி அளித்தவர்களும் க்ஷேமமாயிருக்கும்படி நாடெங்கும் மாதம் மும்மாரி பெய்யும்; நோயும் க்ஷாமமும் நீங்கும்; நீர்வளம், நெல்வளம், பால்வளம் ஆகிய வளங்களெல்லாம் ஏற்படும் என்கிறார்கள்.

'தீங்கின்றி' என்று தொடங்கி ஆறு அடிகளால் இம்மார்கழி நோன்பினால் நாட்டுக்கு விளையும் நன்மையைச் சொல்லுகிறார்கள். 'ஒன்பது தாள் வெய்யிலும் ஒரு நாள் மழையுமாய்'த் திங்கள் மும்மாரி பெய்யுமாம்.

'குவளைப் பூவிலே வண்டு மதுபானம் பண்ண என்று படிந்த தசையிலே கயல் ஊடே உகள, செந்நெல்லும் குவளையும் ஒக்க அசைந்து, தூங்கு மெத்தையிலே (தூங்கு மஞ்சத்திலே) உறங்கும் ராஜபுத்திரர்களைப்போலே' வண்டுகள் உறங்கும் என்பது வியாக்கியானம்.

முதலாவது பாசுரத்தில் 'நாராயணனே' என்று இம்மைக்கும் மறுமைக்கும் நாதனாகிய பரமபத நாதனைக் குறிப்பிட்டார்கள். இரண்டாம் பாசுரத்தில் 'பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்' என்று பள்ளிகொண்ட வியூகமூர்த்தியைக் குறிப்பிட்டார்கள். இம்மூன்றாம் பாசுரத்தில் அங்கு நின்றும் அவதரித்த விபவ மூர்த்தியைக் குறிப்பிடுகிறார்கள்:

'பிறரை ஹிம்ஸித்துத் தன் வயிற்றை வளர்க்கவேணும் என்றிருக்குமவன் அதமன்; பிறரும் ஜீவிக்கவேணும், நாமும் ஜீவிக்கவேணும் என்றிருக்குமவன் மத்யமன்; தன்னை அழிய மாறியாகிலும் பிறர் ஜீவிக்க வேணும் என்னுமவன் உத்தமன்' என்பது வியாக்யானம். தன் வடிவைக் குறுகச் செய்து இரந்தும் தேவர்களை வாழ்வித்ததால் உத்தமன் என்பர்.

## உள்ளுறை பொருள்

'உத்தமன் பேர் பாடி' அவனை அனுபவிக்கும்போது உலகம் குறைகளில்லாமல் நலம் பெறும்.

'கயல் உகள' என்பது இம் மண்ணுலகிலுள்ள ஆத்மவர்க்கங்கள் களித்துத் துள்ளுவதற்கு அறிகுறி. 'பொறிவண்டு கண்படுப்ப' : ஞானிகளின் இதய மலரில் தெய்வ வண்டாகிய இறைவன் கண் வளர்வதற்கு நினைவுக்குறி.

கடைசி மூன்று அடிகளின் உட்பொருள்; சீடன் ஆசிரியரது திருவடியைப் பற்றிக்கொண்டு பிரார்த்திக்க அவனுக்கு அவர் பரிபூரண ஞானத்தை வழங்குவார் என்பது. 'வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்' நல்லாசிரியர்களைக் குறிக்கும்.

## கவிநயம்

நாட்டின் செழிப்பிற்கும் இயற்கையழகுகளுக்கும் இது ஓர் அழகான கவிதைச் சித்திரம். நாட்டின் செல்வச் சிறப்புடன் ஆண்டாளின் சொற்செல்வத்திற்கும் இப்பாசுரம் ஓர் அருமையான சான்று.





ஆழி மழைக்கண்ணா!
முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து...
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து...
சரமழை போல் வாழ உலகினில் பெய்திடாய்



## 4

### பெண்களின் மழைப்பாட்டு

ஆழி மழைக்கண்ணா! ஒன்றும் நீ கைகரவேல்
    ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி,

ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
    பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்

ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
    தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்,

வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
    மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| ஆழி மழைக்கண்ணு | : கடல்போல் கம்பீரமான மழைக்கு உரிய தேவதையே! |
| ஒன்றும் நீ கை கரவேல் | : கையிருப்பாக ஒன்றையும் நீ ஒளித்து வைத்துக் கொள்ளாதே; |
| ஆழியுள் புக்கு | : கடலினுள் புகுந்து |
| முகந்து கொடு | : நீரை முகந்துகொண்டு |
| ஆர்த்து ஏறி | : ஆரவாரஞ் செய்து வானத்தில் ஏறி, |
| ஊழி முதல்வன் உருவம் போல் | : காலம் முதலிய எல்லாவற்றுக்கும் முதற்காரணனுன எம்பெருமானது திருமேனிபோல் |
| மெய் கருத்து | : உடம்பு கருத்துத் தோன்றி, |
| பாழி அம் தோளுடை | : வலிமை பொருந்திய அழகிய தோள்களையுடைய |
| பற்பநாபன் கையில் | : எம்பெருமானுடைய கையிலுள்ள |
| ஆழிபோல் மின்னி | : சக்கரம் போல் மின்னி, |
| வலம்புரிபோல் நின்று அதிர்ந்து | : வலம்புரிச் சங்குபோல் நிலையாக இடித்து, |
| சார்ங்கம் உதைத்த சரமழை போல் | : அப்பெருமான் கையிலுள்ள சார்ங்கம் என்னும் வில் உதைத்துத் தள்ளிய அம்பு மழை போல, |
| வாழ உலகினில் | : உலகத்தில் எல்லாருக்கும் வாழ்வு உண்டாகவும், |
| நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்து | : நோன்புநோற்கின்றநாங்களும் மகிழ்ந்துமார்கழிநீராட்டம் செய்யவும், |
| தாழாதே பெய்திடாய் | : தாமதியாமல் பெய்வாயாக. |

## விளக்கம்

மழைக்கு உரிய தேவதையைக் குறித்துச் சிறுமியர் பாடுகிறார்கள். தாம் நோன்பு நோற்றால் நாட்டுக்கு விளையும் நன்மைகளை, முன் பாட்டில் சொல்லியிருப்பதுபோல், இச் சிறுமியர் மனோரதித்துச் சொல்லிக் கொண்டிருக்கும் போது, 'எம்பெருமான் அடிபணியும் இவர்களுக்கு நாமும் நம்மால் இயன்ற உதவியைச் செய்வோம்' என்று மழைக்கு உரிய பர்ஜந்யன் (மேகம்) இவர்களது கட்டளையை எதிர் நோக்குகிறானும்.

பகவானுடைய பக்தைகள் பகவானைத் தவிர வேறு எந்த தேவதையையும் பிரார்த்திப்பதில்லை. மழைக் கடவுளே இவர்களைப் பிரார்த்தித்துச் கட்டளையை எதிர்ப்பார்க்கிறானும்:

இந்த நிலையில் இந்தச்சிறுமியர், 'மழையே! உலகம் வாழவும், நாங்கள் மகிழ்ந்து மார்கழி நீராடவும், ''பெண்கள் நோற்றமதென்ன! மழைபெய்ததென்ன!'' என்று ஆய்க்குல முதியவர் கொண்டாடவும், பெய்வாயாக' என்று கட்டளையிடுகிறார்களாம்.

'ஜகத்தை ஈரக் கையாலே தடவி நோக்கவல்லவன்' என்று பகவானால் மதிக்கப் பெற்றவன் மழைக்கண்ணன் என்றும், நாட்டார் சிறுமை பாராது தன் பெருமைக்கு ஈடாகப் பொழிவதால் 'ஆழிமழைக்கண்ணன்' என்றும் விரிவுரை கூறுவர்.

'ஒன்றும் நீ கைகரவேல்' : 'உன்னுடைய ஔதார்யத்தில் (வள்ளன்மையில்) ஒன்றும் மாறாதபடி தோற்றவேணும்.' நாடு முழுதும் உன் தொனி கேட்டு வாழும்படி மின்னி முழங்கி வில் விட்டுக் கொண்டு பெரிய சம்பிரமத்தோடே வந்து தோற்ற வேணும்' என்கிறார்கள்.

பக்தைகளானதால் தங்கள் தலைவனுடைய உருவத்தையும் அவனைச்சார்ந்த பொருட்களையும் உபமானமாகக் கூறுகிறார்கள்.

கண்ணனது மேனி நிறத்தைக் காண விரும்பும் இவர்கள் அதன் 'போலி'யையாவது கண்டு களிப்போம் என்று ஆசைப்படுவதாகவும் கருதலாம்.

'ஆழி மழைக் கண்ணா' என்பதில் 'ஆழி' 'மண்டல' த்தைக் குறிப்பதாகக் கொண்டு, 'பூ மண்டல மெங்கும் பெய்யும் மழைக்கு அதிதேவதையே!' என்றும் பொருள் கூறலாம். 'சிறுமியர்களாகிய நாங்களும் மழைபெய்யும் பொருட்டு மார்கழி நீராடி நோன்பு நோற்பதால், உலகம் வாழப்பெய்திடாய்' என்று இவர்கள் மழைத்தேவனை நியமிப்பதாகவும் இப்பாசுரத்திற்குப் பொருள் சொல்லலாம்.

## உள்ளுறை பொருள்

பகவானுடைய அழகிய குணக்கடலில் புகுந்து அனுபவித்து அக்கடலை உள்ளே அடக்கிக்கொண்டு உலகம் வாழப் பொழிகின்ற ஆசிரியர்களை 'மேகம்' என்று கூறுவதுண்டு.

மேகம் மழைபெய்து உயிர்களைக் காப்பாற்ற வானப் பரப்பெங்கும் திரிவதுபோல், நல்லாசிரியர்களும் 'திருமால் திருமேனி ஒக்கும்' பேறு பெற்று உலகம் உய்ய வழிகாட்ட எங்கும் சஞ்சரிக்கிறார்களாம்.

## கவிநயம்

'மழைக்கண்ணா! ஒன்றும் நீ கைகரவேல்' என்பது சிறுமியுள்ளத்தை அப்படியே காட்டுகிறது. மழைபோல் கண்ணனுடைய அருளும் இறங்கி வந்து நாட்டையும் தங்களையும் வாழ்விக்கும் என்று உறுதியாக நம்புகின்ற ஒரு குறிப்பும் இக்கவிதைக் கிடையே மின்னி முழங்குகின்றது.





தூய பெருநீர் யமுனைத் துறைவனை...
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்



## 5

*தொழுது பாடிச் சிந்திக்கப்*
*பிழைகள் எல்லாம்*
*தீயினில் தூசாகும்*

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,
   தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
   தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை,
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
   வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
   தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| மாயனை | : மாயச் செயல்களையுடைய கண்ணனை. |
| மன்னு வட மதுரை மைந்தனை | : தன்னுடைய தொடர்பு நிலை பெற்றுப் பொருந்தியிருக்கும் வட மதுரையில் அவதரித்தத் தலைவனை, |
| தூய பெருநீர் யமுனைத் துறைவனை | : தூய்மையான வெள்ளமுடைய யமுனை தீரவாசியை, |
| ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை | : கோகுலத்தில் தோன்றிய அழகிய தீப மங்கள ஜோதியை, |
| தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை | : தன் பிறப்பினால், பெற்ற வயிற்றுக்கு மேன்மையுண்டாக்கிய கண்ணனை, |
| தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது | : நாங்கள் தூய்மையுடையவர்களாக வந்து தூய மலர்களைத் தூவித் தொழுது, |
| வாயினால் பாடி மனதினால் சிந்திக்க | : வாயாரப் பாடி நெஞ்சார நினைக்க, |
| போய பிழையும் | : பகவத் ஞானம் பிறப்பதற்கு முன்பு செய்த பிழைகளும், |
| புகுதருவான் நின்றனவும் | : இனிமேல் நம்மை அறியாமல் நேரிடத்தக்க பாவங்களும், |
| தீயினில் தூசு ஆகும் | : தீயிலிட்ட பஞ்சு போலத் தீய்ந்து போகும்; |
| செப்பு | : ஆகையால் அவனுடைய திருநாமங்களைச் சொல்வாயாக: |

## விளக்கம்

'இந்நோன்பிலே இறங்கி இறைவனை அடைய விரும்பு கிறோமே: ஆனால் நாம் நெடுநாளாகச் செய்து வந்திருக்கும் பிழைகள் பல இருக்கின்றனவே, அப்பிழைகளின் விளைவு இந்த நற்காரியத்திற்கு இடையூறாகாதோ? என்று நோன்பு நோற்கும் பெண்களில் ஒருத்தி சந்தேகித்துக் கேட்பதாகக் கருதி, அந்த ஐயவினாவுக்கு இந்தப்பாசுரத்தை வேறொருத்தி - ஞானமுடையாள் ஒருத்தி - கூறும் விடையாகக் கொள்ளலாம்.

பிழைகளாகிய விரோதிகளைப் போக்கிக் கொண்டு வந்து இதிலே இறங்குவது என்பதில் பொருள் இல்லை. பகவந்நாம ஸங்கீர்த்தனத்தில் இன்புற்று ஈடுபடவே, ஏற்கனவே செய்த பிழைகளும் இனிமேல் நேரக்கூடிய பிழைகளும் தாமே ஒழிப் போய்விடும் என்பது பாட்டின் பொருள். 'சேர்ப்பால் (குழம் புப்பால்) போக ரூபமாகப் பருகுமவனுக்குத் தன்னடையே பித் தம் போமா போலே' என்பது வியாக்கியானம்.

மாயச் செயல்களையுடைய பரமபத நாதன் 'ஒருருக்குத் தன்னைக் கொடுத்த நீர்மை' யாகிய ஆச்சர்யத்தை, அவதார ஸௌலப்யத்தைக் குறிப்பிடுகிறது 'மாயனை மன்னு வடமதுரை மைந்தனை' என்னும் சொற்றொடர்.

பகவத் சம்பந்தம் மாறாத பிரதேசம் என்பர் 'மன்னு வட மதுரை'யை. வாமனாவதார காலத்தில் வடமதுரையே வாமனன் தவஞ்செய்த ஸித்தாச்ரமமாக இருந்ததாம். இராமாயண காலத்தில் சத்ருக்னன் லவணாசுர வதஞ் செய்து அரசாண்ட இடமாக இருந்ததாம்.

யமுனை கண்ணனுடைய தொடர்பினால் 'தூய பெரு நீர் யமுனை' என்று பாராட்டப் பெறுகின்றது. மதுரையில் மறைந்து ஆய்க்குலத்தில் தோன்றிய ஜோதியை 'ஆயர்குலத்தினில் தோன் றும் அணிவிளக்கு' என்ற அந்தகாரத்தில் தீபம் போலவும், ஆய்பாடிக்கு மங்கள தீபமாகவும் கண்டு குதூகலமடைகிறார் கள்.

பகவானை நோக்கி வருவதே தூய்மைத் தரும்; இந்த வருகைக்கு மேற்பட ஒரு சித்தி தேடவேண்டாம் என்பது வியாக்கியானம்; கண்ணுக்குத் தோற்றின மலரை அடைவு கெடப் பரிமாறித் தொழுதால் போதுமாம். இதையே 'தூமலர் தூவித் தொழுது' என்கிறார்கள். 'ப்ரேமம் (அன்பு) அடைவு பார்க்கவொட்டாது' என்பது வியாக்கியானம்.

'கயிற்றுத் தழும்பை வயிற்றில் உடையவன்' என்பது 'தாமோதரன்' என்னும் திருநாமத்தின் பொருள். யசோதை கட்டிய கயிற்றுத் தழும்பை வயிற்றில் உடையவன் என்று பொருள்படும். இந்த நாமம் பகவானுடைய எளிமைக்கு ஒரு நினைவுக்குறி. இத்தகைய பந்தத்தை அனுஸந்தித்தால் ஆச்சரி தருடைய சம்சாரபந்தம் போகும் என்பது வியாக்கியானம்.

'செப்பு' என்பது 'சொல்லு' என்னும் பொருளில் ஒரு பெண்ணை முன்னிலைப்படுத்திக் கூறுகிறது.

## உள்ளுறை பொருள்

பாகவத குலத்திற்கு அறிகுறி ஆயர்குலம். 'அவன் கொடுத்த கரணத்தால் அவனை ஆச்ரயிக்கப் பெற்றோம்' என்று பாகவதர்கள் பாடி நினைப்பர் என்பது, 'வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க' என்னும் தொடரின் உட்பொருள்.





புள்ளும் சிலம்பினகாண்; புள்ளரையன் கோயிலில்
சங்கின் பேரரவம் கேட்டிலையோ?... முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்து



## 6

### ‘இனியாவது எழுந்திரு’ என்று ஒருத்தியைத் துயிலுணர்த்துதல்

(திருப்பாவையின் முதலாவது பள்ளியெழுச்சிப் பாட்டு)

புள்ளும் சிலம்பின காண்; புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| பிள்ளாய் | : (இங்கே) சிறு பெண்ணே! |
| புள்ளும் சிலம்பினகாண் | : பறவைகளும் கூவத் தொடங்கின; |
| புள் அரையன் கோயிலில் | : பட்சிராஜாவான கருடனுக்குத் தலைவனின் ஸந்நதியில் |
| வெள்ளை விளி சங்கின் | : எல்லோரையும் கூவி அழைக்கிற வெண்சங்கின் |
| பேரரவம் கேட்டிலையோ | : பேரொலியையும் கேட்கவில்லையோ? |
| பேய்முலை நஞ்சு உண்டு | : பேய்மகளான பூதனை தன்னுடைய ஸ்தனத்திலே தடவி வந்த நஞ்சை உயிரோடும் பருகி, |
| கள்ளச் சகடம் கலக்கு அழிய | : கள்ளத்தனமாக அசுர ஆவேசம் பெற்று வந்த வண்டியானது கட்டழிந்து சிதறும்படி |
| கால் ஓச்சி | : காலால் ஓங்கி உதைத்து, |
| வெள்ளத் தரவில் | : திருப்பாற் கடல் வெள்ளத்தில் அனந்த சயனத்தில் |
| துயில் அமர்ந்த வித்தினை | : யோக நித்திரையில் அமர்ந்திருக்கும் விதையாகிய பகவானை |
| உள்ளத்துக் கொண்டு | : உள்ளத்திலே அமரச் செய்து |
| முனிவர்களும் யோகிகளும் | : மன்னசீலரான (அதாவது தியானம் செய்யும் தன்மையரான) ரிஷிகளும் யோகப்யாஸம் செய்கிற கைங்கர்ய சீலர்களும் |
| மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம் | : சாவதானமாக எழுந்திருந்து 'ஹரி: ஹரி;' என்று சொல்லுகிற பேரொலியானது |
| உள்ளம் புகுந்து குளிர்ந்து | : உன் உள்ளம் புகுந்து குளிர, |
| எழுந்திராய் | : இனியாகிலும் எழுந்திரு. |

## விளக்கம்

இந்தப்பாட்டு முதல் பத்து பாசுரங்களால் எழுந்தவர்கள் எழுந்திராததர்களை எழுப்புகிறார்கள். இப்பத்துப் பாசுரங்களையும் இத்திருப்பாவையின் 'திருப்பள்ளி யெழுச்சிப் பாடல்கள்' என்று சொல்லலாம்.

முதன் முதல் ஒருத்தியை எழுப்ப, உறக்க மயக்கத்தால் அவள், 'பொழுது விடிந்து விட்டதா என்ன?' என்று கேட்கக் கூடும். அதற்கு விடையாகப் 'புள்ளும் சிலம்பின காண்' என்று பொழுது புலர்ந்ததற்கு ஓர் அடையாளம் சொல்லுகிறார்கள்.

பிறகு 'கோயிலில் திருப்பள்ளி யெழுச்சிக்கு ஊதின சங்கின் ஒலி காதில் விழவில்லையா?' என்று கேட்டு அதையும் பொழுதுபுலர்ந்ததற்கு அடையாளமாகக் கூறுகிறார்கள். மூன்றுவது அடையாளமாக முனிவரும் யோகியரும் 'ஹரி : ஹரி :' என்று சொல்வதால் எழுகின்ற ஒலியையும் குறிப்பிடுகிறார்கள்.

திருவாய்ப்பாடியிலே முனிவர்களும் யோகிகளும் உண்டோ என்னில், கிருஷ்ணன் வந்து அவதரித்த பின்பு இடையருடைய பசுநிரைக் கொட்டில்களிலே வந்து அவர்கள் 'படுகாடு கிடப்பர்கள்' என்பது வியாக்கியானம்.

ஒரு செயலும் செய்யாது பகவானுடைய குணானுபவத்தில் தியானவாயிலாக ஈடுபடும் மனனசீலர்கள் 'முனிவர்கள்'; கைங்கர்ய நிஷ்டர்கள் 'யோகிகள்'.

புள் அரையன் - பட்சிராஜன்; கோ - தலைவன். பட்சிராஜாவுக்குத் தலைவனாகிய பகவான்; இல் - சன்னதி, 'புள்' என்பதற்கே 'கருடன்' என்று பொருள் கொண்டு அவனுக்கு அரசனின் கோயில் என்றும் கூறலாம்.

பிள்ளாய் : கிருஷ்ண பக்தியின் இனிமையை அறியாதவள் பகவத் விஷயத்தில் புதியவள்.

கர்ப்பிணி வயிற்றுப் பிள்ளைக்கு நோவு ஏற்படாதபடி மெள்ள எழுந்திருப்பதுபோல் பகவானை உள்ளத்துள் கொண்ட முனிவர்களும் யோகிகளும் சாவதானமாய் •எழுந்திருக்கிறார் களாம்.

'குளிர்ந்து' என்பதை 'குளிர்ந்தது' என்ற வினைமுற்றின் தொகுத்தல் விகாரமாகக் கொண்டு பொருள் கூறுகிறது வியாக்கியானம்.

## உள்ளுறை பொருள்

'பிள்ளாய்! எழுந்திராய்' என்பதைத் திறவு கோலாகக் கொண்டு திறந்து பார்க்கலாம் இப்பாசுரத்தின் உள்ளுறை பொருளை. பகவத் விஷயத்திலே புதிதாக ருசி கொண்ட சீடனுக்கு, அதாவது பகவத் சம்பந்தம் நூதனமாகப் பெற்றிருப்பவனுக்கு, ஆசாரியன் உபதேசம் செய்வது பொருள்.

ஞானத்தையும் அனுஷ்டானத்தையும் இரண்டு சிறகுகளாகக் கொண்டு சீடனை இறைனிடம் சேர்ப்பிக்கும் ஆசாரியனுக்குப் 'புள்' அறிகுறி. 'வித்து' : ஜகத்ரக்ஷணத்தைச் சிந்தை செய்த வண்ணம் அறிதுயில் அமர்ந்திருக்கும் ஆதிமூலம்.

இது முதல் பத்துப் பாசுரங்களால் பொய்கையாழ்வார் முதலான ஆழ்வார்கள் பதின்மருக்கும் திருப்பள்ளியெழுச்சி பாடுவதாக உள்ளுறை கூறினார் ஸ்ரீவானமாமலைச் சீயர்.





மத்தினல்

ஓசை படுத்த தயிர்அரவம் கேட்டிலையோ?



## 7

கண்ணனிடம் ஈடுபட்டு
மெய்ம்மறந்து கிடக்கும்
ஒருத்தியை எழுப்புவது

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தம்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்-
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து[பெண்ணே
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ ?
தேச முடையாய்! திறவேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| பேய்ப்பெண்ணே | : மதிகெட்ட பெண்ணே! |
| கீசு கீசு என்று எங்கும் | : எங்கும் கீச்சுக் கீச்சென்று |
| ஆனைச்சாத்தம் கலந்து பேசின | : வலியன் குருவிகள் என்ற கீச் சாங் குருவிகள் பேடையுடன் சேர்ந்து கத்துகிற |
| பேச்சரவம் கேட்டிலையோ | : குரலின் ஒலியை நீ இன்னம் கேட்கவில்லையோ? |
| காசும் பிறப்பும் | : காசுமாலை என்ற அச்சுத்தாலி யும், ஆமைத்தாலி என்ற ஆபரணமும் |
| கலகலப்பக் கை பேர்த்து | : கல கல வென்று ஒலிக்கும்படி கைகளை முன் பின்னாக மாறி மாறி அசைத்து, |
| வாச நறுங்குழல் ஆய்ச்சியர் | : நறுமணம் கமழும் கூந்தலை யுடைய இடைச்சியர் |
| மத்தினால் ஓசை படுத்த தயிர் அரவம் | : மத்தால் தயிர் கடையும் ஓசை யையும் |
| கேட்டிலையோ | : நீ கேட்கவில்லையோ? |
| நாயகப் பெண்பிள்ளாய் | : பெண்களுக்கு நாயகமாக இருப் பவளே ! |
| நாராயணன் மூர்த்தி கேசவனை | : நாராயணனின் அவதார மூர்த்தியாகிய கண்ணனை |
| பாடவும் நீ கேட்டே கிடத்தியோ | : நாங்கள் பாடும்போதும் நீ கேட்டுக் கொண்டே படுத்துக் கிடக்கிறாயோ? |
| தேசம் உடையாய் ! திற | : தேஜஸ் அல்லது ,மிக்க ஒளி வாய்ந்த பெண்மணியே ! நீ எழுந்து வந்து கதவைத் திறப்பாயாக. |

## விளக்கம்

பகவத் விஷயத்திலே நீண்ட நாளாக ஆழ்ந்திருந்தும் மறந்து கிடப்பது போலவும்; புதுமை பாவிப்பது போலவும் மெய்மறந்து கிடப்பவளை நோக்கி, பெண்களை எழுப்பி எழுப்பித் திரட்டிக்கொண்டு இவள் மாளிகை வாசலில் வந்து நிற்கும் ஆய்ச்சியர்கள், 'பொழுது விடிந்தது காண், எழுந்திராய்' என்கிறார்கள்.

இவளும் அடையாளம் கேட்டாள். அதற்கு விடையாகத் தான் இவளை எழுப்புகின்ற பெண்கள் சிறிது ஆத்திரமாக 'கீச்சுக் கீச்சென்னும் கீச்சாங் குருவிகளின் பேச்சரவமும் காதில் விழவில்லையா, பேய்ப் பெண்ணே?' என்கிறார்கள். இவள் பேசாமல் கிடக்க அவர்கள், 'ஆய்ச்சியர் தயிர் கடையும் ஓசையும் கேட்கவில்லையோ?' என்கிறார்கள்.

'பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?' என்ற கேள்வியில் 'நாங்கள் பாடுவது தாலாட்டுப் பாடுவது போலிருக்கிறதா? என்ற குறிப்பும் தொனிக்கிறது. 'நாராயணன்': 'முகந்தோற்றமே நின்று வாத்ஸல்யத்தாலே ரக்ஷிக்கக்கடவன் ஸர்வேச்வரன்' 'மூர்த்தி': ஸர்வேச்வரனுடைய சீலத்தை வெளியிடுவது. கண்ணுக்குத் தோன்றும்படி நின்று தம் விரோதிகளைப் போக்குகின்ற கண்ணனைக் 'கேசவன்' என்று குறிப்பிடுகிறார்கள்.

'பேய்ப் பெண்ணே!, என்று முதன் முதல் அழைத்தவர்கள், பாட்டினிடையே 'நாயகப் பெண்ணே!' என்று அழைத்து, இறுதியில் 'தேஜஸ் உடையவளே!' என்று அழைக்கிறார்கள். அன்பு கொஞ்ச ஏசுவது போல், 'எங்கள் கூட்டத்திற்குத்தலைவியாகிய நீ எங்களை யெல்லாம் திரட்டிக் கொண்டு போகவேண்டாமா? உறக்கத்திற்குத் தானோ உன்தலைமைப் பதவி? என்றவர்கள், 'உன்னைக் காணப்பெறாமல் பொழுது விடிந்தது இருளடைந்தது போலிருக்கும் எங்களுக்கு இந்த இருள் தீர உன் ஒளி வாய்ந்த செல்வ முகத்தைக் காட்டாயோ, கதவு திறந்து?' என்று கூறி முடிக்கிறார்கள்.

'ஆனைச்சாத்தம்' என்ற வலியன் குருவியை 'ஆனைச்சாத்தன்' என்றும் கூறுவதுண்டு: ஸம்ஸ்கிருதத்தில் 'பரத்வாஜ பக்ஷி':

## உள்ளுறை பொருள்

பகவத் விஷயத்தைக் காட்டிலும் பாகவத விஷயம் சிறந்தது என்பதை அறிந்தும் மறந்திருப்பவரை எழுப்புவது இப்பாட்டின் உட்பொருள்: சங்கோசத்துடன் தனித்திருக்கும் பரம பாகவதர் ஒருவரை அழைப்பதாகவும் கூறுவதுண்டு.

'காசும் பிறப்பும் கலகலப்ப' : திருமந்திரமும், த்வய சரம சுலோகங்களும் ஒன்றோடொன்று சேர்ந்து தொனிக்க; 'தயிர் அரவம்' : திவ்யப் பிரபந்த அநுஸந்தானம்.

'தேசம் உடையாய்! திற' : பகவத் குணாநுபவத்தால் உண்டான மஹாதேஜஸ் காட்டில் எரிந்த நிலவாகாது; பிறர் அனுபவித்துத் தங்கள் அஞ்ஞானத்தைப் போக்கிக் கொள்ளுமாறு உதவ வேண்டும் என்பது குறிப்பு.





எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தன காண்.,.
கூவுவான் வந்து நின்றேம்



## 8

கண்ணனுடைய அருளுக்கு மிகவும்
தகுதி வாய்ந்த ஒருத்தியை
எழுப்பும் பாட்டு

கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய்; பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| கீழ்வானம் வெள்ளென்று | : கீழ்வானம் வெளுத்திருக்க; |
| எருமை சிறு வீடு | : எருமைகள் சிறிது நேரம் விடும் போது, |
| மேய்வான் பரந்தனகாண் | : பனிப்புல்/மேயப் பரவிச் சென்றன; |
| மிக்குள்ள பிள்ளைகளும் போவான் போகின்றாரை | : நீராடப் புறப்பட்டவர்களான மிகுதியாகவுள்ள பெண்களையும் |
| போகாமல் காத்து | : முன்னமே போகாமல் தடுத்து |
| உன்னைக் கூவுவான் வந்து நின்றோம் | : உன்னைக் கூப்பிடும் பொருட்டு நாங்கள் வந்து நிற்கின்றோம்; |
| கோதுகலமுடைய பாவாய் | : கண்ணனால் கொண்டாடப் பெறும் அழகிய பெண்ணே! |
| எழுந்திராய் | : எழுந்திருப்பாயாக, |
| பாடிப் பறை கொண்டு | : கண்ணனுடைய குணங்களைப் பாடி; நோன்பிற்கு அவனிடம் பறையை வேண்டிக் கொண்டு, |
| மாவாய் பிளந்தானை | : குதிரை வடிவமான அசுரனது வாயைப் பிளந்தெறிந்தவனும், |
| மல்லரை மாட்டிய | : கம்ஸனால் ஏவப்பட்ட பெருமல்லர்களையும், துரியோதனனின் நிலவறை மல்லர்களையும் மாளச் செய்தவனும், |
| தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால் | : தேவாதி தேவனுமாகிய பகவானை அணுகி அடிபணிந்தால், |
| ஆ ஆ என்று ஆராய்ந்து அருள் | : 'ஐயோ!' என்று இரங்கிக் குறைகளை விசாரித்து அருள் செய்வான். |

குறிப்பு : 'அருண்மேலோ ரெம்பாவாய்' என்று ஆதியில் மூலபாடம் இருந்து சிதைந்திருக்கவேண்டும் என்று ஊகிப்பவருண்டு. அருண்ம் ஏலோ ரெம்பாவாய், அருண்ம் - 'அருளும்' என்பதன் திரிபு.

## விளக்கம்

'எல்லாரும் திரண்டு வந்து அழைக்க வேண்டும் இவளை' என்று சொல்லும்படி கண்ணனுடைய அருளுக்கு மிகவும் தகுதி வாய்ந்தவள் என்பதை வற்புறுத்துகின்றது 'கோதுகலமுடைய பாவாய்!' என்னும் சொற்றொடர். 'கௌதூஹலம்' என்னும் ஸம்ஸ்கிருதச் சொல்லின் விகாரம் 'கோதூகலம்' : 'ஆசை' என்று பொருள்—அதாவது கண்ணனுடைய ஆசை.

இவளை முன்னிட்டுக் கொண்டு செல்லக் கண்ணனுடைய அருள் எல்லோருக்கும் கிடைக்கும் என்று கருதுமாறு அப்பிரானால் கொண்டாடப் பெறுகின்றவள் இவள் என்பது குறிப்பு.

ஊர் மாடுகளுடன் போய் வெளியிடங்களில் மேய்வதற்கு முன்னே எருமைகளின் சொந்தக்காரர்களான ஆயர்கள், அவை அதிகமாய்ப் பால் கறக்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் சிறு தோட்டங்களில் அவற்றைப் பனிப்புல் மேய விடுவார்கள். இதைத்தான் 'எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்' என்கிறார்கள்.

கிழக்கு வெளுக்கையில் பனிப்புல் மேயச் சிறிது நேரம் விட்டு மாடு கறப்பார்கள்; கறந்த பின்பு பகலெல்லாம் மேய்ந்து வரும்படி மேய்ச்சற் காடுகளுக்கு அனுப்புவார்கள். இதைக் கருதித்தான் பனிப்புல் மேய்கையைச் 'சிறுவீடு' என்கிறார்கள்.

கண்ணனுடைய வீர சரிதங்களைப் பாடிக் கங்கு கரையில்லாமல் நெஞ்சிலே பொங்குகின்ற கிருஷ்ண பக்தியை அணைகடந்து பெருகுமாறு வாய்க்கால் வெட்டிக் கொள்வோம் என்கிறார்கள்

பறை கொள்ளுதல் : நாட்டார்க்கு நோன்பு; இவர்களுக்குத் தேவாதி தேவனைச் சேவிக்கையே பயன்.

'ஆ ஆ' : 'நாம் இவர்களிருக்குமிடத்தே போய் அருள் செய்ய வேண்டியிருக்க, அன்பிற்குரியவர்களை ஆயாசப்படுத்தினோமே!' என்று கண்ணன் இரங்கி அருள் செய்வான்; இரக்கத்துடன் இவர்கள் வந்த காரியத்தை ஆராய்ந்து இனிது நிறைவேற்றுவான் என்கிறார்கள்.

## உள்ளுறை பொருள்

'கோதுகலமுடைய பாவாய்!' - பகவானுடைய அபிமானத்திற்கு மிகவும் தகுதிவாய்ந்த ஒரு பாகவதருக்கு அறிகுறி. இவரை முன்னிட்டுக் கொண்டு பகவானை அணுகுவதற்கு ஏற்ற காலம் வந்தது என்கிறார்கள்.

'கிழக்கு வெளுத்தது' : ஸத்வகுணம் தலையெடுப்பதற்கு அறிகுறி, 'எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்' : தமோ குணங்கள் விலகிப்போவதைக் குறிப்பது.





சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்;
மாமீர்! அவளை எழுப்பீரோ?



## 9

‘ கண்ணன் வந்தபோது வருகிறுன் ’
என்று போகாமலிருப்பவளை
எழுப்புவது

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்

மாமான் மகளே ! மணிக்கதவம் தாள்திறவாய் ;
மாமீர்’ அவளை எழுப்பீரோ ? உம்மகள்தான்

ஊமையோ ? அன்றிச் செவிடோ ? அனந்தலோ ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ ?

‘மாமாயன், மாதவன், வைகுந்தன்’ என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

| | | |
|---|---|---|
| தூமணி மாடத்து | : | குற்றமில்லாத இரத்தினங்கள் இழைத்துச் செய்த மாளிகையில் |
| சுற்றும் விளக்கு எரிய | : | சுற்றிலும் விளக்குகள் எரியவும் |
| தூபம் கமழ | : | அகில் முதலியவற்றின் புகை மணம் கமழவும், |
| துயில் அணைமேல் கண்வளரும் | : | தூங்குவதற்கு உரிய மென்மையான படுக்கையிலே தூங்கிக் கொண்டிருக்கும் |
| மாமான் மகளே | : | மாமன் மகளே! |
| மணிக்கதவம் தாள்திறவாய் | : | மணிகளாலாகிய கதவின் தாழ்ப்பாளைத் திறப்பாய். |
| மாமீர் | : | மாமீ! |
| உம்மகள் தான் ஊமையோ | : | உம்முடைய மகள் ஊமையா? |
| அன்றிச் செவிடோ அனந்தலோ | : | அல்லாமல் செவிடா? அன்றிச் சோர்ந்து கிடக்கிறாளா? |
| ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ | : | எழுந்திருக்க முடியாதபடி பெருந்துக்கத்தில் காவலிடப் பட்டாளோ? அன்றி ஏதோ ஒருபெருந்துயில் மந்திரத்தினால் கட்டப்பட்டுக் கிடக்கிறாளா! |
| மாமாயன், மாதவன், வைகுந்தன் என்று என்று | ; | 'பெரிய மாயச் செயல்களையுடையவனே! திருமகள் நாயகனே! ஸ்ரீ வைகுண்ட நாதனே!' என்று இவ்விதமாகப் பலதடவையும் |
| நாமம் பலவும் நவின்று | : | பல திருநாமங்களை நாங்கள் சொல்வதால், |
| அவளை எழுப்பீரோ? | : | இனியாவது உம்முடைய அந்தப் பெண்ணை எழுப்ப மாட்டீரா? |

## விளக்கம்

'அந்தப் பெண்கள் அழைக்க, நீ பேசாமல் கிடந்து உறங்குகிறாயே, ஏன்?' என்று தாயார் பெண்ணைக் கேட்க, வெளியே நிற்பவர்கள், 'மாமீர்! அவளை எழுப்பீரோ? என்கிறார்கள்.

இப்படிச் சொல்லியும் அவள் எழுந்து வராததால் ஆத்திரமாக, 'ஊமையோ?' அன்றிச் செவிடோ?' என்றெல்லாம் கேட்கிறார்கள்.

'மாமீர்'; ஒருவரை மரியாதையாகக் கூப்பிடும் பன்மை.

'ஏமம்'; காவல். 'எழுந்திராமைக்குக் காவலிட்டாருண்டோ?' என்றும், 'நெடும்போது உறங்கும்படி மந்திரவாதம் பண்ணினாருண்டோ?' என்றும் கேட்கிறார்கள்.

'அவள் துயிலுணரும்படி திருநாமங்களைச் சொல்லுங்கள்' என்று தாயார் சொல்ல, 'நாங்கள் சொன்ன திருநாமங்கள் பல' என்கிறார்கள்.

'மாமாயன்'; மிகவும் ஆச்சர்யமான குணங்களாலும் செயல்களாலும் உள்ளத்தை வசீகரிப்பவன். நீர்மைக்கும் மேன்மைக்கும் அறிகுறியான திருநாமங்களையும், இரண்டுக்கும் நிதானமான 'திருமகள் நாயகன்' என்னும் நிலைமைக்கு அறிகுறியான திருநாமங்களையும் வாயாரச் சொல்லி விட்டோம், என்கிறார்கள்.

வெளியே நிற்பவர்கள், 'நாங்கள் இங்கே வந்து துவண்டு எங்கள் நெஞ்சு இருண்டு புகையுமாறு நின்று கொண்டிருக்கிறோம். நீயோ உன் மாணிக்க மாளிகைக்கு உள்ளே சுற்றும் விளக்கெரிய வாசனைப் புகை கமழத் துயிலணைமேல் கண்வளரும்படியாகப் பெற்றிருக்கும் பாக்யமே பாக்கியம்!' என்று வயிற்றெரிச்சலோடு பேசுவது போன்ற ஒருபாவம் தொனிக்கிறது பாசுரத்தின் தொடக்கத்திலே.

## உள்ளுறை பொருள்

'தூமணிமாடம்' குற்றமற்ற திருமேனியையும், 'சுற்றும் விளக்கெரிவது அத்திருமேனியிலே பிரகாசிக்கும் ஞானத்தையும் குறிப்பிடுகின்றன.

'தூபம்': ஞான தூபம்; இது கமழ்வது அநுஷ்டானத்திலே.

'துயிலணை மேல் கண்வளரும்': எம்பெருமானையே உபாயமாகப் பற்றிக் கிடக்கின்ற நிலை.

'மாமான் மகளே!' பகவானால் பிள்ளையாகக் கருதப்பெற்ற பாகவதரே!

'மணிக்கதவம் தாள்திறவாய்' : உம்மோடு நாங்கள் கலந்து கொள்வதற்கு விரோதியான எங்கள் தேக - ஆத்ம அபிமானங்களைப் போக்குவீர்' என்பது உட்பொருள்.

பகவானைத் தவிர வேறொன்றை உபாயமாகப் பற்றாத நிலையாகிய ஞானத்தை 'மாமீர்' என்கிறார்கள்.

### கவிநயம்

தோழிகள், 'நாங்கள் இரவென்று பாராமல் எழுந்து நோன்பு குறித்து வீடு வீடாக அலைந்து கொண்டிருக்க, நீயோ உள்ளே சுகமாய்த் துயிலணை மேல் கண் வளர்கின்றாய்'' என்றெல்லாம் அன்பும் பரிகாசமும் கலக்கக் குத்தலாய்ப் பேசுவது, ஆண்டாள் திருவாக்கிலே ஓர் அருமையான கவிதையாக வெளிப்படுகின்றது.

'சூடிக் கொடுத்த சுடர்க் கொடி'யில் படர்ந்த வாடா ஜோதி மலர்களில் ஒன்று இந்த அழகான பாட்டு.





போற்றப் பறைதரும் புண்ணியனால்...

கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்

தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?



## 10

'கண்ணன் காதல்' என்னும்
சுவர்க்கத்தில் இருக்கும்
ஒருத்தியை எழுப்புதல்

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொரு-
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும் [நாள்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற : ஸ்ரீ கிருஷ்ணநுபவத்துக்கு நோன்பு நோற்று அந்தச் சுவர்க்கத்தில் மூழ்கிப் பரவச மாகியிருக்கும்

அம்மனாய் : தலைவியே! நாயகப் பெண் மணியே!

வாசல் திறவாதார் : வாசற் கதவைத் திறவாதிருப் பவர்

மாற்றமும் தாராரோ : ஒரு மறுமொழியும் சொல்ல மாட்டாரோ?

நாற்றத் துழாய்முடி நாராயணன்: நறுமணமுள்ள திருத்துழாயை முடியில் அணிந்திருக்கும் ஸ்ரீமந் நாராயணன்

நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியன் : நாமாகப் போற்ற நமதுநோன் புக்கு வேண்டிய பறையைத் தரக் கூடிய புண்ணிய மூர்த் தியாவான்,

பண்டு ஒரு நாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த : முன்னொரு காலத்தில் எமன் வாயில் விழுந்த

கும்பகரணனும் தோற்றும் உனக்கே : கும்பகர்ணனும் உனக்குத் தோற்றுப் போய்,

பெருந்துயில்தான் தந்தானோ : தனது பெரிய தூக்கத்தைக் கொடுத்துப் போய்விட் டானோ?

ஆற்ற அனந்தல் உடையாய் : மிகவும் சோம்பல் உடை யவளே!

அருங்கலமே : கிடைத்தற்கு அரிய ஆபரண மாக எங்களுக்கு வாய்த்தி ருப்பவளே!

தேற்றமாய் வந்து திற : தெளிவுடன் வந்து கதவைத் திறப்பாயாக.

## விளக்கம்

'வாசல் செம்மினுல் வாயும் செம்மவேணுமோ?' என்று கேட்கிறுர்கள். காது குளிர மறுமொழி சொல்லா விட்டாலும் கண் குளிர உன்னை நாங்கள் காணும்படி கதவையாவது திறக்க லாகாதோ?' என்று கெஞ்சுகிறுர்கள்.

எங்கும் வியாபித்திருக்கும் பெருமான் என்பதைக் குறிப் பிட 'நாராயணன்' என்கிறுர்கள். இந்தப் பெருமானே, இவன் கதவைத் திறவாமலிருக்கும் போதும் உள்ளே புகுந்து இவளுக் குச் சுகாநுபவம் தருகின்றுனும். 'இத்தகைய பேறு பெற்றிருக் கும் இவளுக்கும் கும்பகர்ண நித்திரை வந்துவிட்டதோ?' என்று அதிசயிக்கிறுர்கள்.

'அருங்கலமே!' என்ற அழைப்பிலே, ஓர் அழகான நவ ரத்தின மாலை செய்து, அதற்கு நடுநாயக ரத்தினம் ஒன்று அழுத்திஞற் போல இவள் புகுந்து தங்கள் கூட்டத்தை அணி செய்ய வேண்டும் என்பது குறிப்பு.

'மிகவும் சோம்பலை உடையவளே! நீ உறக்க மயக்கத் துடன் தடுமாறிக்கொண்டே வராமல் தெளிந்து வந்து கதவு திறக்க வேண்டும்' என்பதற்கிடையே இவளை,

'ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!' என்று அழைப்பதில் ஹாஸ்யமும் தொனிக்கிறது.

## உள்ளுறை பொருள்

'நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற'வள், பகவானையே உபாய மாகப் பற்றியிருக்கும் பாகவதருக்கு அறிகுறி. இவர் பிற விஷ யங்கள் ஒன்றையும் கவனியாமல் தம்முடைய அனுபவத்திலே மூழ்கிப் பரவசமாய்க் கிடப்பது 'பெருந்துயில்'.

'வாசல் திறவாதார்!' 'அகங்காரத்தை நீக்கி அனுபவிக்கு மாறு இடம் கொடாவிட்டாலும்' என்பது குறிப்பு. 'மாற்றமும்

தாராரோ?'-'நாங்கள் கேட்டு வாழும் படியான ஒரு வார்த்தையும் அரிதோ?'

'குமபகரணன்' தமோகுணத்திற்கு அறிகுறி :

## கவிநயம்

இப்பாட்டிலுள்ள நகைச்சுவையும் கவிச்சுவையும் ரஸிகர்களின் கவனத்திற்கு உரியன.

கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ ?

என்ற தோழிகளின் பரிகாசம் மிகவும் ரஸமாக அமைந்திருக்கிறது.

தோற்றவர் பொருளை வென்றவர் கைப்பற்றிக் கொள்வது போல் கும்பகர்ண நித்திரையை இவள் பற்றிக் கொண்டதாகச் சொல்லுகிறார்கள். 'தோற்றும்' என்பதில் உம்மை இசைநிறைக்க வந்தது எனலாம்.

'ராமன் பரசுராமனை வென்று அவன் கையிலிருந்த வில்லை வாங்கிக் கொண்டது போல, நீ கும்பகர்ணனை வென்று அவனுடைய நித்திரையைக் கைக் கொண்டாயோ?' என்கிறார்கள்.

'இவள் அரைக்ஷணம் புறப்படாதொழிய, நெடுங்காலமாய்த் தோற்றுகிறது இவர்களுக்கு' என்பது ஆறாயிரப்படி அருளிச் செயல்.





கறவைக் கணங்கள் பலகறந்து...
குற்றம்ஒன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!...
தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட...
எற்றுக்கு உறங்கும் பொருள்?



# 11

## எல்லாவகையிலும் மேன்மை
## பெற்றிருக்கும் செல்வியை
## எழுப்புவது

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
  செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
  புற்றர வல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
  முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட,
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
  எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்

| | |
|---|---|
| கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து | : கன்றுகளோடு கூடிய கறவைப் பசுக்களின் கூட்டங்களைக் கறந்து. |
| செற்றார் திறல் அழியச் சென்று | : பகைவர் வலிமை அழியும்படி தைரியமாக அவர்கள் இருந்த இடங்களில் போய்; |
| செருச் செய்யும் | : போர்புரிகின்றவர்களும்: |
| குற்றம் ஒன்று இல்லாத | : ஒருவகைக் குற்றமும் இல்லாதவர்களுமாகிய |
| கோவலர் தம் பொற்கொடியே | : கோபாலகர்களின் குடியில் தோன்றிய பொன் கொடி போன்றவளே! |
| புற்றரவு அல்குல் புனமயிலே | : புற்றிலுள்ள பாம்பின் படம் போன்ற அல்குலும், காட்டில் வாழும் மயிலின் சாயலும் உடையவளே ! |
| போதராய் | : எழுந்து வருவாய். |
| செல்வப் பெண்டாட்டி | : செல்வமும் பெண்மையும் வாய்க்கப் பெற்றவளே; |
| சுற்றத்துத்தோழிமார் எல்லாரும் | : சுற்றத்தாரும் தோழிமார்களுமாகிய எல்லோரும் |
| வந்து நின் முற்றம் புகுந்து | : உன்னுடைய முன் வாசலிலே வந்து சேர்ந்து |
| முகில் வண்ணன் பேர் பாட | : மேகம் போல் வடிவழகும் வண்மையும் உள்ள கண்ணனது திருநாமத்தைப் பாட, |
| நீ சிற்றாதே பேசாதே | : நீ உடம்பு அசையாமலும் நாக்கு அசையாமலும், |
| எற்றுக்கும் உறங்கும் பொருள் | : என்ன பயன் கருதியோ, உறங்குகின்ற இந்தச் செய்கை? |

# விளக்கம்

'பொற்கொடி' என்றும், 'புனமயில்' என்றும், 'செல்வப் பெண்டாட்டி' என்றும் இவளைக் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. கண்ணன் கோவலர் தம் குலமணியாய், அழகின் நிலையமாய், செல்வத்துள் செல்வமாய் விளங்குவது போல், இவளும் எல்லாவிதத்திலும் மேன்மைப் பெற்று விளங்குகிறாளென்று கருதவேண்டும்.

'கற்றுக் கறவை'- அதாவது 'கன்றுகளான பசுக்கள்'-என்பதற்குத் தொனிப் பொருளாக' இப்பசுக்களும் கிருஷ்ண ஸ்பர்சத்தாலே கீழ்நோக்கிப் பிராயம் புகுகை (இளமைவருகை)' என்பது வியாக்கியானம்:

பசுக்களைப்போல் சாதுக்களாய்க் குற்றம் செய்யத் தெரியாத இக்கோவலருக்கும் பகைவர்கள், இவர்களுடைய சத்துருக்கள்.

அந்தச் சத்துருக்கள் வந்தால் இவர்கள் போர்புரிவார்கள் என்பதில்லை; தாங்களே சென்று அந்தச் சத்துருக்களின் திறத்தை அழிப்பார்களாம்.

ஊர் அடங்க இவளுக்கு உறவு முறையாகையாலே 'சுற்றத்துத் தோழிமார் எல்லோரும்' என்கிறார்கள்.

'புனமயிலே!' என்று இவளை அழைத்தவர்கள், 'முகில் வண்ணன் பேர்பாடவும் உடம்பை அசைக்காமல்கிடக்கிறாயோ' என்று கூறுவது ரஸமாக அமைந்திருக்கிறது. மேகம் என்றால், மயில் களித்துக் கூத்தாட வேண்டாமா?

இவளோ 'முகில்வண்ணன்' என்றதும் அந்த வடிவை நினைத்துக்கொண்டே பேசாமல் கிடக்கிறாள். உடம்பை அசைக்கவில்லை; நாக்கை அசைத்துப் பேசுவதற்கும் இஷ்டப்படவில்லை. அதாவது, துயிலுணர்ந்ததற்கு அடையாளமான சேஷ்டையொன்றும் செய்யவில்லை.

அந்தத் தோழிகளுக்கோ, இவள் வார்த்தை செவிக்கு இன்பம்; உடம்பின் அசைவுகள் கண்ணுக்கு இன்பம்.

'எங்களுக்கு எல்லாச் செல்வமும் நீ; கிருஷ்ண குணத்தை அனுஸந்திக்கும் செல்வி நீ' என்னும் குறிப்பினை வெளியிடுவது 'செல்வப்பெண்டாட்டி நீ' என்னும் தொடர்.

'திரளோடே அனுபவிக்கும் அனுபவத்தை விட்டு, கைவல்யம் போலவே (அதாவது தனியாக முக்தி இன்பம் அனுபவிப்பது போலவே) கிடைக்கிற காரியம் என்?' என்பது இறுதி அடியின் குறிப்பு. 'உன்னுடைய உத்தேசம், எங்களுடைய ஆற்றாமை, திரளாக ஸ்ரீ கிருஷ்ணாநுபவம் பண்ணும் பேரின்பம் இவற்றை நினைத்துப் பாராமல் எதற்காக இப்படிக் கிடக்கிறாய்? என்கிறார்கள்.

## உள்ளுறை பொருள்

'கோவலர் தம் பொற்கொடி' பாகவதர்களில் மேன்மை பெற்று விளங்கும் உத்தமருக்கு அறிகுறி.

'கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து' கும்பத்தோடு, வந்தடைந்த சீடர்களுக்கு உபதேசம் செய்வது.

'நீ எற்றுக்கு உறங்கும் பொருள்?' : 'கண்ணனை அனுபவிப்பதற்கு எங்களையும் சேர்த்துக் கொள்ளாமல் விலக்குவது எதற்காக?





எருமை கன்றுக்கு இரங்கி...
நின்றுபால் சோர
நனைத்துஇல்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!...
தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும்நீ வாய்திறவாய்!



## 12

### *கண்ணனைப் பிரியாமலிருக்கும் நற்செல்வனுடைய தங்கையை எழுப்புதல்*

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்!
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்?
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்.

| | | |
|---|---|---|
| கனைத்து இளங்கன்று எருமை | : | இளங் கன்றுகளுடைய எருமைகள் பால் கறப்பார் இல்லாமையால் முலை கடுத்துக் கதறிக் கொண்டு |
| கன்றுக்கு இரங்கி நினைத்து | : | கன்றுகளிடம் மனம் இரங்கி அவற்றைநினைத்துக்கொண்டு அந்த நினைவினால் |
| முலை வழியே நின்று பால் சோர | : | முலைக் காம்பு வழியே இடைவிடாமல் பால் சொரிய, அதனால் |
| நனைத்து இல்லம் சேறாக்கும் | : | வீட்டை நனைத்துச் சேறாக்குகின்ற |
| நற்செல்வன் தங்காய் | : | நல்ல செல்வத்தை உடையவனின் தங்கையே! |
| பனி தலை வீழ | : | எங்கள் தலையில் பனி விழ |
| நின் வாசல் கடைபற்றி | : | உன் தலைவாசலைப் பற்றிக் கொண்டு, |
| சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற | : | தென் திசையிலுள்ள இலங்கைக்கு அரசனான ராவணனைத் தன்னுடைய கோபமாகிய தர்மாவேசத்தினால் கொன்றொழித்தவனும், |
| மனத்துக்கு இனியானை | : | நினைப்பவர் உள்ளத்திற்குஇனியனுமாகிய ராமபிரானை |
| பாடவும் நீ வாய்திறவாய் | : | நாங்கள் பாடவும் நீ வாய் திறந்து பேசாமல் இருக்கிறாயே! |
| அனைத்து இல்லத்தாரும் அறிந்து | : | எல்லா வீட்டுக்காரர்களும் துயிலுணர்ந்த பின்பும், |
| ஈது என்ன பேருறக்கம் | : | இது என்ன ஓயாத உறக்கம்? |
| இனித்தான் எழுந்திராய் | : | இனியாவது எழுந்திரு. |

## விளக்கம்

'நற்செல்வன்' : தோன்றி மாயும் செல்வம் அன்றி, நிலைத்திருக்கும் செல்வமும் உடையவன். இந்த நற்செல்வமாவது கண்ணனுக்கு நிரந்தர கைங்கர்யம் செய்வது. கைங்கரிய லட்சுமியே ஆத்மாவுக்கு நிலைநின்ற சம்பத்து.

ராமபிரானுக்கும் சினமுண்டோ என்றால், அடியார்களான சாதுக்களின் சத்துருக்கள் இவனுக்கும் சத்துருக்கள் என்பர். 'மகாராஜர்க்கு (சுக்ரீவனுக்கு)ச் சீற்றம் பிறந்தபோது, வாலியை எய்தார்: அவர் அழுதபோது, கூட அழுதார்' என்பது வியாக்கியானம்.

'மனத்துக்கு இனியானை' : சத்துருக்களுக்கும் கண்ண நீர் பாயும் அவனை' என்பர்.

'இனித்தான் எழுந்திராய்' - எங்கள் ஆசையையும் ஆற்றாமையையும் அறிவித்த பின்பும் உறங்கலாமா? எங்களுக்காக எழுந்திராவிட்டாலும், நாங்கள் 'மனத்துக்கினியானை'ப் பாடுகிற பாட்டைக் கேட்கவாவது துயிலெழுவாய் என்கிறார்கள்.

தலையிலே பனி வெள்ளமிட, கீழே பால் வெள்ளமிட, உள்ளத்திலே கண்ணன் மீது காதல் வெள்ளமிடத் தெப்பம் பற்று வாரைப் போல இவளுடைய தலைவாசற்படியின் மேற்கட்டையைப் பற்றி நின்று அவளைக் கூப்பிடுவது போல் ஓர் உணர்ச்சிச் சித்திரம் இப் பாட்டிலே உருவாகின்றது.

இப்பாசுரத்தின் முதல் இரண்டரை அடிகளில் இவள் தமையனது செல்வச் சிறப்பைக் கூறுகிறார்கள். அவன் எப்போதும் கண்ணனுடன் கூடித்திரிவதால் காலந்தவறாது மாடுகளைக்கறப்பதில்லை அதனால் மாடுகள் முலைகடுத்துக் கன்றை நினைத்துக் குமுறிப் பால் சொரிகின்றனவாம். அத்தகைய செல்வனுக்குத் தங்கையாகப் பிறந்தவளே !— என்று அழைக்கிறார்கள்.

இந்த ஆய்ப்பாடியிலுள்ள பெண்கள் எல்லாரும் திரண்டு வந்து இவள் மாளிகை வாசலில் நின்று கூப்பிடவும் இவள் வாய் திறவாமல் கிடப்பது, இந்தச் செல்வ மாளிகையில் வசிக்கும் செல்விக்கு ஒரு மதிப்பைக் காட்டுவதுதான் என்று இவள் கருதி யிருந்தாலும், அந்த 'மதிப்பும் உனக்குக் கிடைத்து விட்ட தம்மா ! எழுந்துவா' என்கிறார்கள்.

## உள்ளுறை பொருள்

பாகவதாபிமானத்தில் ஊற்றமுள்ளவரை எழுப்புதல் இப் பாட்டுக்கு உள்ளுறை பொருள் என்பர்.

'எருமை கன்றுக்கு இரங்கி நினைத்து முலைவழியே நின்று பால் சோர' : எம்பெருமான் அடியார் விஷயத்தில் இரங்கி நிற்பதற்கு அறிகுறி; ஆசாரியன் சிஷ்யருக்கு இரங்குவதற்கும் அறிகுறி.

'நனைத்து இல்லம் சேறாக்கும்' : கேட்பவர்களின் இதயத் தைத் தாபமெல்லாம் ஆறும்படி குளிரப்பண்ணி, குணாநுபவத் தாலே களிக்கச் செய்வது.

தலைமேல் சொரியும் பனி, ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களால் வரும் பகவத் குணாநுபவம்; பால்வெள்ளம் ஆசா ரிய உபதேசத்தால் வரும் பகவத் குணாநுபவம் என்பர். நடுவே பாகவத குணாநுபவ வெள்ளம். இப்படி ப்ரவாக த்ரயம் (மூன்று வெள்ளங்கள்) என்பர்.

'அனைத்து இல்லத்தாரும் அறிந்து' ; பகவத் விஷயம் இரகசிய மென்று இருந்தாயானால் அது எங்கும் பிரசித்தமாயிற்று; எழுந்திராய்.





புள்ளும் சிலம்பினகாண்...

பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ?



## 13

'நம் கண்ணழகை நோக்கிக்
கண்ணன் தானே வருவான்'
என்று படுத்திருப்பவளை எழுப்புதல்

புள்ளின்வாய்கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
  கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்,
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்,
  வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று :
புள்ளும் சிலம்பின காண் : போதரிக் கண்ணினாய்
  குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே,
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
  கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| புள்ளின் வாய் கீண்டானை | : பறவையின் உருவத்தோடு வந்த பகாசுரனுடைய வாயைப் பிளந்தெறிந்தவனும், |
| பொல்லா அரக்கனை கிள்ளிக் களைந்தானை | : பொல்லாங்கு செய்த ராவணனுடைய பத்துத் தலைகளையும் மிகவும் எளிதாகக் கிள்ளியெறிந்து வம்சநாசம் செய்தவனுமாகிய பெருமானது |
| கீர்த்திமை பாடிப்போய் | : கீர்த்தி கூறும் வீர சரிதங்களைப் பாடிக் கொண்டு போய், |
| பிள்ளைகள் எல்லாரும் | : நம்மிலும் பருவத்தில் சிறியவர் உள்பட எல்லாச் சிறுமியரும் |
| பாவைக் களம் புக்கார் | : நோன்பு நோற்கும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்; |
| வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று | : சுக்கிரன் உதயமாகி, பிரகஸ்பதி அஸ்தமித்து விட்டது; |
| புள்ளும் சிலம்பினகாண் | : கூட்டிலிருந்து வெளிப்பட்ட பறவைகளும் இரை தேடுவதற்காகக் கூவிக் கொண்டு போயின; |
| போது அரிக் கண்ணினாய் | : தாமரைப் பூவையும் மானையும் ஒத்த கண்ணழகு வாய்ந்தவளே! |
| பாவாய் | : பதுமை போன்ற அழகியே! |
| நீ நன்னாள் | : நீ இந்த நல்ல நாளில் |
| கள்ளம் தவிர்ந்து | : (கண்ணனைத் தனியே நினைக்கிற) இக் கள்ளத்தனத்தை விட்டு |
| கலந்து | : எங்களோடு கலந்து |
| குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே | : உடம்பு மிகக் குளிர்ந்து போகத் துளைந்து விளையாடி நீராடாமல் |
| பள்ளிக் கிடத்தியோ | : படுக்கையில் கிடப்பாயோ? |

# விளக்கம்

பொல்லா அரக்கனாகிய ராவணன் ராமபிரானது வீரத்துக்கு இலக்கானான் என்றால், அவன் தம்பியாகிய தர்மாத்மா சீலத் துக்கு இலக்கானான் என்பது குறிப்பு. கிள்ளிக் களைந்தது அநாயாச வீரம். 'ஒரு சோலையிலோ, பூந்தோட்டத்திலோ அத் தோட்டத்தின் நலத்திற்காகப் பூச்சி பட்ட இலைகள் கிள்ளி எறியப்படுவது போல் பொல்லா அரக்கர்கள் வதஞ்செய்யப் பட்டனர்.

'பாவைக் களம்' : கண்ணனுடன் ஆய்ச்சியர் நோன்பு நோற்கக் குறிப்பிட்ட சங்கேத ஸ்தலம். வெள்ளி எழுதலே பொழுது விடிந்ததற்கு அடையாளம். ஆண்டாள் வாழ்ந்த காலத்தில் வெள்ளி எழுந்ததோடு வியாழன் அஸ்தமித்ததும் நிகழ்ந்தது என்பர்.

ஆறும் பாட்டிலும் 'புள்ளும் சிலம்பினகாண்' என்று வரு கிறது. இது அப்பாட்டின் தொடக்கம். அதே தொடர் இப் பதின் மூன்றும் பாட்டிலும் வருகிறது; அதாவது இவர்கள் வீடு வீடாக வந்து இவ்வளவு நேரம் சென்ற பின்பும் அதே தொடர் உபயோகப்படுகிறது.

எனவே இங்கு, 'கூட்டிலிருந்து வெளிப்பட்ட பின்பு வெளியே இரைதேடிச் செல்லும்போது பறவைகள் ஆரவாரஞ் செய்கின்றன' என்று பொருள் கொள்ள வேண்டும்.

'போது அரிக் கண்ணினாய்' என்னும் தொடருக்கு வேறு இரு விதமாகவும் பொருள் கொள்ளலாம்: (1) தாமரைப் பூவிலே வண்டு படிந்தாற்போன்ற கண்ணழகு வாய்ந்தவளே (அரி-வண்டு) (2) பூவின் அழகைக் கொள்ளைகொண்ட கண்ண ழகு உடையவளே! (அரித்தல்-கவர்தல்) 'போது' சிறப்பாகத் தாமரையையும் கருங்குவளையையும் குறிக்கும்.

இத்தொடரிலிருந்துதான் பெண் விசேஷமாய்க் கண்ணழகு வாய்ந்தவளென்று ஊகஞ் செய்யப்படுகிறது.

'குள்ளக் குளிர்' என்பது செக்கச் சிவந்து என்பது போன்ற ஒரு சொற்றொடர். மார்கழி மாதத்தில் அதிகாலையில் குள்ளக் குளிரக் குடைந்து நீராடும் அனுபவம் கிடைக்கும்.

## உள்ளுறை பொருள்

'நமக்கு ஸ்வரூபஞானம் உண்டானால் அவன் தானே வருகிறான்: நாம் எழுந்து செல்வதேன்?' என்று இருக்கும் பாகவதரை உணர்த்துவது இப்பாசுரம்.

'பொல்லா அரக்கன்' அகங்காரத்தைக் குறிக்கும்.

'கீர்த்திமை பாடிப்போய்': கல்யாண குணங்களைப் பிரீதிக்குப் போக்கு வீடாகப்பாடி அதுவே தாரகமாகப் போய், குணவிபூதிகளுக்கு வாசகமான திருநாமம் வழிக்குத் தாரகம்.

'பாவைக்களம்' காலக்ஷேப கூடம்; 'வெள்ளி எழுந்து' 'பரிசுத்தமானஞானம் அபிவிருத்தியாய்'; 'வியாழம் உறங்கிற்று' 'அஞ்ஞானம் தலைசாய்ந்தது.'; 'நீராடாதே' : பகவதநுபவம் செய்யாமலே; 'பள்ளிக் கிடத்தியோ' : தனித்துக் குணாநுபவம் செய்யலாமோ?

'எங்களுடன் நெஞ்சு குளிரக் கலந்து பகவதநுபவம் அடைய எழுந்தருள வேணும்' என்று தனியே குணசரிதங்களைத் தியானித்துக் கொண்டிருக்கும் பாகவதரை வேண்டுவது திரண்ட உள்ளுறை பொருள்.





செங்கழநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்...
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்



# 14

## எல்லோரையும் தானே எழுப்புவதாகச் சொல்லிவிட்டு மறந்து உறங்குகிறவளை உணர்த்துதல்

உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பின [காண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்.
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள் | : உங்கள் வீட்டுப் புழக்கடை அல்லது புறங்கடையிலுள்ள தோட்டத்துத் தடாகத்திலே |
| செங்கழு நீர் வாய்நெகிழ்ந்து | : செங்கழுநீர் மலர்கள் மலர்ந்து |
| ஆம்பல் வாய் கூம்பினகாண் | : ஆம்பல் மலர்கள் வாய் குவிந் தன; |
| செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர் | : காவிப் பொடியில் தோய்த்த காஷாய உடை தரித்தவர் களும், தாம்பூலம் தரியாமல் வெண்ணிறமான பற்களை உடையவர்களுமாகிய துறவி கள் |
| தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் | : தங்களுடைய கோயில்களில் சங்கு இடுவதற்காக |
| போகின்றார் | : போகிறார்கள்; |
| எங்களை முன்னம் எழுப்புவான் | : எங்களை முன்னமே வந்து எழுப்பும் பொருட்டு |
| வாய் பேசும் நங்காய் | : வாயால் சொல்லிச் செயலில் மறந்து போன நங்கையே! |
| நாணாதாய் நாவுடையாய் | : 'சொன்னபடி செய்தோமில் லையே என்ற நாணமும் இல் லாதவளே! இனிமையாகப் பேசவல்ல நாக்கு உடைய வளே! |
| சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் | : சங்கு சக்கரங்களைத் தரித்துக் கொண்டிருக்கும் பெரிய கை களை உடையவனும், |
| பங்கயக் கண்ணானை | : தாமரை போன்ற திருக்கண் களை உடையவனுமான கண் ணபிரானை |
| பாட எழுந்திராய் | : பாடுவதற்கு எழுந்திரு. |

## விளக்கம்

'பொழுது விடிந்ததற்கு அடையாளம் வேண்டுமானால் வெகுதூரம் போக வேண்டியதில்லை. உங்கள் வீட்டுப் புழக்கடையில் செங்கழுநீர் மலர ஆம்பல் கூம்பியிருக்கிறதே' என்கிறார்கள்.

'உங்கள் புழக்கடை'...என்பது உள்ளம் வெதும்பி உறவு அறுத்துப்பேசுவதுபோல் பேசுவது. 'இவள் இன்னம் எழுந்திருக்க வில்லையே' என்ற மனவேதனை காரணம்.

'சங்கு இடுவது' : (1) சங்கு ஊதுவது; (2) கதவைத் திறக்கத் திறவுகோல் இடுவது. காஷாயம் தரித்த பண்டாரங்களும் தங்கள் திருக்கோயிலில் பூஜைக்குச் சங்கு ஊதப்போகிறார்களே என்கிறார்கள்.

'தவத்தவர்' : ஸ்ரீவைஷ்ணவத் துறவிகளாகவும் கருதப்படலாம். அப்படியானால் 'சங்கு இடுவது' திருவாராதனம் செய்வதைக் குறிக்கும். ஏனென்றால், கோவில்களில் கதவைத் திறக்கும் போது மங்களச் சங்கு போன்ற மங்கள வாத்தியங்கள் முழுங்குவதுண்டு. இந்த மங்களச் சங்கு பின்பு நிகழும் ஆராதனம் அல்லது பூஜைக்கு உபலட்சணம்.

'சங்கிடுவான் போதந்தார்' என்றும் பாடம் வழங்குகிறது. 'போதந்தார்' இறந்தகாலம்; 'வந்தார்' என்பது பொருள்.

இப்பாசுரத்தில் இவளை 'நங்காய்' என்றும், 'நாணாதாய்' என்றும், 'நாவுடையாய்!' என்றும் அழைக்கிறார்கள். 'நங்கை': பெண்களில் சிறந்தவள். எனினும் 'வாய் பேசும் நங்காய்!' என்று அழைப்பதால், 'உன் வாய்க்கும் வாய்மைக்கும் ஒரு தொடர்பும் இல்லை' என்பது குறிப்பு, 'இனிமையான பேச்சு: ஆனால் உண்மைப் பேச்சல்ல' என்கிறார்கள்.

'நாணாதாய்!' சொன்னபடி செய்யாதவர்கள் 'ஐயோ, வாக்குத் தவறிவிட்டோமே! பொய் சொல்லிவிட்டதாக அல்லவோ தோழிமார் நினைத்துக் கொள்வார்?' என்று வெட்க

முற்றுப் பச்சாத்தாபம் அடையவேண்டுமே. உன்னிடம் அதற்குரிய நாணமும் காணப்படவில்லையே, என்கிறார்கள்.

'நாவுடையாய்!': எனினும் இவள் நாவில் இனிமை இருக்கிறது. அந்தப் பேச்சினிமையைக் கேட்க விரும்புகிறார்களாம். 'இவள் எல்லாம் படுத்தினாலும் விடவொண்ணாத நாவீறுடைமை' என்பது வியாக்கியானம்.

## உள்ளுறை பொருள்

பாகவத சமுதாயத்துக்கெல்லாம் முக்கியமானவராய், பகவத் சம்பந்தத்தைப் பலருக்கும் உண்டாக்கவல்ல ஞான பக்தி வைராக்கியங்களை உடைய பாகவதரை எழுப்புவது இப்பாசுரத்தின் உள்ளுறை பொருள்.

'பெண்களில் சிறந்தவளே!' என்று பொருள்படும் 'நங்காய்!' என்பது இத்தகைய பாகவதரைக் குறிக்கும். 'எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும் நங்காய்' - எங்களையெல்லாம் நாங்கள் அபேட்சிப்பதற்கு முன்னே ஞானிகளாக்கும்படி ஸ்ரீஸூக்திகளை அருளிச் செய்யும் ஸ்பூர்த்தியை உடையவரே!

'திருவாய்மொழி பாடுகையே பிரயோஜனம், எழுந்திராய்' என்கிறார்கள்.





எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென்று அழையேன்மின்! நங்கைமீர்!



## 15

### உறங்கும் நங்கையும்
### உணர்த்தும் நங்கையரும்
(சம்பாஷணை)

‘எல்லே இளங்கிளியே; இன்னம் உறங்குதியோ?’
‘சில்லென் றழையேன்மின், நங்கைமீர்! போதர்
[கின்றேன்’
‘வல்லை உன் கட்டுரைகள்! பண்டே உன்வாயறிதும்!’
‘வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக’
‘ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை?’
‘எல்லாரும் போந்தாரோ?’ போந்தார், போந்
[தெண்ணிக்கொள்;
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.

எல்லே இளங்கிளியே ! : என்னே ! இளங்கிளியே !

இன்னம் உறங்குதியோ ? : 'இன்னம் உறங்குகிருயோ ?' (என்று எழுப்புகிறவர்கள் கேட்க) எழுப்பப்பெற்றவள்,

நங்கைமீர் ! : 'பெண்களில் சிறந்தவர்களே!

சில்லென்று அழையேன்மின் போதர்கின்றேன் : கிலுகிலுவென்று கூப்பிடாதேயுங்கள்; (இதோ) வந்துவிடுகிறேன்.

[அதற்கு அவர்கள் மறுபடியும்]

உன் கட்டுரைகள் வல்லே : நீ கட்டிச் செல்லும் வார்த்தைகளினுல் வல்லமையுள்ளவள்,

பண்டே உன் வாய் அறிதும் ! : முன்னமே உன் வாயை அறிவோம்

[அதற்கு அவள்]

வல்லீர்கள் நீங்களே : நீங்கள் சாமர்த்தியசாலிகள்:

நானேதான் ஆயிடுக : நீங்கள் சொல்லுகிறபடி நான்தான் சாமர்த்தியசாலியாக இருந்தாலும் இருக்கட்டும்.

[எழுப்புகிறவர்கள் மீண்டும்]

'உனக்கென்ன வேறுடையை? ' : 'உனக்குமட்டும் தனியே வேறு என்ன அதிசயம் இருக்கிறது.

[உள்ளேயிருப்பவளும் ஒரு கேள்வி கேட்கிருள்]

எல்லாரும் போந்தாரோ ? : எல்லோரும்வந்துவிட்டாரோ?

[வெளியேயிருப்பவர்கள் முடிவாக விடைகூறி]

போந்தார் போந்து எண்ணிக் கொள் : வந்து விட்டார்கள்; நீயே எழுந்துவந்து எண்ணிப் பார்த்துக் கொள் ;

வல் ஆனை கொன்ருனை : குவலயாபீடம் என்னும் வலிய யானையைக் கொன்றவனும்,

மாற்ருரை மாற்று அழிக்க வல்லானை : எதிரிகளை எதிராக நின்று அழிக்க வல்லவனும்,

மாயனை : மாயனுமாகிய கண்ணனை

பாட ஒல்லை நீ போதாய் : பாடுவதற்காக 'விரைவாய் நீ எழுந்து வருவாய்' (என்கிருர்கள்).

## விளக்கம்

'பெண்கள் எல்லாரும் சேர்ந்து வரட்டும், காண்போம்' எனக் கருதிப் படுத்திருக்கும் ஒருத்தியை எழுப்பும் இப்பாசுரம் முழுமையும், வினுவிடை ரூபமாக அமைந்திருக்கிறது. 'புள்ளும் சிலம்பின காண்' என்று தொடங்கும் 6-வது பாட்டிலிருந்து 14-வது பாட்டளவுமுள்ள ஒன்பது பாசுரங்களும் வெளிப்படையாகத் துயில் எழுப்புவோரின் பாசுரங்களே.

அப்பாசுரங்களில் இப்பாசுரம் போல் எங்கும் வினு விடையாகக் குறிப்பிட்டு வியாக்கியானம் செய்திருக்கிருர்கள். 'திருப்பாவையாகிறது இப்பாட்டிறே' என்பர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர்.

'நானே தான் ஆயிடுக!' என்று சொல்லிப் பிறருக்கு உரிய குற்றமும் தன் குற்றமாக உள்ளேயிருக்கும் பெண் ஏற்றுக் கொள்கிருளல்லவா? — இது ஸ்ரீ வைஷ்ணவ லட்சணம் என்பர்: 'இல்லாத குற்றத்தையும் சிலர் ''உண்டு'' என்ருல், ''இல்லை'' செய்யாதே இசைகையிறே வைஷ்ணவ லட்சணம்' என்பர் பெரிய வாச்சான் பிள்ளை.

'பங்கயக் கண்ணனைப் பாட' அசலகத்துப் பெண்ணை எழுப்பியது கேட்ட இவள், அந்தச் சொல்லினிமையில் ஈடுபட்டு அப்பாசுரத்தைத் தன்மிடற்றில் நுண்ணிதாகப் பாடினுளாம். இக்குரலினிமையைக் கேட்டுத்தான், 'எல்லே! இளங்கிளியே!' என்று அழைக்கிருர்களாம்.

'எல்லே! இளங்கிளியே! ...' என்று கேட்டது, பங்கயக் கண்ணனை' அநுஸந்திக்கும் இவளுக்கு இடையூருகப் படவே, 'சில்லென்று அழையேன்மின்' என்கிருள்.

'பண்டே உன்வாய் அறிதும்!' என்று அவர்கள் வெட்டெனப் பேசிப் பரிகசிக்க, இவளும் சுடச்சுட, 'வல்லீர்கள் நீங்களே!' என்று பதில் சொல்லி விடுகிருள். பிறகு சற்று

ஆலோசித்து, இல்லாத குற்றத்தை ஒருவர் ஏறிட்டுச் சொன்னாலும் தலை வணங்கி, 'பொறுத்தருள வேணும்' என்று பிரார்த்திக்கும் முறையில், 'நானேதான் ஆயிடுக' என்கிறாள்.

இப்படி இவள் அவர்கள் கூறிய குற்றத்தை ஏற்றுக்கொண்டு, 'இந்தக்குற்றவாளி இனிச்செய்யவேண்டியது என்ன?' என்று கேட்க, அவர்கள் 'உனக்கு என்ன வேறு உடைமை?' என்று கேட்கிறார்கள்.

அதற்கு எழுப்பப்பெற்றவள் 'எனக்கு உங்களோடு கூடி அனுபவிப்பதைக் காட்டிலும் சுகம் உண்டோ? எல்லாரும் வந்துவிட்டார்களா?' என்று கேட்கிறாள். அவர்களும் பதில் சொல்லிவிட்டு, 'நாம் அனைவரும் மாயனைப் பாடுவோம்' என்கிறார்கள்.

## உள்ளுறை பொருள்

பாகவத கோஷ்டியைக் காண ஆசை கொண்டிருப்பவரை உணர்த்துவது இப்பாசுரத்தின் உட்பொருள். பாகவதர்கள் விஷயத்தில் கொள்ள வேண்டிய முறையை இவர் அறிந்தவர். பரதனைப்போல் பிறர் குற்றத்தையும் தம் குற்றமாக ஏற்றுக்கொள்பவர்.

இது திருமங்கையாழ்வாரை உணர்த்தும் பாசுரம் என்பர்.





கோயில்காப் பானே! கோடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள்திறவாய்?



## 16

*நந்தகோபர் மாளிகையில்*
*வாசல் காப்பானை எழுப்புதல்*

நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே ; மணிக்கதவம் தாள்திறவாய்,
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்,
தூயோமாய் வந்தோம், துயிலெழப் பாடுவான் ;
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய | : தலைவராயிருக்கும் நந்தகோபருடைய |
| கோயில் காப்பானே ! | : அரண்மனை காப்பவனே ! |
| கொடித் தோன்றும் தோரண வாயில் காப்பானே | : கொடிகள் தோன்றுகிற தோரண வாசல் காப்பவனே! |
| மணிக் கதவம் தாள் திறவாய் | : அழகிய கதவின் அல்லது மணிகள் கட்டிய கதவின் தாளைத் திறப்பாயாக. |
| ஆயர் சிறுமிரோமுக்கு | : ஆயர் சிறுமியரான எங்களுக்கு |
| அறை பறை | : ஒலிக்கின்ற பறையைத் தருவதாக |
| மாயன் மணிவண்ணன் | : ஆச்சரியமான செயல்களும், நீல ரத்தினம் போன்ற நிறமும் உள்ள கண்ணன் |
| நென்னலே வாய்நேர்ந்தான் | : நேற்றேவாக்களித்திருக்கிறான்; |
| துயில் எழப்பாடுவான் | : அவன் தூக்கத்தைவிட்டு எழுந்திருக்குமாறு பள்ளியெழுச்சி பாடுவதற்கு |
| தூயோமாய் வந்தோம் | : களங்கமில்லாதவராக அடியோம் வந்திருக்கிறோம் |
| அம்மா ! நீ | : ஸ்வாமி ! நீ |
| முன்ன முன்னம் | : முதன் முதலில் |
| வாயால் மாற்றாதே | : வாயால் மறுத்து விடாதே ; |
| நேய நிலைக் கதவம் நீக்கு | : நேசமாய் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும் கதவைத் திறப்பாயாக. |

## விளக்கம்

பத்துப் பாட்டுக்களால் பத்துப்பெண்களை, முற்பட எழுந்தவர்கள் துயில் உணர்த்தினார்கள்: இது ஆய்ப்பாடியிலுள்ள பெண்களை யெல்லாம் எழுப்பியதற்கு உபலட்சணம். இது முதல் ஏழுபாசுரங்களில் சிறுமியர் கண்ணனை எழுப்ப விரும்பிச் சென்று அங்குள்ளவர்களையும் கண்ணனையும் துயிலெழுப்பப் போகிறார்கள்.

கோபுரவாசல் போன்ற வெளிப்புறத்து வாசலைக்காப்பவன் கோயில் காப்பான்; துவஜஸ்தம்பத்தின் அருகேயிருந்து உட்புறத்து வாசலைக் காப்பவன், வாசல் காப்பான்.

'நாயகனாய் நின்ற' என்னும் அடைமொழி கோயில் காப்பானுக்கும் பொருந்தும், கண்ணனுக்கு வழிகாட்டியாக இவர்களுக்கு உபகரிப்பவனாதலால்.

'கோயில் காப்பானே!' என்றும், 'வாசல் காப்பானே! என்றும் அழைப்பதிலேயே இவர்கள் அறியாச் சிறுமியர் என்பது தெரிகிறது. அதாவது அவர்களை வேறுவகையாக அழைக்க அறியாதவர்கள். இப்படித் தொழிலையிட்டு அழைப்பதில், அழைக்கப்பெறுவோர் இதை ஒரு பேறு அல்லது பாக்கியமாகக் கொள்வர்.

தொண்டு காரணமாக வரும் பேரே ஆத்மாவுக்குச் சிறந்த பேர். இதனால்தான் 'விப்ரநாராயணர்' என்ற பெயரைவிட 'தொண்டரடிப்பொடி' யென்னும் பெயரை ஆழ்வார் உகந்தருளினார்.

கோயில் காப்பானே தோரணவாசல் காப்பானாகவும் —அதாவது இருவகைக் காவலும் ஒருவன் பொறுப்பாகவே— இருக்கவும் கூடும். 'கொடித் தோன்றும் தோரணவாசல்'; அடைந்தவரைக் காப்பதாகக் கொடிகட்டித் தோரணமும் நந்தகோபர் நட்டுவைத்திருக்கிறாராம். எனவே, 'தோரணவாசல் காப்

பானே' பெண்கள் தடுமாற்றம் தீர முகம் தருகைக்கு அன்றே உன்னை இங்கு வைத்தது!' என்பது குறிப்பு.

'வந்தோம் துயிலெழப் பாடுவான்' : 'அவன் துயிலுணர்ந்து எழும்போது அந்த அழகை வாழ்த்திப் பல்லாண்டு பாடுவதையே பரமபுருஷார்த்தமாக நினைத்து வந்தோம். இப்படியெல்லாம் இவர்கள் பேச்சைக் கேட்ட வாசல் காப்பான் பேச்சினிமையை இன்னும் பருக விரும்பி, 'வாயால் ஏதோ மறுத்துக் கூறுவது போலக் காணப்படவே, 'வாயால் முன்ன முன்னம் மாற்றாதே அம்மா!' என்கிறார்கள்.

பிறகு ஆய்ச்சிகள், 'இந்தக் கதவு எம்பெருமான் விஷயத்தில் உன்னைக்காட்டிலும் நேசமுள்ளது போலக் காண்கிறது. எங்களால் தானே உருவித் தள்ளிக்கொண்டு போக முடியாது என்கிறார்கள் 'நேயநிலைக்கதவம்': செறிந்திருக்கிற கதவையும் நிலையையும்: நிலையோடு பொருத்தமுடைய கதவை.

## உள்ளுறை பொருள்

ஆசாரிய சம்பந்தமுள்ளவர்களை முன்னிட்டு ஆசாரியனைத் தொழவேண்டும் என்பது இப்பாசுரத்தின் உட்கருத்து.

நந்தகோபன்: பகவதநுபவத்தால் பிறக்கும் ஆனந்தத்தோடு கூடிய ஆசாரியனுக்கு அறிகுறி, 'கோயில் காப்பான்': திருமந்திரத்தைக் காப்பவன்.





எம்பெருமான் நந்தகோ பாலா! எழுந்திராய்...
எம்பெரு மாட்டி யசோதாய்! அறிவுறாய்



## 17

### *நந்தகோபன், யசோதை, கண்ணன், பலராமன் என்ற இவர்களை எழுப்புதல்*

அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோ பாலா! எழுந்திராய்;
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே!
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய்;
அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காதெழுந்திராய்;
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| அம்பரமே தண்ணீரே சோறே | : ஆடைகளையே, தண்ணீரையே சோற்றையே வேண்டுவோர் திருப்தியடையும் வரை |
| அறஞ்செய்யும் எம்பெருமான் நந்தகோபாலா | : தருமஞ் செய்கின்ற எமது தலைவனே! நந்தகோபனே! |
| எழுந்திராய் | : எழுந்திருப்பாயாக; |
| கொம்பு அனார்க்கு எல்லாம் கொழுந்தே | : பூங்கொம்பு போன்ற எங்களுக்கெல்லாம் கொழுந்து போன்றவளே! |
| குல விளக்கே எம் பெருமாட்டி யசோதாய் | : புகுந்த குலத்துக்கு மங்கள தீபம் போன்றவளே! எமது தலைவியே! யசோதையே! |
| அறிவுறாய் | : துயிலுணர்ந்து எழுந்திருப்பாயாக; |
| அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த | : ஆகாயமெல்லாம் இடம் அறச் செய்து ஓங்கி உலகங்களை அளந்து கொண்ட |
| உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய் | : தேவாதி தேவனே! உறங்காமல் எழுந்திருப்பாயாக; |
| செம்பொற் கழல் அடிச் செல்வா பலதேவா | : செம்பொன்னால் செய்த வீரக் கழல் விளங்கும் திருவடிகளையுடைய செல்வனாகிய பலதேவனே! |
| உமபியும் நீயும் உறங்கேல் | : உன் தம்பி கண்ணனும் நீயும் உறங்காமல் எழுந்திருக்க வேணும். |

# விளக்கம்

பாட்டின் முதலடி நந்தகோபரின் கொடைச் சிறப்பைக் கூறுவது. உண்டியும் உடையும் வேண்டுவோர்க்கு வேண்டிய படியே பலனைக் கருதாது அறமாக அளிக்க வல்லவர் நந்தகோபர். நாட்டாருக்கு வேண்டும் பொருள்களைக் கொடுக்க வல்லவர். இச்சிறுமியர் வேண்டுகோளையும் அளிக்க உதவுவர் என்பது குறிப்பு. இவர்களுக்கு 'அம்பரமே, தண்ணீரே, சோறே' என்று இருப்பவன் கண்ணபிரான்.

கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே! என்பதில் 'பெண்களுக்கு ஒரு குறைவரில் உன் முகம் அன்றோ வாடுவது?' என்பது குறிப்பு. செடியின் அடிப்பக்கத்தில் ஒரு கேடு வந்தாலும் கொழுந்தில் வாட்டம் காண்கிறோமல்லவா? 'அறிவுறாய்' : 'நீ அறிந்தால் எங்களுக்கு ஒரு குறைவுண்டோ?'

ஆகாயமெங்கும் ஊடறுத்து விம்மி ரட்சகத்வமே விளைநீராக வளர்ந்து விட்டானும். இப்படி 'உலகளந்த உம்பர் கோமான் எல்லாருடைய தலையிலும் திருவடிகளைக் குளிரவைத்து 'உறங்குகிற ப்ரஜையை (குழந்தையை) த் தழுவிக்கொண்டு கிடக்கும் தாயைப்போலே' அன்பு செய்தான் என்பர்.

'அத்தகைய அன்பன் எங்களுக்கு முகங்காட்டும்போது சிறுப்பதும் பருப்பதுமாக வேண்டியதில்லை; இருந்தபடியே சுலபமாகத் திருவடிகளைக் காட்டலாம்' என்கிறார்கள் ஆய்ச்சியர்.

செம்பொற் கழலடிச் செல்வா : கிருஷ்ணன் பின்னே பிறக்க முன்னே பொற்கால் பொலிய விட்டுப் பிறந்த சீமானே ! ' என்பது ஆறாயிரப்படி அருளிச் செயல். லட்சுமணன் ராமனுக்குப் பின் பிறந்து கைங்கரியம் செய்தது போல் பலதேவன் கண்ணனுக்கு முன் பிறந்து கைங்கரியம் செய்யலானான். அத்தகைய கைங்கரியச் செல்வம் பெற்றதால் பலதேவனைச் 'செல்வா !' என்கிறார்கள்.

## உள்ளுறை பொருள்

ஆசாரியனைப் பற்றிக்கொண்டு திருமந்திரத்தின் பொருளை உணர்ந்து, இறைவனுக்கு அந்தரங்கமானவர்களை முன்னிட்டு இறைவனைத் துயிலுணர்த்துதல் இப்பாட்டின் உள்ளுறை.

அம்பரம்: ஆத்மா பெறவேண்டிய இறைவனுடைய முக மலர்ச்சி. இதை வளர்க்க வல்ல மனநிலை தண்ணீர், சோறு, கைங்கரியம். இம்மூன்றையும் அளிக்கும் நந்தகோபன் ஆசாரியன்.

கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தும் குலவிளக்கும் தலைவியுமாகிய யசோதையைத் துயிலுணர்த்துதல், தாயாகிய திருமந்திரத்தின் பொருளை உணர்ந்து கொள்வதற்கு அறிகுறி.

பலதேவனை முன்னிட்டுக் கண்ணனை எழுப்புவது, பகவானுக்கு அந்தரங்கரை முன்னிட்டுப் பகவானை உணர்த்துவது:

'ஸம்ஸாரிகள் உறக்கம் தீர்க்க அவதரித்த நீ உறங்காதொழிய வேணும்' என்பது 'உம்பர்க் கோமானே! உறங்காது எழுந்திராய்' என்பதன் கருத்து.





உந்து மதகளிற்றன்...
நந்தகோ பாலன் மருமகளே!...
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்.



## 18

*நப்பின்னைப் பிராட்டியைத்*
*துயிலுணர்த்துவது*

(ஸ்ரீ ராமானுஜர் உகந்த பாசுரம்)

உந்துமதகளிற்றன், ஓடாத தோள்வலியன்,
நந்தகோபாலன் மருமகளே, நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலி! கடை திறவாய்;
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்;
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| உந்து மத களிற்றன் | : மதநீரைப் பெருக்குகின்ற யானையை உடையவனும் அல்லது, அந்த யானையை போலப் பலமுடையவனும், |
| ஓடாத தோள் வலியன் | : எதிரிகளைக் கண்டு பின்வாங்காத தோள்வலிமை யுடையவனுமாகிய |
| நந்த கோபாலன் மருமகளே | : நந்தகோபருடைய மருமகளே! |
| நப்பின்னாய் கந்தம் கமழும் குழலீ | : நப்பின்னையே! நறுமணம் கமழும் கூந்தலையுடையவளே; |
| கடை திறவாய் | : கதவைத் திறவாய்; |
| வந்து எங்கும் கோழி அழைத்தனகாண் | : கோழிகள் எங்கும் வந்து கூவின; |
| மாதவிப் பந்தல்மேல் பல்கால் | : குருக்கத்திச் செடிகளாலான பந்தலின்மேல் பல தடவை |
| குயிலினங்கள் கூவினகாண் | : குயிலின் கூட்டங்கள் கூவின; |
| பந்து ஆர் விரலி! | : பந்து பொருந்திய கைவிரல்களையுடையவளே! |
| உன் மைத்துனன் பேர்பாட | : உன் கணவனான கண்ணனுடைய திருநாமங்களை உன்னுடன் நாங்களும் சேர்ந்து பாடும் படி |
| செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப வந்து திறவாய் மகிழ்ந்து | : நீ மகிழ்ந்து வந்து சிறப்புப் பொருந்திய உன் கைவளைகள் குலுங்கும்படி செந்தாமரைப் பூப்போன்ற உன் கையினால் கதவைத் திறவாய். |

# விளக்கம்

ராதைக்கு வடநாட்டார் அளித்திருக்கும் பதவியைத் தமிழிலக்கியம் நப்பின்னைப் பிராட்டிக்கு அளித்திருக்கின்றது. இப்பிராட்டியை முன்னிட்டுக் கண்ணனை அடையவேண்டும் என்பது ஆய்ச்சியர் கருத்து.

**உந்து மத களிற்றன்:** யானைகளோடு போரிடும்படியான மிடுக்கையுடையவன் என்றும், **ஓடாத தோள் வலியன்:** நாட்டில் நடையாடாத தோள்வலிமையுடையவன் என்றும் பொருள் கொள்ளலாம். 'கம்ஸன் மாளிகை நிழற் கீழே கிருஷ்ணனுக்கு ஒரு தீங்கும் வாராதபடி வளர்க்கவல்ல மிடுக்கை உடையவர்' என்பது வியாக்கியானம்.

கண்ணபிரானை நந்தகோபன் குமரன் என்று கூறுவதுபோல் நப்பின்னைப் பிராட்டியையும் நந்தகோபருடைய சம்பந்தத்தையிட்டு 'நந்தகோபாலன் மருமகளே!' என்கிறார்கள். புக்ககத்தின் வாழ்வையே வாழ்வாக மதிக்கிறாள்.

**'கந்தம் கமழும் குழலீ!'**; பரிமளமும் இவள் குழலிலே சேர்ந்து பரிமளிக்கிறது என்று சொல்லும்படி அத்தகைய பூங்குழலாள் இவள். இவளுடைய கையைச் செந்தாமரைக் கையென்றும், கைவிரலைப் பந்து ஆர் விரல் என்றும், இவள் கைவளையைச் சீரார் வளையென்றும் சிறப்பிக்கிறார்கள். கண்ணனோடு பந்தடித்து அவனையும் தோற்பித்தவள் என்பர்.

மாதவிப் பந்தல் குயில்களுக்கு வாய்த்த படுக்கை என்பர். **மைத்துனன்:** அத்தை மகன் மாமன் மகளை மணக்கும் முறை கருதிக் கணவனை மைத்துனன் என்கிறார்கள்.

செந்தாமரைக் கையால் வளை குலுங்கத் திறக்கும்படி இவர்கள் செய்துகொள்ளும் பிரார்த்தனையில், 'கண்ணனால் பேறு பெற நாங்கள் உன் கை பார்த்திருக்கிறோம்' என்பது குறிப்பு.

ஸ்ரீராமானுஜர் திருப்பாவையை அநுஸந்தித்த வண்ணம் தமது ஆசிரம தர்மத்திற்கு இணங்கப் பிக்ஷைக்கு எழுந்தருளுவதுண்டு. ஒருசமயம் தமது ஆசாரியரான பெரிய நம்பியின் திருமாளிகைக்கு எழுந்தருளினார். கதவு தாளிட்டிருந்தது; வாசலில் நின்று இப்பாசுரத்தைப் பாடினார்.

பெரிய நம்பியின் அருமைத் திருமகளான அத்துழாய் உள்ளேயிருந்து வந்து கதவைத் திறந்தாள். அதே சமயம் ஸ்ரீராமானுஜர்,

செந்தாமரைக்கையால் சீரார் வளையொலிப்ப

வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

என்ற இறுதி அடிகளை அனுஸந்திக்க நேர்ந்தது.

அத்துழாய் கதவைத் திறந்து கொண்டு வந்ததும், ராமானுஜர் அவளை நப்பின்னைப் பிராட்டியாகவே கருதி மெய்ம் மறந்து வணங்கினார். அத்துழாய் பெரிய நம்பியிடம் சென்று 'ஜீயர் என்னைக் கண்டதும் மூர்ச்சித்து விழுந்தார்' என்று தெரிவித்தாள், உடனே நம்பி, 'உந்து மதகளிறு' அனுஸந்தானமாயிருக்கும் என்றார்.

## உள்ளுறை பொருள்

பிராட்டியை முன்னிட்டு — அதாவது புருஷகாரமாகக் கொண்டு தான் — பகவானை அடையமுடியும்.



குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்...

மெத்தென்ற பஞ்ச சயனத்தின்...

தத்துவம் அன்று தகவு



## 19

*நப்பின்னையை மறுபடியும் எழுப்புதல்*

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்

கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்;

மைத்தடங் கண்ணினாய்! நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்,

எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால்!
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய்

| | |
|---|---|
| குத்து விளக்கு எரிய | : குத்து விளக்குகள் நாற்புறமும் எரிய, |
| கோட்டுக்கால் கட்டில்மேல் | : யானைத்தந்தத்தால் செய்த கால்களையுடைய கட்டிலில். |
| மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறி | : மெத்தென்று மிருதுவாயிருக்கும் பஞ்சு மெத்தையின் மேல் ஏறி |
| கொத்து அலர் பூங்குழல் | : கொத்துக் கொத்தாக மலர்ந்திருக்கும் பூக்களை அணிந்த கூந்தலையுடைய |
| நப்பின்னை கொங்கை மேல் வைத்துக் கிடந்த மலர் மார்பா | : நப்பின்னைப் பிராட்டியைத் தன்மீது அணைத்துக்கொண்டு உறங்குகின்ற பரந்த மார்பையுடையவனே! |
| வாய் திறவாய் | : வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்வாய்; |
| மைத்தடங் கண்ணினாய் | : அஞ்சனம் தீட்டிய விசாலமான கண்களையுடைய நப்பின்னையே! |
| நீ உன் மணாளனை | : நீ உன் கணவனை! |
| எத்தனை போதும் துயில் எழ ஒட்டாய் காண் | : எவ்வளவு நேரமானாலும் துயில் உணர்ந்து எழுந்திருக்கச் சம்மதியாமலிருக்கிறாய்; |
| எத்தனையேலும் பிரிவு ஆற்றகில்லாய் | : ஒருகணம் என்றாலும் பிரிவைப் பொறுக்கும் வல்லமையற்றவளாயிருக்கிறாய்; |
| தத்துவம் அன்று தகவு | : இப்படிச் செய்வது உன் ஸ்வரூபத்திற்கும் ஒத்ததில்லை; உன் ஸ்வபாவத்திற்கும் ஒத்ததில்லை. |

## விளக்கம்

முந்திய பாட்டில் நப்பின்னையை எழுப்பவே, அவளும் கதவைத் திறப்போமென்று புறப்பட்டாளாம். பிராட்டியை முன்னே போகாமல் கண்ணன் தடுக்கவே, ஆய்ச்சியர் மீண்டும் கண்ணனை எழுப்புகிறார்கள்.

கண்ணன் நப்பின்னையின் விருப்பத்திற்கு இணங்கி வாய் திறவாமல் இருக்கிறானும். எனவே, கண்ணனை எழுப்புமாறு மீண்டும் நப்பின்னையை வேண்டுகிறார்கள்.

நந்தகோபரை 'உந்து மதகளிற்றன்' என்று கூறியதற்கு இசைய, அவனுடைய மாளிகையில் யானைத் தந்தத்தால் செய்த கால்களையுடைய கட்டில் கிடப்பதைக் காண்கிறார்கள்.

கம்ஸன் கண்ணன் மீது ஏவிய குவலயாபீடம் என்னும் யானையின் கொம்பைப் பறித்துக்கொண்டு வந்து செய்த கட்டில் என்பர்.

'வீர பத்தினியாகையாலே இவளுக்கு இதில் அல்லது கண் உறங்காது' என்பது வியாக்கியானம்.

பஞ்ச சயனம்: அழகு, குளிர்ச்சி, மென்மை, பரிமளம், வெண்மை என்ற ஐந்து குணங்களையும் உடைய படுக்கை என்றும் கூறுவர். பஞ்சு, பட்டு, வெண்மையான கம்பளம், மலர், தளிர் என்ற ஐந்து பொருள்களால் செய்த படுக்கையென்றும் கூறுவதுண்டு.

'வாய் திறவாய்': 'நீ எழுந்து வராவிட்டாலும் வாய்திறந்தாவது எங்களுக்கு ஆறுதலாக ஒருவார்த்தை சொல்லலாகாதா? என்கிறார்கள். சிறுமியர்களே! நீங்கள் வருந்த வேண்டாம்: உங்கள் காரியத்தை முடித்து வைப்போம்' என்ற வார்த்தை கூடப் புறப்படவில்லையே உள்ளேயிருந்து—என்கிறார்கள்.

மைத் தடங் கண்ணினாய்! : 'மையிட்டெழுதோம்' என்றிருக்கிற எங்களையும் மையிடப் பண்ணுவது உன் கடமையென்பது குறிப்பு.

தத்துவம் அன்று தகவு : தத்துவம்; அன்று தகவு: நாங்கள் சொல்வது உண்மை; நீ இப்படிச் செய்வது உனக்குத் தகுதியன்று' என்றும் பொருள் கூறுவர்.

தத்துவத்தை ஸ்வரூபமென்றும் தகவை ஸ்வபாவமென்றும் கொள்ளும்போது, 'உன்னுடைய புருஷகார பாவத்துக்கும் பொருந்தாது: கிருபைக்கும் பொருந்தாது' என்று பொருள்.

## உள்ளுறை பொருள்

பகவான் பிராட்டியின் பக்திக்கு வசப்பட்டிருக்கிறான் என்பது இச்செய்யுளின் முதல் நான்கு அடிகளுக்கும் கருத்து என்பது உள்ளுறை.

பிராட்டியும் பெருமானும் அடியார்களுக்காகக் கருணை புரிய முற்படுவர் என்ற குறிப்பும் இதில் காணப்படுகிறது.

'மைத்தடங்கண்ணினாய்!' : சுத்த ஸத்வமாகிய அஞ்சனத்தையுடைய ஞானமுடையவளே!

புருஷகார பூதையான பிராட்டிக்கு எம்பெருமானை நம்மோடு சேரவொட்டாமல் செய்வது ஸ்வரூபமன்று என்பதை இப்பாசுரத்தின் இறுதி அடி குறிப்பிடுகிறது.





அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்



## 20

'எங்களை இப்போதே நீராடச் செய்வாய்' என்று
நப்பின்னையையும், அதற்குமுன்
கண்ணனையும் எழுப்புதல்

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்!
செப்பம் உடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்;
செப்பன்ன மென்முலை செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்!
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று | : முப்பத்து மூன்று வகையான தேவர்களுக்குத் துன்பம் வருவதற்கு முன்னமே அவர்கள் நினைத்த இடத்திற்குச் சென்று, |
| கப்பம் தவிர்க்கும் கலியே | : அவர்களுடைய நடுக்கத்தைத் தவிர்க்கின்ற மிடுக்குள்ள கண்ணனே! |
| துயிலெழாய் | : துயில் நீங்கி எழுந்திருப்பாய்; |
| செப்பம் உடையாய் திறல் உடையாய் | : பக்தர்களைக் காக்கவும், தீமையை அழிக்கவும்வல்ல நேர்மையும் வல்லமையும் வாய்ந்தவனே! |
| செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் | : அடியவர்களைப் பகைத்தவர்களுக்குப் பயமாகிய ஜ்வரத்தைக் கொடுக்கின்ற |
| விமலா துயிலெழாய் | : பரிசுத்த சுபாவமுள்ளவனே! துயில் நீங்கி எழுந்திராய்: |
| செப்பு அன்ன மென்முலை | : பொற்கலசம் போன்றனவாய் |
| செவ்வாய் சிறு மருங்குல் நப்பின்னை நங்காய் | : மென்மையான ஸ்தனங்களையும், பவளச் செவ்வாயையும் நுண்ணியஇடையையும்உடைய நப்பின்னைப் பிராட்டியே! |
| திருவே துயிலெழாய் | : பெரியபிராட்டியாராகிய மகாலட்சுமிபோன்றவளே; துயில் உணர்ந்து எழுந்திராய்; |
| உக்கமும் தட்டொளியும் தந்து | : எங்கள் நோன்பிற்கு வேண்டிய விசிறியும்கண்ணாடியும்தந்து, |
| உன் மணாளனை | : உன் மணவாளனாகிய கண்ணபிரானையும் தந்து, |
| இப்போதே எம்மை நீராட்டு | : இந்தக் கணத்திலேயே எங்களை நீராடச் செய்வாய். |

## விளக்கம்

முந்திய பாட்டில் ஆய்ச்சியர் தங்கள் வருத்தம் தோன்ற நப்பின்னைப் பிராட்டியைக் குறித்து, 'தத்துவம் அன்று தகவு' என்று குற்றம் கூறத் துணிந்தபோதிலும், நப்பின்னைப் பிராட்டிக்கு அதனால் சிறிதும் வருத்தம் ஏற்படவில்லை. எம்பெருமான் திருவுள்ளம் அறிந்து விண்ணப்பம் செய்யலாமென்று பேசாமல் பள்ளி கொண்டிருந்தாளாம்.

ஆய்ச்சியர் மீண்டும் கண்ணனையே எழுப்பிப் பார்ப்போமென்று அவனுடைய துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனப் பெருமையிலே சிஷ்ட பரிபாலனச் சிறப்பை முற்படக் கூறி, அடியவர்களின் சத்துருக்களுக்கு வெப்பம் கொடுக்கும் பரிசுத்த ஆற்றலையும் பாராட்டித் துயிலெழ வேண்டினார்கள்.

கண்ணபிரானும் வாய் திறவாமலிருக்க ஆய்ச்சியர், 'நாம் நப்பின்னைப் பிராட்டியைச் சற்று வெறுத்துப் பேசியது கண்ணனுக்கும் வெறுப்பை விளைவித்திருக்கக்கூடும். அவளைப் புகழ்ந்து பேசினால் இவனுக்கும் நம்மீதுள்ள கோபம் தணியும்' என்று நினைக்கிறார்கள். ஆகவே, மறுபடியும் நப்பின்னைப் பிராட்டியையே புகழ்ந்து, அவள் மூலமாகவே தங்கள் விருப்பத்தைப் பெற முயல்கிறார்கள், இப்பாசுரத்திலே.

'முப்பத்துமூவர் அமரர்' அஷ்டவஸுக்கள் என்ற எட்டுப் பேரும், ஏகாதச ருத்திரர் என்ற பதினொருவரும் துவாதசாதித்தியர் என்ற பன்னிருவரும் அசுவினி தேவதைகள் என்ற இரட்டையரும் சேர்ந்து முப்பத்துமூவர். இவர்களைப் பிரதானராகவுடைய தேவ ஜனத்தை முப்பத்து முக்கோடி என்பர்.

நோவு வருவதற்கு முன்னே சென்று தேவர்களை ரட்சிக்கும் நீ நோவுபட்டு வந்த எங்களை ரட்சிக்கலாகாதோ? அவர்களுக்காகச் சென்று உதவும் நீ உன் வாசலிலே வந்த எங்களுக்கு

உதவலாகாதோ! துக்க நிவிர்த்தி காண ஆசைப்பட்ட தேவர்களுக்கு உதவும் நீ, உன்னைக் காண ஆசைப்படும் அபலைகளுக்கு உதவலாகாதோ?' இது இப்பாசுரத்தின் முதல் இரண்டு அடிகளின் குறிப்பு.

'துயில் எழாய்': அம்பு எய்ய வேணுமா எங்களுக்கு? எழுந்திருந்து நோக்க அமையாதோ? என்பது வியாக்கியானம். 'எம்மை' என்று விரகம் தின்ற உடம்பைக் காட்டுகிறார்களாம்.

## உள்ளுறை பொருள்

அகங்காரம் மமகாரம்—அதாவது அகப்பற்று, புறப்பற்று—இவற்றின் நிவிர்த்தியை எங்களுக்குத்தந்து ஸ்வரூபஞானத்தையும் கொடுத்து இறைவனை எங்களோடு சேர்ப்பிக்க வேண்டுமே என்று உலக அன்னையாகிய பிராட்டியை நோக்கி மன்றாடுவது இப்பாசுரத்தின் உள்ளுறை. அமரர்: ஞானிகள்.

அஞ்ஞானம் உண்டாவதற்கு முன்னமே அதைத் தடுத்து அந்தப் பயத்தைப் போக்கடிக்கிறான் இறைவன் என்பது முதல் இரண்டு அடிகளின் உட்பொருள். செற்றார் : பாகவத விரோதிகள்.

விசிறியாகிய ஆலவட்டம், கைங்கரியத்திலே அகப்பற்று புறப்பற்று என்னும் மாசுகளை விசிறித் தள்ளுவதற்கு அறிகுறி. கண்ணாடி : ஸ்வரூப ஞானஒளி.





ஏற்ற கலங்கள் எதிர்போங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சோரியும் வள்ளற் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே!



# 21

நப்பின்னை உள்ளிட்ட அனைவரும்
கண்ணனது வீரத்தைப் புகழ்ந்து
துயில் உணர்த்துதல்

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற்பெரும்பசுக்கள்
ஆற்றப்படைத்தான் மகனே! அறிவுறாய்!
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் அடிபணியு மாபோலே,
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோரெம்பாவாய்

ஏற்ற கலங்கள் : கறந்த பாலை ஏற்றுக் கொண்ட பாத்திரங்களெல்லாம்

எதிர் பொங்கி மீது அளிப்ப : நிறைந்து மிகுதியாகப் பொங்கி மேலே வழியும்படியாக

மாற்றுதே பால் சொரியும் : இடைவிடாமல் பாலைச் சொரியும்

வள்ளல் பெரும் பசுக்கள் : வண்மைக் குணம் உள்ள பெரிய பசுக்களை

ஆற்றப் படைத்தான் மகனே : மிகுதியாக உடைய நந்தகோபரது பிள்ளையான கண்ணனே !

அறிவுறுய் : எழுந்திருப்பாய்;

ஊற்றம் உடையாய் : அடியாரைக் காப்பதில் சிரத்தை உடையவனே! வேதங்களால் பிரதி பாதிக்கப்படும் திண்மை வாய்ந்தவனே!

பெரியாய் : அந்த வேதங்களாலும் காண முடி [illegible]

உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே : இவ்வுலகத்திலே அவதரித்து நின்ற தேஜோரூபியே!

துயில் எழாய் : துயிலுணர்ந்து எழுந்திருப்பாய்;

மாற்றார் உனக்கு வலி தொலைந்து : பகைவர்கள் உனக்கு எதிரே வலிமையொழிந்து

உன்வாசல் கண் ஆற்றுது வந்து: உன் வாசலில் கதியற்று வந்து,

உன் அடி பணியுமா போலே : உன் திருவடிகளில் வந்து விழுவது போல

போற்றி யாம் வந்தோம் புகழ்ந்து : நாங்களும் உன்னைப் புகழ்ந்து பல்லாண்டு பாடிக் கொண்டு வந்து சேர்ந்தோம்.

## விளக்கம்

முந்திய பாட்டில் நப்பின்னையை எழுப்பியதும், அவள் எழுந்து வந்து, 'தோழிகளே! நானும் உங்களில் ஒருத்தியன்றோ? உங்கள் காரியத்தை நிறைவேற்றி வைக்கிறேன். நாம் எல்லோரும் சேர்ந்து கண்ணபிரானை வேண்டிக்கொள்வோம். வாருங்கள்' என்று சொன்னாள். அந்த நிலையில் அனைவரும் கண்ணனைத் துயிலுணர்த்துகிறார்கள், இப்பாசுரத்திலே.

நந்தகோபருடைய கறவைச் செல்வம், முதல் இரண்டரை அடிகளில் புகழப்படுகிறது. ஏற்கெனவே நந்தகோபரின் அற நெறிச் சிறப்பையும், தோள்வலிச் சிறப்பையும் புகழ்ந்தவர்களல்லவா?

'ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப' ; 'கலமிடாதோர் தாழ்வே: இட்ட கலங்களெல்லாம் நிறையும்: ஏலாத கலங்கள் நிறையாதொழிகிறது பாலின் குறையன்றே!' என்பது வியாக்கியானம்.

இப்பசுக்களும் கண்ணனைப் போலவே இருக்கின்றனவாம்; ஆசைப்படாதவர்களின் குற்றமே யல்லது கண்ணன் அருளுக்குக் குறையில்லையே! பெரும் பசுக்கள்: 'கிருஷ்ண ஸ்பரிசத்தாலே வளருகையாலே!'

'உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே' : சாவாது பிறவாது ஆதிமூலமாக இருக்கும் பகவான் உலகு படும் துயர் தீர்ப்பதற்காகப் பிறக்கப் பிறக்க, 'சாணையிலிட்ட மாணிக்கம் போலே' ஒளிவிடுகிறான் என்பர். 'துயில் எழாய்': 'இப்போது உணராமையாலே அந்தச் சுடரும் ஒளி மழுங்கப் போகிறதோ!' என்கிறார்கள்.

'மாற்றார்' : நாராயண சம்பந்தம் எல்லாரோடும் ஒத்திருப்பது தான்; எனினும் அடியார்களின் விரோதிகள் இவனுக்கும்

விரோதிகள். 'அம்புக்குத் தோற்று எதிரிகள் வருமாபோலே உன் குணங்களுக்குத் தோற்று வந்தோம்!' என்கிறார்கள்.

'போற்றி யாம் வந்தோம்' : 'பெரியாழ்வார் போலே வந்தோம்; அவர் தம்மைப் பேணாதே உன்னைப் பேணினாற்போலே நாங்களும் எங்கள் ஸ்வரூபத்தைப் பாராதே, ஆற்றாமை இருந்த இடத்தில் இருக்க வொட்டாமையாலே வந்தோம்' என்கிறார்கள். 'புகழ்ந்து' : இவர்களைத் தோற்பித்த அவனுடைய கல்யாண குணங்களைச் சொல்லி.

## உள்ளுறைப் பொருள்

வள்ளல் பெரும் பசுக்கள் : நல்லாசிரியர்களுக்கு அறிகுறி. ஏற்ற கலங்கள் : உபதேசத்துக்குப் பாத்திரரான சிஷ்யர்கள். ஆசிரியர்களின் உபதேசத்தாலே இவர்கள் ஏற்ற கலங்கள் நிறைவது போல் பரிபூர்ண ஞானம் பெறுவதுடன், ஆசாரியனுக்கும் புத்தி உபதேசம் செய்ய வல்லவராகிறார்கள். ஞானம் அப்படிப் பொங்கி வழிகிறதாம்.

இத்தகைய சிஷ்யர்களையுடைய ஆசாரியனுக்கு இறைவன் விதேயனாகிறான். ஊற்றர் விசேஷ அர்த்தத்தில் ஆச்ரித பட்ச பாதம்.





அரசர்...

நின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம் ..
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?



## 22

### கண்ணன் தன் கண்களால் மெல்லமெல்லக் கடாட்சிக்கவேணும் என்று பிரார்த்திப்பது

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல், வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல், [யேல்
அங்கண் இரண்டுங்கொண் டெங்கள்மேல்நோக்குதி
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய்.

அங்கண்மா ஞாலத்து அரசர் : அழகிய விசாலமான பெரிய பூமியை ஆண்ட அரசர்கள்

அபிமான பங்கமாய் வந்து : 'நமக்கு மேற்பட்டவர் இல்லை' யென்னும் அகங்காரம் அடங்கி வந்து,

நின் பள்ளிக் கட்டில் கீழே : நீ பள்ளி கொண்டிருக்கிற கட்டி லுக்குப் பக்கத்தில்

சங்கம் இருப்பார் போல் : திரள்திரளாக வந்திருப்பது போல்,

வந்து தலைப்பெய்தோம் : நாங்களும் உன்னை அணுகப் பெற் றோம்:

கிங்கிணி வாய்ச்செய்த தாமரை பூப்போலே : கிண்கிணியின் வாய்போல் சிறிது மலர்ந்த செந்தாமரைப் பூவைப் போல

செங்கண் சிறுச் சிறிதே : காதலாகிக் கசிந்து சிவந்த கண் கள் சிறிது சிறிதாக

எம் மேல் விழியாவோ : எங்கள்மேல் விழிக்கலாகாதோ?

திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல் : சந்திர சூரியர்கள் ஒருசேர உதயஞ் செய்தாற் போல்

அங்கண் இரண்டும் கொண்டு : அழகிய இரண்டு கண்களாலும்,

எங்கள் மேல் சாபம் இழிந்து : எங்களிடமுள்ள பிரிவுத் துயரா கிய பாவம் கழிந்து போகும் படி,

எங்கள் மேல் நோக்குதி : எங்களைக் கடாட்சிப்பாயாக.

## விளக்கம்

'மாஞாலத்து அரசர் அபிமான பங்கமாய்' : 'இப்பரப்பெல்லாம் எனது' என்று அகங்கரிப்பது; கடவுளுடைய பூமியை (வாமனன் மண்ணை)த் தங்களுடையது என்று மயங்கி வீண் பெருமை பாராட்டுவது. **பள்ளிக் கட்டில் கீழே** : சிங்காதானத்தின் கீழே என்றும் பொருள் கொள்ளலாம்.

அவர்களைக் கண்ணனுடைய வலிமை தோற்பித்தது: இவர்களைக் கிருஷ்ண குணம் தோற்பித்தது; 'எல்லாரையும் எழுப்பிப் பட்ட விசனமெல்லாம் ஸபலமாம்படி வந்து கிட்டப்பெற்றோம்' என்கிறார்கள்.

**விழியாவோ?** 'கோடையோடின பயிரிலே ஒரு பாட்டம்' மழை விழுவது போல் கண்ணனின் விழிநோக்கு விழவேணும் என்பது இவர்கள் மனோரதம்.

**திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்** : அநுகூலருக்கு வெண்ணிலவு போல் கருணை பொழிந்து, பிரதிகூலருக்கு அணுகவொண்ணாத கண்கள் என்பது குறிப்பு. அஞ்ஞான இருள் போவதற்கும், கண்ணனைப் பெறாத வெப்பம் ஆறுவதற்கும் உரிய கண்கள் என்ற குறிப்பும் இங்கே தோன்றுகிறது.

ஆதித்தனுடைய பிரதாபமும் திங்களின் குளிர்ச்சியும் குடிகொண்டிருக்கும் கண்கள் என்றும் கூறலாம். எனினும், கண்ணபிரானின் அருளுக்குச் சந்திரனும் ஒப்பல்ல; கண்ணன் கோபத்திற்குச் சூரிய வெப்பமும் ஒப்பல்ல என்பர்.

வாய்ப்பக்கம் கொஞ்சம் திறந்தஒருவகைச் சதங்கை **கிங்கிணி**. முழுநோக்கு அல்லது பூர்ண கடாட்சம் என்னும் பேரொளியைத் தாங்கமுடியாது; அது தங்களை அப்படியே கூசச் செய்துவிடும்

என்று கருதியவர்போல், பொறுக்கப் பொறுக்கக் கடாட்சிக்க வேணும் என்று பிரார்த்திக்கிறார்கள்.

**கதிர்மதியம் போல் முகத்தான்** என்று முதலாவது பாட்டில் கூறியதை நினைப்பூட்டுகிறது **'திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்'** என்னும் சொற்றொடர். திங்களும் ஆதித்தியனும் ஒரே காலத்தில் உதிக்கத் தாமரை மலர் பாதி மூடியும் பாதி மலர்ந்தும் இருப்பது போல், கண்ணனுடைய செந்தாமரைக் கண்களும் அன்பரின் குற்றங் குறைகளுக்குப் பாதி மூடியும், அவர்களைக் கடாட்சிக்கப் பாதி திறந்தும் இருக்கும் என்றும் பொருள் கூறுவதும் உண்டு.

பிரிவுத் துயரத்தைச் சாபம் என்றது. சாபம் போல் அவ்வளவு கொடுமையாக அனுபவித்தே தீர்க்க நேர்ந்தது குறித்து.

## உள்ளுறைப் பொருள்

'பகவானாகிய நீயே உபாயம் என்னும் ஞானத்தைப் பிறப்பிக்க வேண்டும்: எங்கள் தேஹாத்மாபிமானத்தைப் போக்க வேண்டும்; நீ உவந்த கைங்கரியத்தில் நாங்கள் ஈடுபடுமாறு உன் கருணை நோக்கம் சிறிது சிறிதாக எங்கள் மேல் விழவேண்டும்; உன்னை இழந்திருந்த துயரம் நீங்கவேண்டும் என்று பாகவதர்கள் செய்துகொள்ளும் பிரார்த்தனை இப்பாசுரத்தின் உள்ளுறை.

அவன் கடாட்சம் ஒருங்கே சுகரூபமாயும் அஞ்ஞான நிவர்த்தகமாயும் இருக்கும் என்பது குறிப்பு.



சிங்கம்...
நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ...
சீரிய சிங்கா சனத்திருந்து



## 23

யசோதை இளஞ்சிங்கத்தை நோக்கி,
'நீ சிங்காதனத்தில் வீற்றிருந்து
விண்ணப்பம் கேட்பாய்' என்பது

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே, நீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக்கோப்
சீரிய சிங்கா சனத்திலிருந்து யாம்வந்த [புடைய
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| மாரிமலை முழைஞ்சில் | : மழைக் காலத்திலே மலைக்குகையில் |
| மன்னிக் கிடந்துறங்கும் | : பொருந்திப் படுத்துறங்கும் |
| சீரிய சிங்கம் அறிவுற்று | : சிறப்பு வாய்ந்த சிங்கம் உறக்கம் தெளிந்து, |
| தீ விழித்து | : நெருப்புப் பொறி பறக்கக் கண்களை விழித்துக் கொண்டு, |
| வேரி மயிர் பொங்க | : ஒருவகை மணமுள்ள உளைமயிர் பொங்கும்படி |
| எப்பாடும் பேர்ந்து உதறி | : எப்பக்கமும் புடைபெயர்ந்து— அதாவது அசைந்து கொடுத்தும் உடம்பை உதறிக் கொண்டும்; |
| மூரி நிமிர்ந்து முழங்கி | : சோம்பல் முறித்துப் பெருமை தோன்ற நிமிர்ந்து கர்ஜித்து, |
| புறப்பட்டு போதருமா போலே | : குகையிலிருந்து வெளிப்பட்டு வருவது போல, |
| பூவைப் பூவண்ணா நீ | : காயாம்பூவைப் போன்ற நீல நிறத்தையுடைய நீ |
| உன் கோயில் நின்று இங்ஙனே போந்தருளி | : உன்னுடைய இருப்பிடத்திலிருந்து நாங்கள் இருக்கும் இவ்விடத்தில் எழுந்தருளி |
| கோப்புடையசீரிய சிங்காசனத்து இருந்து | : அழகிய வேலைப்பாடுகள் அமைந்த சிறந்த சிங்காதனத்தில் வீற்றிருந்து. |
| யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள் | : நாங்கள் வந்த காரியத்தை விசாரித்து அருள் செய்வாயாக. |

## விளக்கம்

'வேறு புகலிடம் இன்றி உன்னை நோக்கி வந்தோம்' என்று ஆய்ச்சியர் கூறியதைப் படுத்திருந்தபடியே கேட்டருளினான் கண்ணன். அந்த நிலையிலேயே அவர்களை நோக்கி, 'உங்களுக்கு நான் செய்யவேண்டியதென்ன?' — என்று விசாரித்தான்.

அதுகேட்ட ஆய்ச்சியர், 'பெருமானே! எங்கள் மனோரதம் இப்படி இரகசியமாகத் தெரிவிக்கக் கூடியதல்ல. நீ ஆஸ்தான மண்டபத்திற்குக் கம்பீரமாக எழுந்தருளிச் சிங்காதனத்தில் வீற்றிருந்து எங்கள் காரியத்தை விசாரித்தருளவேணும். ''யசோதை இளஞ்சிங்க'' மாகிய நீ மலைக்குகையிலிருந்து சிங்கம் புறப்படுவது போல எழுந்தருள வேணும்' என்று பிரார்த்திக்கிறார்கள்.

இதையைத் 'தேர்த்தட்டில் வார்த்தை' என்பர். இங்கே ஆய்ச்சியர் கண்ணனை நோக்கி, 'படுக்கையில் வார்த்தையாய்ப் போகாமே தனி மண்டபத்தில் வார்த்தையாகவேணும்' என்கிறார்கள். ஆஸ்தான மணிமண்டபச் சிங்காசனத்திலே நினைப்பிட்டது பேசியது அறுதியாக இருக்குமாம்.

## உள்ளுறைப் பொருள்

பகவானே உபாயம் என்று அதிதீவிர நிலையில் உள்ள பாகவதர்களின் விருப்பத்தை நிறைவேற்ற, இறைவன் கம்பீரமாகத் தானே முந்தி வந்தருள்வான் என்னும் பொருள் உள்ளுறையாக இப்பாசுரத்தில் தோன்றும் என்பர்.

**கோப்புடைய சீரிய சிங்காசனம்:** 'ஏழு லகும் தொழிலாக வகுப்புண்டதாய், நினைப்பிட்ட காரியம் தலைக்கட்டும்படியான சீர்மையையுடைய ஸிம்ஹாஸனம்' என்பது வியாக்கியானம். தர்மம், அதர்மம், ஞானம், அஞ்ஞானம், வைராக்கியம், அவை

ராக்கியம், ஐசுவரியம், அநைசுவரியம் என்கிற எட்டுக் கால்களை யுடைய தர்மாதிபீடம் என்னும் ஆசனம் பரமபதத்தில் உள்ள தென்றும், அதே ஆசனம் இங்கே கண்ணனுக்குச் சிங்காதன மாக அமைந்துள்ளதென்றும் கூறுவர்.

## கவிநயம்

சிங்கத்தின் கம்பீரமான தோற்றமும் புறப்பாடும் விசேஷ மான கவிச்சுவையுடன் வருணிக்கப்படுகின்றன.

மலைக்குகையில் உறங்கிக் கொண்டிருந்த ராஜசிங்கம் அறி வுற்றுத் தீவிழித்துப் பிடரிரோமம் பொங்க நாலுபுறமும் அசைந்து கொடுத்து உடம்பை உதறிச் சோம்பல் முறித்து வீர கர்ஜனை செய்துகொண்டு தன் குகையிலிருந்து வெளிக்கிளம்பி வருவது, இந்தப் பாட்டின் நாலரை அடிகளில் கம்பீரமாக வருணிக்கப்படுகிறது.

'பூவைப்பூ வண்ண' ஞகிய கண்ணன் யசோதை இளஞ் சிங்கமாய், இவர்களது காதலுக்கு உரிய புருஷ ஸிம்மமாதலின் ராஜசிங்கம்போல நடையழகு காட்டிவர வேண்டுமென்றும், தேவாதி தேவனுதலின் சீரிய சிங்காசனத்தில் ராஜாதி ராஜன் போல் வீற்றிருந்து தங்கள் காரியத்தை விசாரித்தருள வேணு மென்றும் ஆசைப்படுகிறுர்கள். இந்தக் கண்ணன் திருக்கோலம் இக்கோதை தமிழில் ஓர் அற்புதமான கவிச் சித்திரமாக அமைந் திருக்கிறது.





குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி



## 24

### கண்ணனது நடையழகும்
### வடிவழகும் கண்டு
### வாழ்த்துவது

'அன்றிவ் வுலகம் அளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்-
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி [போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி,
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி, [போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்-
என்றென்றுன் சேவகமே ஏத்திப்பறை கொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| அன்று இவ்வுலகம் அளந்தாய் | : அக்காலத்தில் இவ்வுலகங்களை யெல்லாம் அளந்தருளியவனே |
| அடி போற்றி | : உன் திருவடிகள் பல்லாண்டு வாழ்க; |
| சென்று அங்கு தென்இலங்கை செற்றாய் | : இராவணன் இருந்த இடம் போய்த் தென் இலங்கை அரக்கர்களை அழித்தருளியவனே! |
| திறல் போற்றி | : உன் திறமைக்கு மங்களம்; |
| பொன்றச் சகடம் உதைத்தாய் | : சகடாசுரன் அழியும்படி உதைத்தருளியவனே! |
| புகழ் போற்றி | : உன் புகழுக்கு மங்களம்! |
| கன்று குணிலா எறிந்தாய் | : கன்றின் வடிவாக வந்த அசுரனை எறிதடியாக விளாங்கனி வடிவாயிருந்த அசுரன்மேல் எறிந்தருளியவனே! |
| கழல் போற்றி | : உன் திருவடிகளுக்கு மங்களம்; |
| குன்று குடையா எடுத்தாய் | : கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்தருளியவனே! |
| குணம் போற்றி | : உன் குணத்திற்கு மங்களம்; |
| வென்று பகை கெடுக்கும் | : பகையை வென்றொழிக்கும் |
| நின் கையில் வேல் போற்றி | : உன் கை வேலுக்கு மங்களம்; |
| என்று என்று உன் சேவகமே ஏத்தி | : என்று இவ்விதமாகப் பலவாறு உன்வீர சரிதத்தையே புகழ்ந்து; |
| பறை கொள்வான் இன்று யாம் வந்தோம் இரங்கு | : பறையைப் பெற்றுக் கொள்ள இப்போது நாங்கள் வந்தோம், இரங்குவாய். |

## விளக்கம்

ஆய்ச்சியர் வேண்டுகோளுக்கு இணங்கிக் கண்ணன் வெளி மண்டபத்திலுள்ள ஸிம்மாஸனத்தை நோக்கி வருகிறான். அந்த நடையழகு கண்டதுமே வந்த காரியத்தை மறந்து விடுகிறார்கள்.

முதன் முதல் அந்த நடையழகுக்குப் பல்லாண்டு பாடுகிறார்கள். பிறகு ஸ்ரீ ராமாவதாரத்திலே நிகழ்ந்த வீர சரிதத்தை வாழ்த்துகிறார்கள். அப்பால், கண்ணனுடைய வீர சரிதத்தைப் போற்றுகிறார்கள். கடைசியாகவே தாம் வந்த காரியத்தை ஞாபகப்படுத்திக் கொண்டு தமது வேண்டுகோளைத் தெரிவிக்கிறார்கள்.

கண்ணனது வடிவழகு இவர்களைப் படுத்தும் பாடு இது. காணும் அளவும் 'அது வேணும், இது வேணும்' என்று தோன்றுமாம்; கண்டால் பரிவுகொண்டு அந்த அழகையே போற்றிக் கொண்டிருக்கத் தோன்றுமாம்.

இந்த நடையழகு கண்டதும் 'அன்று உலகம் அளந்த திருவடிகளல்லவா?' என்று போற்றுகிறார்கள். அன்று மகாபலி இறைவனது செல்வமாகிய உலகத்தைத் தானே அபகரித்துக் கொள்ள அதனால் உலகம் நோவுபட்டது: இன்று கண்ணனைப் பிரிந்து இவர்கள் ஆசையாலே நோவுபடுகிறார்கள்.

'அழகுக்கு இலக்கு ஆகாதாரை அம்புக்கு இலக்கு ஆக்கின' திறமையை வாழ்த்துகிறார்கள்.

சகடாசுரனை இதே திருவடிகளால் உதைத்து வதைத்த புகழும் நினைவிற்கு வருகிறது. குழந்தைப் பருவத்திலே அந்த மலரடிகளால் அநாயாசமாக அடைந்த வெற்றியல்லவா?

இந்தப் புகழைப் போற்றியதும், சத்துருக்களை முடித்த சூழ்ச்சித் திறன் நினைவுக்கு வருகிறது. சத்துருக்களான அந்த 'இருவரும் ஒக்க மேல் விழுந்தார்களாகில் என் செய்யக்

கிடவோ?—என்று வயிறு பிடிக்கிறார்கள்' என்பது வியாக்கியானம்.

'எறிந்தாய் கரம்போற்றி' என்று போற்றாமல், எறிந்தாய் கழல் போற்றி' என்பதற்குக் காரணம் என்ன? வீசியெறிந்த போது காலைத் தூக்கி வளைத்துக்கொண்டு நின்றானும். 'குஞ்சித்த திருவடிகளுக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள்.

'அடி போற்றி, திறல் போற்றி, புகழ் போற்றி, கழல் போற்றி, குணம் போற்றி, வேல் போற்றி!—என்று இவர்கள் நாக்குக்கு இடும் ஷட்ரஸம் (அறுசுவை) இருக்கிறபடி' என்பது ஆறாயிரப்படி.

## உள்ளுறைப் பொருள்

**'இன்று யாம் வந்தோம் இரங்கு':** 'நாங்கள் உன் வரவை எதிர்பார்த்திருக்க வேண்டியவர்கள்: எனினும் ஆற்றாமை மிகுதியால் அப்படியிருக்க வல்லமையின்றி வந்து விட்டோம். இப்படி நாங்களே வந்த குற்றத்தைப் பொறுத்தருளவேணும்'.

## கவிநயம்

இந்தப் பாட்டிலுள்ள அறுவகை வாழ்த்தும் இக்கன்னியர் நாவிலே அறுசுவையாகத் தித்தித்தது போல் இப்பாட்டை ஓத ஓத இதன் வெண்சொல்லும் புதைபொருளும் கதையமைப்பும் குணசித்திரமும் கவிச் சுவையும் இசையின்பமும் நமது நாவிலும் செவியிலும் உள்ளத்திலும் தெவிட்டாது தித்திக்கின்றன.





ஒருத்தி மகனுய்ப் பிறந்து ஓர் இரவில்
ஒருத்தி மகனுய் ஒளித்து வளர



## 25

### பறையென்னும் வியாஜத்தால் தங்களை அங்கீகரிக்க வேணுமென்று பிரார்த்திப்பது

ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
தரிக்கிலா னாகித் தான்தீங்கு நினைத்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்: பறைதருதி யாகில்,
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தோலோ ரெம்பாவாய்.

**ஒருத்தி மகனாய்ப் பிறந்து** : தேவகி ஒருத்திக்கு பிள்ளையாய் பிறந்து.

**ஓர் இரவில் ஒருத்தி மகனாய்** : அந்த ஒரே இரவில் யசோதை ஒருத்தியின் பிள்ளையாக

**ஒளித்து வளரத் தரிக்கி லானாகி** : ஒளித்து வளர, அது கேட்டுப் பொறுதவனாகி,

**தான் தீங்கு நினைந்த** : தானே (இக் குழந்தையைக் கொல்வோம் என்று) தீமை செய்ய நினைத்த

**கருத்தைப் பிழைப்பித்து** ; எண்ணத்தைத் தவறச் செய்து,

**கஞ்சன் வயிற்றில் நெருப் பென்ன நின்ற நெடுமாலே** : கம்ஸனுடைய வயிற்றிலே நெருப்பு என்று சொல்லும் படியாக இருந்த(அடியவரிடம் பேரன்புள்ள) பெருமானே !

**உன்னை அருத்தித்து வந்தோம்** : உன்னிடம் உன்னையே யாசித்து வந்தோம்;

**பறை தருதியாகில்** : எங்கள் வேண்டுகோளைத் தந் தருள் வாயானால்,

**திருத் தக்க செல்வமும் சேவக மும் யாம் பாடி** : திருமகளாகிய பிராட்டிக்குத் தக்க உனது செல்வத்தையும் வீர பராக்கிரமத்தையும் நாங்கள் பாடி,

**வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து** : உன்னைப் பிரிந்துபடும் வருத்தமும், குளிரிலே வந்த வருத்தமும் நீங்கி மகிழ்ச்சியடைந்து வாழ்வோம்.

## விளக்கம்

முந்திய பாட்டில் 'போற்றி போற்றி' என்று மங்களா சாஸனம் பண்ணி சிறுமியரை நோக்கிக் கண்ணபிரான் 'நீங்கள் இக்குளிரிலே இவ்வளவு சீக்கிரமாக எழுந்து வருந்தி வந்தீர்களே. உங்களுக்கு வேண்டுவது என்ன?' என்று கேட்க, அதற்கு விடையாக அமைந்திருக்கிறது இப்பாசுரம்.

'பெருமானே! உன்னுடைய குணங்களைப் பாடிக்கொண்டு வரும்போது குளிரோ, வருத்தமோ கொஞ்சமும் தெரியவில்லை; உன்னிடம் யாசிக்கத்தான் வந்தோம்' என்று பெண்கள் கூறு கிறார்கள். அதற்கு கண்ணன், 'வெறும் பறைதானோ உங்கள் உத்தேசம்?' என்று கேட்கிறான்.

'பறையா? அது வியாஜம் தான்; உன்னைக் காணத்தான் வந்தோம். உன்னை அடைவதில் தடையாக இருப்பதை யெல் லாம் விலக்கி எங்கள் துயரமெல்லாம் நீங்க எங்களை அங்கீகரித் தருள வேணும்' என்று பிரார்த்திக்கிறார்கள்.

கம்ஸன் அடியவரைப் பயமுறுத்தி ஹிம்ஸித்தான்! அதா வது அடியவர் வயிற்றிலே பயாக்கினி கொளுத்தினான். அதே பயாக்கினியைக் கம்ஸன் வயிற்றிலே சேர்ப்பித்தானும் கண்ணன். 'ஆச்ரிதர் வயிற்றில் நெருப்பைக் கம்ஸன் வயிற்றில் கொளுத் தினவன்' என்பது வியாக்கியானம். கெடுவான் கேடு நினைப்பான்.

'நெடுமாலே!': அன்பரிடம் பேரன்பும் பெருங்கருணையும் உள்ளவன். அதனால்தான் கண்ணன், தேவகி வயிற்றுக்குப் பிள்ளையாகவும், கம்ஸன் வயிற்றுக்கு நெருப்பாகவும் இருந்து, நாட்டிலே படாத பாடுபட்டான் என்பர்.

**'தருதியாகில்'**: நம்முடைய செயலோ, வேண்டுகோளோ பலன் தரும் என்பதில்லை; அவனுடைய நினைவே பயன் விளைப்பது: 'திருவுள்ளமாகில் செய்தருள வேணும்' என்று தான் பெரியோர் ஸன்னிதியில் பிரார்த்திக்கும் முறை.

'**திருத்தக்க செல்வம்**': லக்ஷ்மீபதியாக இருக்கும் செல்வம்; திருமாமகளும் விரும்பத்தக்க செல்வம்.

'மகிழ்ந்து': என்பதுடன் 'இருப்போம்' என்ற சொல்லை இறுதியில் கூட்டிப் பொருள் கொள்ளப்படுகிறது. இனி 'மகிழ்ந்து' என்பதற்கு 'மகிழும்படி' என்று பொருள் கொண்டு 'மகிழ்ந்து பறை தருதியாகில், (அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு) உன்னை அருத்தித்து வந்தோம்' என்று அந்வயித்துப் பொருள் கொள்ளலாம்.

முதல் ஐந்து அடிகளால் கண்ணனுடைய தனிப்பெருந் திறமை வற்புறுத்தப்படுகிறது. 'இத்தகைய சாமர்த்திய சாலிக்குச் சிறுமியராகிய எங்கள் வேண்டுகோளை நிறைவேற்று வது எளிது' என்பது குறிப்பு.

## உள்ளுறைப் பொருள்

பகவானையும் அவனுடைய குணங்களையும் பிரீதிக்குப் போக்கு வீடாகப் பாடி அவனைப் பிரிந்துபட்ட வருத்தமெல்லாம் தீர்ந்து ஆனந்திக்க கடவோம் என்பது கருத்து.

## கவிநயம்

கண்ணனுடைய அவதாரச் சிறப்பையும் திருவிளையாடல் களையும், அநாயாசமாக நிறைவேற்றிய துஷ்டநிக்கிரக சிஷ்ட பரி பாலன நோக்கத்தையும் இப்பாசுரத்தின் முதல் ஐந்து அடிகள் கவிச்சுவை ததும்பத் தெளிவுபடுத்துகின்றன.

'வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து' என்னும் மனநிலை இந்தப் பாசுரத்தை ஓதி ஓதி அனுபவிக்கும் ரஸிகர்களுக்கும் ஏற்படும்.





மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்...
கோலவிளக்கே, கொடியே, விதானமே
ஆலின் இலையாய் அருள்



## 26

### நோன்புக்கு வேண்டிய
### உபகரணங்களையும் வேண்டிக்கொள்வது

மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வன கள் வேண்டுவனகேட்டியேல்,

ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே

போல்வன சங்கங்கள், போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே, பல்லாண் டிசைப்பாரே,

கோல விளக்கே, கொடியே விதானமே,
ஆலின் இலையாய்! அருளேலோ ரெம்பாவாய்.

மாலே : அடியவரிடம் மிக்க மோக முள்ளவனே!

மணி வண்ணு : நீலமணி போன்ற நீலமேனியனே!

ஆலின் இலையாய் : ஆலிலைமேல் பள்ளிகொள்பவனே!

மார்கழி நீராடுவான் : மார்கழி நீராடுவதற்கு

மேலையார் செய்வனகள் : பெரியோர் அனுஷ்டிக்கும் முறைகளில்

வேண்டுவன கேட்டியேல் : எங்களுக்கு வேண்டியவற்றைக் கேட்பாயாஞல் (சொல்லுகிருேம்:)

ஞாலத்தையெல்லாம் நடுங்க முரல்வன : உலகத்திலுள்ள சத்துருக்களெல்லாம் நடுங்கும்படி ஒலிக்கின்றன,

பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே போல்வன சங்கங்கள் : பால்போன்ற நிறமுடையதான உனது ஸ்ரீ பாஞ்சஜன்யம் என்ற சங்கை ஒத்தவையுமான சங்குகளையும்,

போய்ப்பாடு உடையன சாலப் பெரும்பறை : மிகவும் இடமுடையனவும், மிகவும் பெரியவையுமான பறைகளையும்,

பல்லாண்டு இசைப்பார் : பல்லாண்டு பாடுகிறவர்களையும்,

கோல விளக்கு கொடி விதானம் : அழகிய மங்கள தீபங்களையும், கொடிகளையும், மேற்கட்டிகளையும்.

அருள் : அருள் செய்து கொடுப்பாய்.

## விளக்கம்

: உன்னை அருத்தித்து வந்தோம்! என்று சொல்லிவிட்டுப் 'பறைதருதியாகில்' என்றும் சொன்னார்களல்லவா? அது கேட்ட கண்ணன், 'என்னை விரும்புவோர் வேறொன்றும் விரும்புவரோ?' என்று கேட்பதற்கு விடை இப்பாசுரம்.

'உன்னைக் கண்ணாரக் கண்டு உன் திருநாமங்களை வாயாரச் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும் நோன்பை ஆய்க்குல முதியவர் பிரஸ்தாபிக்க நாங்கள் இதில் இறங்கினோம். உபகரணங்களையும் தந்தருள வேண்டும்' என்றார்கள்.

'மாலே!': 'நாராயணன்' என்றும், 'பரமன்' என்றும் 'தேவாதி தேவன்' என்றும் அளவிட முடியாத மேன்மையைப் பிரஸ்தாபித்துக் கொண்டு வந்தார்கள். இப்போது நீர்மையைக் காண்கிறார்கள். தங்களுக்கு அவன்மீதுள்ள ஆசை எவ்வளவோ அதிகமானது என்பதையும் காண்கிறார்கள்.

'மணிவண்ணா!' மோகிப்பித்து ஹிம்ஸித்தாலும் விடவொண்ணாதவன்: 'முன்தானையிலே முடிந்து ஆளலாம்படியிருக்கும் வடிவழகு; மிக்க மோகம் வடிவிலே நிழலிடுமாறு அமைந்திருக்கும் வடிவழகு.

சங்குகள் பள்ளியெழுச்சிக்கு வேண்டுமென்றும், புறப்படும்போது கொட்டுவதற்காகப் பெறும்பறை வேண்டுமென்றும், பல்லாண்டு பாடுவோர் வேண்டுமென்றும், மங்கள தீபங்கள் வேண்டுமென்றும், தூரத்திலேயே இவர்கள் கூட்டம் தெரிவதற்குக் கொடி வேண்டுமென்றும், போகும்போது பனி தலை மேல் விழாமலிருக்க ஒரு மேற்கட்டி வேண்டுமென்றும் கேட்கிறார்கள்.

'ஆலின் இலையாய்'; சிறியதொரு வடிவைக் கொண்டு ஸர்வ லோகத்தையும் சிறு வயிற்றிலே வைத்துக்கொண்டு ஆலந்தளிரிலே பிரளய காலத்தில் கண் வளரும் உனக்கு முடியாததுண்டோ?— என்பது குறிப்பு.

இந்த நோன்புக்கு ஆதாரம் சுருதியிலோ, ஸ்மிருதியிலோ இல்லையென்றாலும் 'மேலையார் செய்வனகள்' என்று சொல்லி முன்னோர் அனுஷ்டித்ததாகக் கூறுகிறார்கள். இது சிஷ்டாசாரம்.

இந்த நோன்புக் காலத்திலே வழங்கும் வாத்தியங்களும் விருதுகளும் இப்பாட்டிலும், நிகழ்த்தி வந்த கிரியைகள் இரண்டாவது பாசுரத்திலும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. விளையும் பயன் மூன்றாவது பாசுரத்திலே பிரஸ்தாபிக்கப்படுகிறது. இந்த நோன்பைக் கன்னியர் நோற்பது தாம் ஒப்புயர்வற்ற தலைவரை அடைந்து உய்வதற்காகவே என்பதை, இருபத்தொன்பதாம் பாட்டிலே காணலாம். இதற்கு அடுத்த செய்யுளிலே, நோன்பு முடிந்ததும் பெண்கள் தங்களை ஆசைதீர அழகு செய்து கொள்வதும் வயிறார விருந்துண்பதும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

## உள்ளுறைப் பொருள்

பகவான் ஸர்வ ஸுலபன் என்பதும், அடியவர்களின் மிக்க மோகமே அவனுக்கு ஸ்வரூபம் என்பதும் 'மாலே! மணிவண்ணா!' என்று அழைப்பதின் உட்பொருள்.

சங்கின் தொனி ஓங்காரமாகிய ப்ரணவம்; உட்பொருள் சேஷத்வ ஞானம். 'பறை' யின் உட்பொருள் பாரதந்திர்ய ஞானம். 'பல்லாண்டு இசைப்பார்' : நல்லார் இணக்கம். 'கொடி' கைங்கரியக் கொடி.





பால் சோறு
முடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்து



## 27

### நோன்பு நோற்ற பின்பு
### தாங்கள் பெறும் சம்மானம்
### கூறுவது

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக,
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம்அணிவோம்;
ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூட,நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

| | |
|---|---|
| **கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா** | : *தன்னை அடிபணியாதவர்களை வெல்லுகின்ற குணங்களையுடைய கோவிந்தனே!* |
| **கூடியிருந்து குளிர்ந்து** | : *நீயும் நாங்களும் உளம் குளிர்ந்து கூடியிருந்து* |
| **நாடு புகழும் பரிசினால்** | : *நாட்டார் கொண்டாடும்படியாக* |
| **சூடகமும் தோள்வளையும் தோடும் செவிப்பூவும் பாடகமும் என்று அனைய** | : *சூடகம் தோள்வளை தோடு கர்ணப்பூ பாடகம் என்ற பாத கடகம் என்று சொல்லப்படும் இந்த நகைகள் போன்ற* |
| **பல்கலனும் யாம் அணிவோம்** | : *பலவேறு ஆபரணங்களையும் (நீயும் நப்பின்னைப் பிராட்டியும் அணிவிக்க) நாங்கள் அணிந்து கொள்வோம்.* |
| **ஆடை உடுப்போம்** | : *பட்டாடைகளை உடுத்துக் கொள்வோம்* |
| **அதன் பின்னே பால்சோறு மூட நெய் பெய்து** | : *அதற்குப் பின்பு க்ஷீரான்னம் என்ற பாற்சோறு மறையும்படியாக நெய் பரிமாறி* |
| **முழங்கை வழிவார** | : *முழங்கை வழியே பெருக உண்ணுவது.* |
| **உன் தன்னைப் பாடிப் பறை கொண்டு** | : *உன்னைப் பாடுகையே பயனாகப் புகழ்ந்து பாடி விரதத்திற்கு வேண்டிய பறைபெற்று விரதத்தை முடித்துக்கொண்டு* |
| **யாம் பெறு சம்மானம்** | : *நாங்கள் பெற விரும்பிய சம்மானம்.* |

## விளக்கம்

சங்கு, பறை, விளக்கு, கொடி, விதானம் ஆகியவற்றுடன் பல்லாண்டு இசைப்பாரையும் அருளவேணும் என்று பிரார்த்தித்த ஆயச் சிறுமியரை நோக்கிக் கண்ணன், 'நோன்புக்கு வேண்டியவற்றைக் கேட்கிறீர்கள்; வேண்டியபடியே தருவோம்; இவ்வளவு தானே செய்ய வேண்டியது?' என்றான்.

அதற்குப் பெண்கள், 'நோன்பு நோற்றபின்பு உன்னிடம் பெற வேண்டிய சம்மானங்கள் உண்டு' என்கிறார்கள்.

விரத தினங்களில் 'நெய்யுண்ணோம், பாலுண்ணோம்' என்று உணவு நியமங்கள் அல்லது உண்ணா நியமங்களை மேற்கொண்டிருந்தார்களல்லவா? அதற்குச் சம்மானமாக 'நாங்கள் உன்னுடன் உண்போம்; நீயும் நப்பின்னைப் பிராட்டியும் உண்பிக்க நெய் பெய்த பால்–சோறு உண்போம்' என்கிறார்கள்.

'மையிட்டு எழுதோம்: மலரிட்டு நாம் முடியோம்' என்று அலங்காரம் துறந்து நோம்பு நோற்றார்களல்லவா? 'இனி நீயும் நப்பின்னைப் பிராட்டியும் எங்களை ஆடையாபரணங்களால் அழகு செய்யவேண்டும்' என்கிறார்கள்.

விடியும் முன்பே எழுந்து பனி தலையில் விழத் தெருவெல்லாம் அலைந்து துயிலெழுப்பி வருந்தி வந்திருக்கிறார்களல்லவா? 'இனி நாம் அழகு செய்து கொண்டு வயிறார, சம்பிரமாக, விருந்துண்டு கூடியிருந்து அகங் குளிர்வோம்' என்கிறார்கள்.

'கூடாரை வெல்லும் சீர்' : கூடியிருப்பவருக்குக் கண்ணன் தோற்று நிற்கும் சீரையும் குறிப்பிக்கும். கூடாதாரைச் சௌரியத்தாலும், கூடுவாரைச் சௌந்தரியத்தாலும் வெல்லும் சீரும் கண்ணனுக்கு உண்டு.

'கோவிந்தா!' 'கூடமாட்டோம்' என்னும் நினைவு இல்லாமலிருந்தாலும், போதுமாம், பகவான் பாதுகாப்பதற்கு, பசுக்களையும் பரிபாலிக்கிறவனல்லவா?

'உன் தன்னைப் பாடி' உன்னைப் பாடுகையே எங்களுக்குப் பலன் என்று, நெடுநாட்களாகப் பட்ட துயரமெல்லாம் தீர உவந்து பாடுகிறார்கள். 'பறை' ஊருக்காகப் பறை என்ற வியாஜத்தைவைத்துக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ண கைங்கரியமே இவர்களுக்கு உத்தேசம். 'நாடு புகழும் பரிசினால்' : நாடு புகழ்வதை இவர்கள் ஒருபேறாக நினைக்கவில்லை; புகழ்ந்து அதனால் நாடு உய்ந்து போவதைப் பரிசாக நினைக்கிறார்கள்.

'முழங்கை வழிவார' இப்படிச் சொன்ன பிறகு உண்பதைச் சொல்லாமல் 'கூடியிருந்து குளிர்ந்து' என்கிறார்கள். கண்ணனைக் கண்குளிரக் கண்டதுமே பசி தீர்ந்ததால் உண்ணவேண்டிய தேவை கூட இல்லை; பிரிந்து பட்ட துயரமெல்லாம் தீர எல்லோரும் கூடிக் களித்திருப்பதே உத்தேசம்.

'கோவிந்தா! யாம் பெறு சம்மானம்' : எவையென்றால் அணிவோம், உடுப்போம், குளிர்ந்து இருப்போம் என்னும் இவையென்று இப்பாசுரத்தை முடித்தும் பொருள் உரைக்கலாம்.

## உள்ளுறைப் பொருள்

சேஷத்வ ஞானத்தைப் பூர்ணமாகப் பெற்றுக் கைங்கரியப் பிரார்த்தனையுடன் ஏற்கெனவே பிரிந்திருந்த வருத்தமெல்லாம் தீரப் பெறுவது அடியவர் பெறும் சம்மானம். 'ஆடை' சேஷத்வ ஞானம். 'பால் சோறு' கைங்கரியம்.





கறவைகள் பின்சென்று கானம்சேர்ந்து உண்போம்..
ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்



## 28

'உபாயம் ஒன்றும்
*அறியாத பிள்ளைகள்; தயவுசெய்வாய்'*
என்று விண்ணப்பம் செய்வது

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்!
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்துஉன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடை யோம்;
குறைவொன்றும்இல்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கிங் கொழிக்க ஒழியாது!
அறியாத பிள்ளை களோம் அன்பினால்உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே,
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

கறவைகள் பின் சென்று : கறவைப் பசுக்களின் பின்னே போய்,

கானம் சேர்ந்து உண்போம் : காடு சேர்ந்து சரீர போஷணம் செய்து திரிவோம்;

அறிவு ஒன்றும் இல்லாத : சிறிதளவும் அறிவில்லாத எங்கள்

ஆய்க்குலத்து : ஆய்க்குலத்திலே

உன் தன்னைப் பிறவிபெறுந் தனை புண்ணியம் யாம் உடையோம் : உன்னைப் பிறவியாகப் பெறுவதற்குத் தக்க புண்ணியம் உடையவர்களாயும் இருக்கிறோம்;

குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா : ஒரு குறையும் இல்லாத கோவிந்தனே!

உன் தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது : உன்னோடு எங்களுக்கு உள்ள உறவோ என்றால், இப்போது உன்னாலும் எங்களாலும் ஒழிக்கவும் ஒழியாது:

அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன் தன்னை : உலகமரியாதை ஒன்றும் அறியாத சிறு பெண்களான நாங்கள் அன்பினால் உன்னை

சிறு பேர் அழைத்தனவும் சீறி அருளாதே : சிறிய பேராலே அழைத்தது குறித்து நீ அருள் கொண்டு கோபியாதிரு;

இறைவா நீ தாராய் பறை : தலைவனே! நீ எங்களுக்குப் பறை தருவாயாக.

## விளக்கம்

நோன்பைக் குறிப்பிட்டு அதற்கு உபகரணங்களான சங்கு முதலியவற்றையும், நோன்பை முடித்தபின் அலங்கரித்துக் கொள்ள ஆடையாபரணங்களையும், அன்புடன் கூடிக் குளிர்ந்து உண்ணப் பாற்சோற்றையும் ஆய்ச்சியர் அபேட்சித்தனர். இவர்களை நோக்கிக் கண்ணன், 'பெண்களே! நீங்கள் அபேட்சித்தவைகளை என்னிடம் பெறுவதற்கு நீங்கள் அனுஷ்டித்த உபாயம் ஏதாவது உண்டா?' என்று கேட்டான். அந்தக் கேள்விக்கு விடை இந்தப் பாசுரம்.

'எங்களிடம் உபாயம் இல்லை, உபாய சூந்யதைதான் உண்டு!' என்கிறார்கள். அதாவது யாதொரு உபாயமும் இல்லாமையைத் தெரிவிக்கிறார்கள். 'நீயே உபாயமாக வேணும்; தயவுசெய்து எங்கள் காரியத்தை நிறைவேற்ற வேணும்' என்று விண்ணப்பஞ் செய்து கொள்கிறார்கள், இப்பாசுரத்திலே.

**'கறவைகள் பின் சென்று...உண்போம்'** காட்டிலே மாடு மேய்த்து உடம்பை வளர்த்து வந்த எங்களுக்கு எத்தகைய ஸாதன ஸம்பத்து வாய்க்கப் போகிறது! **'கானம் சேர்ந்து'** : காடு தான் எங்கள் திருப்பதி! **'கானம் சேர்ந்து உண்போம்!'** அதிதி பூஜையுமின்றி, நீராடுவதுமின்றி வயிறு வளர்ப்போம் என்பது குறிப்பு.

**'குறைவொன்றும் இல்லாத கோவிந்தா!'** பரமபதத்திலுள்ள இருப்பை விட்டுப் பசு மேய்க்கப் பிறந்தது குறைவாளர்களை நிறைவாளராக்கவே என்பது குறிப்பு. 'இப் பள்ளத்துக்கு அம் மேடு நிரப்பப் போதாதோ?' என்கிறார்கள்.

**'உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது'** நான் உன்னை இன்றி இலேன் கண்டாய் நாரணனே! நீ என்னை அன்றி இலை' என்று திருமழிசையாழ்வார் குறிப்பிடும் இந்த உறவு ஒருவராலும் ஒழிக்க முடியாது; கடவுளாலும் ஒழிக்க முடியாது.

'சிறு பேர்' : பகவான் கோவிந்தாபிஷேகம் செய்துகொண்டு பசு மேய்க்கத் தொடங்கிய பின்பு நீர்மைக்கு அறிகுறியான 'கோவிந்தன்' 'கோபாலன்' என்னும் பெயர்களே பெரும் பெயர்களாகி விட்டனவாம். மேன்மைக்கு அறிகுறியான நாராயண நாமம் 'சிறுபேர்' ஆகிவிட்டது. நாங்கள் கோவிந்தனுகிய உன்னை ''நாராயணன்'' என்றும் ''நாராயணமூர்த்தி'' என்றும் சிறுபேரிட்டுப் பல தடவை அழைத்தது குறித்துச் சீறி அருளாதே!' என்ருர்கள்.

## உள்ளுறைப் பொருள்

உபாய ஸ்வரூபத்தை வெளியிடுகிறது இப்பாசுரம். பகவானை உபாயமாகப் பற்றும் அதிகாரிக்கு உரிய ஆறு அங்கங்கள் இதில் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. *(1)* முதல் அடியில் ஸத்கர்மம் குருகுலவாசம் முதலான ஸாதனங்கள் இல்லையென்பது; *[2)* இரண்டாம் அடியில் வித்யாகர்வம் ஜாதிகர்வம் தவிர்ந்திருப்பது; *(3)* நான்காம் அடியில் பகவானுடைய 'குறையொன்றும் இல்லாத' குணபூர்த்தியை அனுஸந்திப்பது; *(4)* ஒழிக்க முடியாத உறவை உணர்ந்து கொள்வது; *(5)* ஏழாம் அடியில் குற்ற மன்னிப்பு வேண்டுவது; *(6)* எட்டாம் அடியில் ஸாக்ஷாத் உபாயமான இறைவனிடத்தில் உபேயத்தை அபேட்சிப்பது.





பொற்ற மரைஅடியே போற்றும் பொருள்கேளாய்...
உற்றேமே ஆவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்



## 29

*திருப்பாவையின்*
*தனிப்பெருங் கொள்கையை*
*வெளியிடும் பாசுரம்*

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்:
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்: உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து : அருணோதய காலத்தில் இவ்விடத்திலே வந்து உன்னைச் சேவித்து,

உன் பொன் தாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் : உன் அழகிய திருவடித் தாமரைகளை நாங்கள் பல்லாண்டு பாடி வாழ்த்துவதன் பயனைக் கேட்டருள்வாய்;

பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ : பசுக்களை மேய்த்து உண்ணுகிற ஆய்க்குலத்தில் அவதரித்து நீ,

குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது : எங்களிடம் அந்தரங்க கைங்கரியம் பெற்றுக் கொள்ளாமல் விட்டுவிடுவது தகாது;

இற்றைப் பறைகொள்வான் இன்று காண் : இன்று கொடுக்கப்படும் பறை கொள்வதற்காக அன்று நாங்கள் இங்கு வந்தது;

கோவிந்தா எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் : எப்போதும் நீ எடுக்கும் எந்தப் பிறவி அல்லது அவதாரத்திலும், கோவிந்தனே!

உன் தன்னோடு உற்றோமே ஆவோம் : உன்னோடு உறவு உடையவர்களாவோம்;

உனக்கே நாம் ஆள் செய்வோம் : உனக்கு மாத்திரமே நாங்கள் கைங்கரியம் செய்வோம்.

மற்றை நம் காமங்கள் மாற்று : இவற்றோடு முரண்படும் எங்கள் விருப்பங்களை மாற்றியருள்வாய்.

## விளக்கம்

இதுவரை ஆய்ச்சியர் 'பறை, பறை' என்று சொல்லி வந்தார்களல்லவா? இந்தப் பாட்டிலே 'பறைகொள்வான் அன்று' என்று தங்கள் 'அந்தரங்க விருப்பத்தை வெளியிடுகிறார்கள். கண்ணன் திருவடிகளில் நித்திய கைங்கர்யம்தான் நோக்கம் என்கிறார்கள்.

'இனி ஒரு கணமும் கண்ணனைவிட்டு நாங்கள் பிரியாமல் பணி செய்து கொண்டிருக்க வேணும்' என்கிறார்கள். 'வேறு வகையான விருப்பங்கள் ஏற்படாமலும் கண்ணனே அருள் செய்ய வேணும்' என்று, காலைக் கட்டிக் கொள்ளும் குழந்தை போல் குறையிரந்து வேண்டுகிறார்கள்.

'சிற்றஞ் சிறு காலை': சின்னஞ்சிறு பிள்ளை, வெட்ட வெளிச்சம் என்பவை போன்ற சொற்றொடர், சிற்றஞ் சிறுகாலே வந்து': பனியையும் குளிரையும் கருதாது வந்ததாகக் கூறுவதில் தங்கள் ஆற்றாமையை வெளியிடுகிறார்கள்.

'கேளாய்': 'உன் பராக்கை விட்டு நாங்கள் சொல்லுகிற வார்த்தையைக் கேளாய்!' இப்படி இரண்டு அடிகளில் பீடிகை போட்டு மற்றை அடிகளில் தங்கள் உத்தேசத்தைத் தெளிவு படுத்துகிறார்கள்.

'பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ': 'பிறப் பிலியாய் பிறவாதார் நடுவேயிருந்து பிறவி அற்றார்க்கு முகங் கொடுக்கிற' அந்த இருப்பைத் துறந்து இங்கே வந்து பிறந்தது ஏன் என்று நீ நினைத்துப் பார்த்தாலே போதும் என்கிறார்கள்.

'குற்றேவல்...போகாது': எங்களிடம் குற்றேவல் கொள் ளாமலிருந்ததால் இந்த உன் பிறவி பயனற்றதாகுமே!—என்பது குறிப்பு.

இவர்கள் இப்படிச் சொன்னதும் கண்ணன், 'அப்படியே ஆகட்டும்; குற்றேவல் கொள்கிறேன். நீங்கள் மார்கழி நோன்

புக்கு உபகரணமாக கேட்டவற்றைத் தருகிறேன்' என்று ஒரு பறையைக் கொடுக்கலானுன். உடனே இவர்கள் 'பறை கொள்வான் அன்று காண்'—அதாவது 'ஒரு பிரயோஜனம் கொண்டு போக வந்தோம் அல்லோம்' என்கிருர்கள்.

'எங்களை நீ கொள்ளும் அத்தனை ஒழிய, நாங்கள் உன் பக்கலிலே உன்னை ஒழியவும் கொள்வது ஒன்று உண்டு என்று இருந்தாயோ?' என்பது ஆருயிரப்படி.

'உற்ருேமே ஆவோம்': ஓர் உறவைக் குறிப்பிடாமல் பொதுவாகக் கூறியிருப்பதால் 'எல்லா உறவும் நீயே ஆக வேணும்' என்பது கருத்து.

'இன்னும் வேண்டுவது என்ன?' என்று கண்ணன் கேட்க, 'உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்கிருர்கள். அதாவது நீ உகந்த அடிமை செய்வோம் என்கிருர்கள். அகங்காரத்தோடு கூடிய கைங்கரியம் புருஷார்த்தமாகாது.

## உள்ளுறைப் பொருள்

உபய ஸ்வரூபத்தை விவரிப்பது இதன் உள்ளுறை. ''சிற்றஞ் சிறுகாலே'; ஸத்வகுணம் விளங்குகின்ற காலம்.

கைங்கர்யத்திலே களையாகத் தோன்றும் ஸ்வப்ரயோஜன புத்தியைப் போக்கியருள வேணும் என்பது, 'மற்றை நம்காமங்கள் மாற்று' என்பதன் கருத்து.





திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை......சொன்ன...
பரிசுரைப்பார்... செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர்



## 30

### இப்பிரபந்தம் கற்பவர்
### திருமாலின் திருவருள் பெற்று
### ஆனந்தம் அடைவர்

(திருப்பாவையின் பலச்ருதி)

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனை,
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி

அங்கப் பறைகொண்ட ஆற்றை, அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை

சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே [சொன்ன
இங்கிப் பரிசுரைப்பார், ஈரிரண்டு மால்வரைத்

செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் [தோள்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்

| | |
|---|---|
| வங்கக் கடல் கடைந்த | : கப்பல்களையுடைய திருப்பாற் கடலைக் கடைந்து அமிர்தம் வழங்கியருளிய |
| மாதவனைக் கேசவனை | : ஸ்ரீயःபதியான கண்ணபிரானை, |
| திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்று இறைஞ்சி | : சந்திரபிம்பம் போன்ற அழகிய முகமும், அழகிய ஆபரணங்களும் உடைய கோபிமார் போய் வணங்கி, |
| அங்கு அப்பறை கொண்ட ஆற்றை | : அத் திருவாய்ப்பாடியில் தங்கள் புருஷார்த்தத்தைப் பெற்றுக் கொண்ட அந்த வரலாற்றை, |
| அணி புதுவை | : அழகிய ஸ்ரீ வில்லி புத்தூரில் அவதரித்த |
| பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை | : பசுமை பொருந்திய, குளிர்ந்த தாமரை மலர்களாகிய மாலையையுடைய பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாள் |
| சொன்ன சங்கத்தமிழ் மாலை முப்பதும் | : அருளிச் செய்த, திரள் திரளாக அனுபவிக்க வேண்டிய தமிழ் மாலையான இம் முப்பது பாசுரங்களையும் |
| தப்பாமே இங்கு இப்பரிசு உரைப்பார் | : தப்பாமல் இக்காலத்திலே இவ்வண்ணமாக ஓதுகிறவர்கள், |
| ஈரிரண்டு மால்வரைத் தோள் | : நாலு பெரிய மலைகள் போன்ற தோள்களையும் |
| செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் | : சிவந்த கண்களையும் அழகிய முக மண்டலத்தையும் ஐசுவரியத்தையும் உடைய ஸ்ரீயःபதியால், |
| எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் | : எங்கும் திருவருள் பெற்று ஆனந்தம் அடைவர். |

## விளக்கம்

இப்பிரபந்தத்தை ஓதுகிறவர்கள் திருமாலின் திருவருளுக்கு எங்கும் எப்போதும் இலக்காகி இன்புறுவர். பிராட்டியாலும் எம்பெருமானாலும் அருள் செய்யப்பெற்று, மார்கழி நோன்பை **அனுஷ்டித்தவரைப்** போலவும், அதனை **அநுகரித்தவரை** (அவர்களைப்போலப் பாவனையின் முதிர்ச்சியால் செய்தவரை)ப் போலவும் இன்புறுவர் என்பது இந்தப் பல ச்ருதியின் கருத்து.

'கன்று இழந்த தலைநாகு தோற்கன்றுக்கு இரங்குமா போலே, இப்பாசுரம் கொண்டு புக நமக்கும் பலிக்கும்' என்று பட்டர் அருளிச் செய்வர்.

**'வங்கம்'** : 'அலைகள்' என்றும் பொருள் கொள்ளலாம். கடல் கடந்தபோது மலை வெகு வேகமாய்ச் சுழன்றதால் கடலெங்கும் மரக்கல மயமாய்த் தோன்றியது என்றும் வியாக்கியானம் செய்வர்.

**'கிடந்த அமுதம்'** : கிடக்க, கடைந்த அமுதத்தை விரும்பிய தேவர்கள் பிரயோஜநாந்தரத்தையல்லவா வேண்டினார்கள்? அவர்களுக்காகவும், 'உடம்பு நோவக் கடல் கடைந்து' அவர்கள் வேண்டியதையும் கொடுத்தானல்லவா? இத்தகைய சீலவான். அவனைப் பெறுகையே ஸ்வயம் ப்ரயோஜநமாகவுடைய இவர்கள் காரியத்தைப் பூர்த்தி செய்வது திண்ணம் என்பது குறிப்பு.

**'கடல் கடைந்த மாதவன்'** : , தேவகாரியமென்று ஒரு வியஜத்தையிட்டுப் பெரிய பிராட்டியாகிற பெண்ணமுதத்தைப் பெறுகைக்காகக் கடல் கடைந்தபடி' என்பது வியாக்கியானம். கண்ணனும் ஊரார் காரியத்தை ஒரு வியாஜமாக்கி இவர்களைப் பெறுவதற்காக நோன்பு நோற்கச் செய்தானல்லவா ?

**'மாதவன்'** : அடியவர் குற்றத்தைப் புருஷாகாரத்தாலே பொறுப்பித்து அபேட்சிதங்களைச் செய்விக்கும் பிராட்டியை அருகே உடையவன்.

'கேசவன்' : விரோதியைப் போக்கும் சீலனாகிய கண்ணன். உள்ளுறைப் பொருளில் ஸ்வாதந்த்ர்யத்தையும் அந்யசேஷத்வத் தையும் போக்கினவன்.

'திங்கள் திருமுகம்' : ஸ்ரீ கிருஷ்ண கைங்கரியத்தால் குளிர்ந்து மலர்ந்த முகம். 'சேயிழையார்' : சூடகமே, தோள் வளையே...என்றெல்லாம் இவர்கள் அபேட்சித்தபடியே கண்ண னும் நப்பின்னைப் பிராட்டியும் உடன் இருந்த அணிந்த அணி களையுடையவர்கள்.

'சொன்ன' கோபிமாரின் அவஸ்தையைத் தானும் பாவனை முதிர்ச்சியால் அனுபவித்துச் சொன்ன, 'சங்கத் தமிழ்' (இங்கே) கூட்டங் கூட்டமாயிருந்து அனுபவிக்கும் தமிழ்; புலவர் கூட்டத்தால் போற்றப் பெறும் தமிழ் என்றும் கூறலாம்.

'முப்பதும் தப்பாமே' : விலையில்லாத இரத்தினங்களால் செய்த ஒற்றைவடமான மாலையிலே ஓர் இரத்தினமும் நழுவக் கூடாதல்லவா ? 'இங்கு இப்பரிசு உரைப்பார்' ஆய்ப்பாடியில் கோபிமார் கிருஷ்ணாநுபவத்தால் பெற்ற பாக்கியத்தை ஆண் டாள் அநுகாரத்தாலே பெற்றாள்; இவ்வளவு பிற்பட்ட காலத்தி லுள்ளவர்களும் இப்பாசுரங்களை ஓதி ஓதிப் பேறு பெறலாம்.

பிரபந்தம் இயற்றியது இன்னார் என்று பெயரைத் தெரிவிப் பதால் இதைத் திருநாமப் பாட்டு என்றும் கூறுவர்.





## மணிவண்ணனுக்கு
## ஒரு மணிமாலை

நோன்பு நோற்க விரும்புகிறவர்களைப் பொதுவாக அழைப்பது முதற் பாட்டு. இதில் நோன்புக்கு உரிய காலத்தைக் கொண்டாடுகிறார்கள்; நோன்பில் இறங்கும் அதிகாரிகளைக் கொண்டாடுகிறார்கள்; நோக்கத்தை நிறைவேறச் செய்யும் கண்ணபிரானையும் கொண்டாடுகிறார்கள்.

இப்படி முயலும் நோன்புக்கு உறுப்பான நியமங்களை—அதாவது செய்வன தவிர்வனவாகிய பிரவ்ருத்தி, நிவ்ருத்தி ரூபமான நியமங்களை—விளக்குவது இரண்டாம் பாசுரம்.

நோன்பினால் நாட்டுக்கு விளையும் பயனைக் குறிப்பிடுகிறது மூன்றாம் பாசுரம். 'எல்லாம் கண்ணன்தான்' என்று இருக்கும் ஆய்ச்சியர், நோன்பு நோற்க அனுமதி கொடுத்த நாட்டாருக்கு மழைபெய்து வாழ்வு உண்டாகும் என்கிறார்கள். அசூயையின்றி அனுமதியும் கொடுத்தவர்களல்லவா?—கண்கூடாகப் பலன் சித்திக்கும் என்கிறார்கள்.

நான்காம் பாசுரத்திலே மழைக்கடவுளை அழைத்து நாடெங்கும் மழைபெய்ய நியமிக்கிருர்கள். இத்தகைய பக்தைகள் சொல் வதைக்கண்ணனே தன்னைத்தாழவிட்டுக் கையாளாக நிறைவேற்றி வைக்கும்போது மழை முதலியவற்றின் அதிதேவதைகள் 'ஏவல்-கூவல்' பணிசெய்வார்கள் என்பது பக்தியின் தீர்ப்பு.

ஐந்தாம் பாட்டிலே நோன்புக்கு இடையூறுகளெல்லாம், எம் பெருமானைத் தொழுது பாடிச் சிந்திக்கவே கழிந்தொழியும் என்கிருர்கள். பகவதநுபவம் இடையூற்றுக்கு இடையூருகும் என்பது கருத்து.

பகவதநுபவத்தைப் பாகவத சமுதாயத்தோடு கூடி அநுபவிக்க வேண்டுமென்று இனிமேல் பத்துப் பாசுரங்களால் (ஆறும் பாசுரம் தொடங்கிப் பதினைந்து முடியுமளவும்) தம்மோடு ஒத்தவர்களை (பகவதநுபவ ஸஹகாரிகளை) எழுப்புகிருர்கள்.

நோன்பின் சுவடறியாதவளாய் புதிதாய் பகவத் சம்பந்தம் பெற்றிருப்பவளை எழுப்புகிருர்கள், ஆறும் பாசுரத்திலே. அடுத்த பாட்டில் சுவடறிந்தே மறந்து கிடப்பவளை எழுப்புகிருர்கள். எட்டாம் பாட்டில், கண்ணனுக்கு இனியவளை எழுப்புகிருர்கள். ஒன்பதாம் பாட்டிலே, 'கண்ணன் வந்தபோது வருகிருன்' என்று அநாதரித்திருந்தவளை எழுப்புகிருர்கள். பத்தாம் பாட்டிலே, கிருஷ்ண பக்தியிலே தலைவியாக உள்ள ஒருத்தியை எழுப்புகிருர்கள்.

அடுத்தப் பாட்டில், 'அவனைப் பெறுவதற்கு நானே தோற்பேன்? வேணுமானுல் அவன் தானே நோற்று வரட்டும்' என்று இருந்தவளை உணர்த்துகிருர்கள். பன்னிரண்டாம் பாட்டிலே, 'கண்ணனுக்கு ஒரு லட்சுமணன் என்று சொல்லுமாறு பிரியாது பணி செய்யும் செல்வனின் தங்கையாகிய செல்வியை எழுப்புகிருர்கள். தன் கண்ணழகின் பெருமையை நினைத்திருந்த 'மான்விழி' யாளை உணர்த்துகிருர்கள், பதின்மூன்றும் பாசுரத்திலே.

'எல்லாரையும் நானே வந்து எழுப்புகிறேன்' என்று சொல்லிவிட்டு அப்படிச் செய்யாமல் உறங்கும் ஒருத்தியை எழுப்புகிருர்கள், பதினான்காம் பாட்டிலே. முன்பு ஒரு 'மான்விழி' யாளைத் துயிலுணர்த்தியது போல், இப்போது ஒரு 'கிளிமொழி'

யானை எழுப்புகிறார்கள், பதினைந்தாம் பாசுரத்திலே. 'எல்லாப் பெண்களும் திரண்டு நம்வாசலுக்கு வரட்டும் காண்போம்' என்று கருதிப் படுத்திருந்தவள் இவள்.

இந்த விதமாகப் பத்துப் பாசுரங்களாலும், பல்வேறு மனப்பான்மையுள்ள பக்தைகளையும் எழுப்பிக்கொண்டு எல்லாரு மாகத் திரண்டு நந்தகோபர் திருமாளிகை வாசலை அடைகிறார் கள். இங்கே கோயில் காப்பானும் தோரண வாசல் காப்பானு மாகிய காவலரை எழுப்பி அவர் அனுமதிகொண்டு மாளிகைக் குள்ளே போகிறார்கள்.

பிறகு தாமும் கண்ணனுக்கு ஒரு காவலாக மாளிகையின் வெளிக்கட்டிலே படுத்திருந்த நந்தகோபரை எழுப்புகிறார்கள். உள்-கட்டிலே பிள்ளைக்குப் பக்கத்தில் படுத்திருந்த யசோதைப் பிராட்டியையும் எழுப்புகிறார்கள். பிறகு கண்ணனை எழுப்புகிறார் கள். 'இதற்கு முன்பே கண்ணனை எழுப்பாமல் முறை கேடாகச் செய்தோமே!' என்று பலதேவனையும் எழுப்புகிறார்கள். இப்படி நால்வரையும் எழுப்புவது, பதினேழாம் பாட்டிலே.

அடுத்தப் பாட்டிலே, புருஷாகாரமாக நப்பின்னையைமுன்னிட் டுக் கண்ணனை அடைவதே முறையென்று நப்பின்னைப் பிராட்டி யை எழுப்புகிறார்கள். அடுத்த இரண்டு பாசுரங்களிலும், அடைந்த வர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் 'நான் முன்னே, நான் முன்னே!' என்று ஒருவருக்கொருவர் முற்படுகின்ற நப் பின்னைப் பிராட்டி, கண்ணபிரான் என்ற இருவரையும் துயி லுணர்த்துகிறார்கள்.

அடுத்தப் பாசுரத்திலே, கண்ணனைத் துயிலுணர்த்தி, உன் குணத்துக்குத் தோற்று வந்தோம்' என்கிறார்கள். இருபத்திரண் டாம் பாசுரத்திலே. 'அபிமானம் குலைந்து உன் கடாட்சமே தாரக மாக வந்தோம்; எங்கள் எளிமை தீர மெல்ல மெல்லக் கடாட் சிக்க வேணும்' என்று கண்ணனிடம் விண்ணப்பஞ் செய்துகொள் கிறார்கள்.

இருபத்து மூன்றும் பாட்டிலே, சிங்காசனத்தில் ஆஸ்தானம் கொண்டருளி, வந்த காரியத்தை ஆராயவேண்டுமென்று பிரார்த் திக்கிறார்கள். இந்தப் பிரார்த்தனைக்கு இணங்க, நடையழகு

தோன்ற வந்துவடிவழகு காட்டிச்சீரிய சிங்காசனத்தில் வீற்றிருந்த பெருமானுக்குப் பல்லாண்டு கூறுகிருர்கள், அடுத்தப் பாட்டிலே.

இருபத்தைந்தாம் பாட்டிலே, தாங்கள் யாசித்து வந்ததை விண்ணப்பித்துக் கொள்கிருர்கள். நோன்புக்கு உரிய உபகரணங்கள் இவை இவை யென்று சொல்லி அபேட்சிக்கிருர்கள், இருபத்தாரும் பாசுரத்திலே. நோன்பு முடிந்தபின் பெறும் சம்மானத்தை விண்ணப்பித்துக் கொள்கிருர்கள் அடுத்தப் பாட்டிலே.

இருபத்தெட்டாம் பாசுரத்திலே, தங்கள் சிறுமையையும் அவன் பெருமையையும் சொல்லி, அவனோடு உள்ள உறவையும் சொல்லிக் கொண்டு, அபராத க்ஷமாபணம் செய்து கொள்கிருர்கள்—அதாவது பிழைகளைப் பொறுத்தருள வேண்டுகிருர்கள்.

இவர்களுடைய பரம உத்தேசம்—இப்பிரபந்தத்தின் பரம தாத்பரியம்—வெளிப்படுகிறது. இருபத்தொன்பதாம் பாசுரத்திலே.

**உற்றோம் ஆவோம்:**
**உனக்கேநாம் ஆட்செய்வோம்**
**மற்றைநம் காமங்கள்**
**மாற்று.**

என்று பிரார்த்தித்துத் தங்கள் மனோரதத்தைப் பூர்த்திசெய்து கொள்கிருர்கள்.

கோபிமார் பெற்ற இத்தகைய பகவதநுபவத்தை ஆண்டாளும் பெற்றுக் கொள்கிருர்கள் தன்பாவனை முதிர்ச்சியினாலே. அந்த நிலையில் ஆண்டாள் அருளிச் செய்த இந்தப் பிரபந்தத்தை ஓதி ஓதி உணர்ந்து இன்றும் என்றும் மக்கள் திருமாலின் திருவருள் பெற்று இன்புறுவர் என்னும் பலச்ருதிதான் இறுதிப் பாசுரம்.





கோதை பிறந்தஊர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடம் தோன்றும்ஊர்—நீதியால்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைக ளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோ னூர்.

பாதங்கள் தீர்க்கும் பரம னடிகாட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு,



திருவாடிப் பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே

திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே

பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே

பெருபூம்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே

ஒருநூற்று நாற்பத் தொருமூன்று ரைத்தாள் வாழியே

உயரரங்கற்கே கண்ணி யுகந்தளித்தாள் வாழியே

மருவாருந் திருமல்லி வளநாடி வாழியே

வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

# திருமலை - திருப்பதி தேவஸ்தான
# தமிழ் வெளியீடுகள்.

★ ★ ★

| | | ரூ. | பை |
|---|---|---|---|
| ஸ்ரீ வேங்கடேச ஸுப்ரபாதம் | ... | 0 | 12 |
| ஸ்ரீ வேங்கடேச ஸுப்ரபாதம் வியாக்கியானத்துடன் | ... | 0 | 50 |
| நித்யாநுஸந்தானம் | ... | 3 | 75 |
| செவ்வைச்சூடுவார் பாகவதம் (பாகம்-1) | ... | 4 | 00 |
| (பாகம்-2) | ... | 4 | 00 |
| திருவேங்கட ஸஹஸ்ரநாம அர்ச்சனை அஷ்டோத்திரத்துடன் | ... | 1 | 00 |
| செம்பொருள் (முமுட்சுப்படி) | ... | 1 | 50 |
| திருவேங்கடமுடையான் பாசுரங்கள் (வியாக்கியானத்துடன்) | ... | 2 | 25 |
| தசரூபகம் | ... | 3 | 50 |
| பாலசரிதம் | ... | 0 | 75 |
| ஸ்ரீராமஜெயத் திருப்புகழ் (Vol I&II) (Each) | ... | 3 | 00 |
| திருக்குறள் (பொருட்பால்) | ... | 7 | 50 |
| ,, (காமத்துப்பால்) | ... | 4 | 00 |
| சித்திர சுப்ரபாதம் (வண்ணப்படங்களுடன்) | ... | 8 | 00 |
| ஸ்ரீநிவாச கல்யாணம் (வண்ணப்படங்களுடன்) | ... | 11 | 50 |
| சர்வ தேவதா பூஜா விதானம் | ... | 0 | 70 |
| திருவாய்மொழி அகப்பொருள் பாசுரம் 1-ம் பாகம் | ... | 7 | 50 |
| 2-ம் பாகம் | ... | 10 | 50 |
| ஸித்தாந்த த்ரய சங்க்ரஹம் | ... | 0 | 75 |
| ஏழுமலை யாத்திரை | ... | 4 | 00 |
| குருபரம்பரை | ... | 3 | 00 |
| திருவேங்கட தலபுராணம் (அச்சில்) | ... | 2 | 00 |
| யாப்பொளி | ... | 3 | 50 |

| | | |
|---|---|---|
| ஸ்ரீ வேங்கடேஸ்வரர் | 28"×20" | 3–00 |
| | 20"×14" | 1–50 |
| | 15"×11" | 1–00 |
| | 11½"×7½" | 0–50 |
| | 7"×5" | 0–25 |
| ஸ்ரீ பத்மாவதி | 28"×20" | 3–00 |
| | 20"×14" | 1–50 |
| | 15"×11" | 1–00 |
| | 11½"×7½" | 0–50 |
| | 7"×5" | 0–25 |
| ஸ்ரீ வேங்கடேஸ்வரரும் ஸ்ரீ பத்மாவதி அம்மையாரும் | 20"×14" | 1–50 |
| ,, | 10"×7½" | 0–50 |
| ஸ்ரீ வேங்கடேஸ்வரர் (வஜ்ரகவசம்) | 20"×14" | 1–50 |
| ,, | 11½"×7½" | 0–50 |
| ஸ்ரீ வேங்கடேஸ்வரர் முத்தங்கியுடன் | 20"×14" | 1–50 |
| ஸ்ரீ மலையப்பா உபய நாஞ்சார்யுலுடன் | 20"×14" | 1–50 |

*போட்டோ ஆல்பம் ... 5 00*

*அஞ்சல் அட்டைப் படங்கள் (5 வகைகள்) ... 1 50*

*ஸ்ரீ வேங்கடேஸ்வரரும், ஸ்ரீ பத்மாவதியும் இணைந்த போட்டோ பிரதிகள் (ஒன்று) ... 1 00*

---

N. P. :—இதர சமஸ்கிருதம், தெலுங்கு, இங்கிலீஷ் புத்தகங்களும் கிடைக்கும். விவரங்களுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுக.

**MARKETING OFFICER,**
T. T. D. Press Compound,
Tirupati–517501.

NOV 1983



T. T. D. Press, Tirupati.—C. 2000.